# அருகம்புல்

''கடவுளே... இந்த நேரத்தில் எனக்கு இந்த நல்ல உணவைக் கொடுத்ததற்காக உங்களை வணங்குகின்றேன். எனக்கு தந்ததைப் போல் எல்லா உயிர்களுக்கும் நல்ல உணவை நீ தர வேண்டும் என்று பிரார்த்தனை செய்கிறேன்.

எல்லா ஞானத்திற்கும் அன்னமே ஆதாரம்.''

கையில் உணவோடு தீனதயாளன் கண்மூடி இருந்தான்.

மனம் குழைவாய் பேசிற்று. அவன் சோறு எடுத்து வாயில் போட்டுக் கொண்டான் பற்களால் உணவு அரைபட, உமிழ்நீர் அதிகம் சுரந்தது. உமிழ்நீரும், குழம்புச் சோறும் கலந்து வாய் நிறைய ஒரு சுகமான ருசியை ஏற்படுத்தின. அது கறிச்சோறு. ஆனாலும் கடவுளுக்கும், தந்தைக்கும் படைத்து விட்டு சாப்பிடுவதுதான் தீனதயாளனின் வழக்கம்.

ஒரு சாண் உயரத்திற்கு மேலே இருந்த எவர்சில்வர் அடுக்கு நிறைய சோறு இருந்தது. பைக்குள் இருந்த இன்னொரு வட்ட டிபன் பாக்ஸில் பொரித்த மீன் துண்டுகள் இருந்தன. மேலாக வைத்திருந்த கறித்துண்டை எடுத்து முன்பற்களால் கடித்து தீனதயாளன் மென்று உண்டான், இளம் ஆடு என்பது கடிக்கும்போதே தெரிந்து விட்டது, அதைத் தவிர அம்மாவுக்கு கறிச்சோறு பண்ணுகிற பக்குவம் பிரமாதமாக வந்திருக்கிறது. சில சமயம் கோழி குருமாவும், நெத்திலி மீன் துவையலும் என்று அம்மா சமைக்கும்போது

வீட்டை விட்டுப் போகவே மனம் வராது. எத்தனை வேலை இருந்தாலும் தள்ளிப் போட்டுக் கொண்டு ஆக்கி இறக்கியவுடன் சிறிதளவாவது சாதத்தில் பிசைந்து சாப்பிட்டால்தான் நன்றாக இருக்கும். அந்த சாதமும் பழைய சாதமாக நீர் ஊறியிருந்தால் இன்னும் நன்றாக இருக்கும்.

சாப்பாடு என்பது தீனதயாளனுக்கு பிடித்த விஷயம். அதுவும் அசைவ சாப்பாடு என்றால் மிகவும் உயிரான விஷயம். கடுமையாய் உழைக்கிறவன் நன்றாக சாப்பிட வேண்டும். நன்றாக சாப்பிட்டவன் கடுமையாக உழைக்க வேண்டும் என்ற கொள்கையை தீனதயாளனுக்கு அவன் அப்பாதான் சொல்லிக் கொடுத்தார்.

‘உழைக்காமல், ஓடி ஆடாமல் அள்ளி அள்ளி சாப்பிடாதே. அப்போது மேல் வயிறு பெருத்து விடும். மேல்வயிறு பெருத்துப் போனால் மூச்சு வாங்கும். மூச்சு வாங்கினால் மூளை சரியாக வேலை செய்யாது. மூளை சரியாக வேலை செய்யாவிட்டால் கோபம்தான் குதறிக் கொண்டு வரும். கோபம் குதறிக் கொண்டு வந்தால் உன்னுடைய நெருங்கிய உறவுகளை இழந்துவிட வாய்ப்பு இருக்கிறது. உறவுகளை இழந்துவிட்டு அப்புறம் என்ன வாழ்க்கை, எல்லோரோடும் கூடி வாழ்வதே மனிதனுடைய லட்சணம்.’

அப்பா கொல்லைப்புறத்தில் சாய்வுநாற்காலி போட்டு நிறைய விஷயங்கள் சொல்லிக் கொடுத்தார்.

அவன் அப்பாவின் கால்களை அழுத்திப் பிடித்து விடுவான், கணுக்கால்களை தேய்த்து விடுவான். விரல்களை இழுத்து விடுவான். உள்ளங்கால்களை ஒவ்வொரு இடமாக அழுத்தி உரமேற்றுவான். அப்படி உரமேற்றுவதும் தீனதயாளனுக்கு அப்பாதான் சொல்லிக் கொடுத்தார்.



‘‘டேய்... தலை நோவுதுடா. ரெண்டு கட்டை விரலையும் பிடிச்சுவிடு’’ என்று கால்களை நீட்டுவார்.

தலை விண்ணென்று வலிக்கிறபோது வெயில் நாள் உபாதை ஏற்பட்டபோது அதை நீக்குவதற்கு கட்டை விரலை அழுத்திவிடுவது நல்லது. குறிப்பாக. வலது கால் கட்டை விரலை அழுத்தி எடுத்து, இடதுகால் கட்டைவிரலை லேசாக தடவி விட்டால் போதும். தலைவலி பறந்தோடி விடும். வயிறு சரியில்லை. வாயு அதிகம் பிரிகிறது. மந்தமாக இருக்கிறது என்றால் உள்ளங்காலின் குழிவான பகுதியை அழுத்தாமல் மெல்ல விரல்களால் நீவி விடுவான். குடற்பகுதிக்கு அழுத்தமான வேகமான மசாஜ் தேவையில்லை. ஏனெனில், அதனால் வயிற்றுப்போக்கு வரக்கூடும். பின் காலில் அழுத்தி விட்டால் என்ன நடக்கும். பாதத்தின் முன்பகுதியில் எந்த இடத்தைத் தொட்டால் எந்த இடம் சரியாகும் என்றும் அவனுக்கு அப்பா சொல்லிக் கொடுத்திருந்தார்.

‘‘கிட்ட வா. இன்னொண்ணும் சொல்றேன். கணுக்கால் இருக்கே அதுக்கும் மனுஷாளுடைய அந்தரங்க உறுப்பக்கும் சம்பந்தம் இருக்கு. இந்தக் கணுக்காலை சுத்தி சுத்தி அழுத்திவிட்டா ஆண்குறியில் விறைப்பு நல்லாயிருக்கும். பெண்களை அப்படிச் செய்தோம்னா தேவைப்பட்ட அளவுக்கு நீர் ஊறும். கால் கட்டி உட்கார்ந்து மொத்த பாதத்தையும் பத்து தடவை முன்னும் பின்னுமா சுழட்டினோம்னா உடம்புல இருக்கிற அத்தனை பார்ட்டும் நல்லா வேலை செய்யும். பாதம்கறத நல்லா கவனிச்சுக்கணும். சுத்தமா கழுவணும், நம்ம வேலை அழுக்கு வேலை, கால் கழுவாத சாப்பிட உட்காரக் கூடாது. கால் கழுவாத வீட்டுக்குள்ள வரக்கூடாது. கால். கழுவாத தூங்கறவன் கேடுகெட்டவன். கால் கழுவறத பார்க்கணும்னா

இஸ்லாமியர்களைப் பார். அவங்க மசூதிக்கு போறதுக்கு முன்னாடி குழாய் அடியில் உட்கார்ந்து அங்குலம் அங்குலமா காலை கழுவுவாங்க. நாம வெறுமனே தண்ணிய ஊத்திக்கிட்டு வீட்டுக்குள்ள போயிடறோம். அது தப்பு. இது தூசான தேசம். ஷூ போடற பழக்கமில்லை. செருப்புதான் போடறோம். அதனால் காலை சுத்தம் பண்றது, காலுக்கு எண்ணெய் தடவி மசாஜ் பண்றது, ரொம்ப முக்கியம். அதெல்லாம் விட ரொம்ப முக்கியம், நகம் வெட்டறது. கால் நகத்தை பெருசா வளர்த்து வைக்கறவன் தரித்திரம் புடிச்சவன். அவன்கிட்ட காசு வராது. வந்தாலும் நிக்காது. கால் தாமரை பூ மாதிரி இருக்கணும்''

அப்பா சொல்வார். அப்பாவின் கால் தாமரைப் பூ மாதிரிதான் இருந்தது.

கால் கழுவுவது மட்டுமல்ல, மாலையில் எந்நேரமானாலும் குளித்துவிட வேண்டும் என்று அப்பா சொல்வார்.

''நாம வெயில்ல வேலை செய்யறவங்க. தூசுல நிக்கறவங்க. தலையிலேர்ந்து கால் வரைக்கும் சுண்ணாம்புக் காரையும், மண் தூசும், மர தூசும் இருக்கறவங்க அதுவும் தவிர செய்யற வேலையில சூடு ஜாஸ்தி. அந்த சூட்டை கரைக்கணும்னா சில்லுனு தண்ணீர் விட்டுக்கணும். என்னதான் குளிரா இருந்தாலும் தலைக்கு தண்ணி ஊத்திக்கிட்டு முகத்துக்கு சோப்பு போட்டு அலம்பிக்கிட்டு அப்புறம் சோறு தின்ன உட்காரு. அது சுகமே தனி. குளிக்காதவனுக்கு கோபம் சீக்கிரம் வரும். நல்ல தூக்கம் வராது. மெட்ராஸ்ல தண்ணியே கிடைக்கலை. எப்படி ரெண்டு வேளை குளிக்கறதுன்னு முட்டாள்தனமா கேட்காத. அலைஞ்சு திரிஞ்சு தண்ணி வாங்கி குளி. ஜெயிக்கணும்னா கஷ்டப்படணும். ஜெயிக்கறதுக்கு ஒரு வழி, ரெண்டு வேளை குளிக்கிறது.''



''பேச்சு மட்டும் குறைவில்லை. ஐயரு மாதிரி பேசறது. இத்த ஏன் வச்சுகிட்டு அழுவற.''

அம்மா டொக்கென்று பிராந்தி பாட்டிலை கொண்டு வந்து அப்பாவிற்கு எதிரேயுள்ள ஸ்டூலில் வைத்தாள்.

'இரண்டு வேளை குளிச்சா ஐயருன்னு அர்த்தமா? என்னடா இது. சுத்தமா இருக்கணும்னு சொல்றேன், சுத்தமா இருக்கறவன்தான் சந்தோஷமா இருக்க முடியும்கறேன். நான் பிராந்தி குடிக்கறது என் வேலைக்காக. எதுக்கு பிராந்தி குடிக்கறேன். நல்லா சாப்பிடணுங்கறதுக்காக. நான் தூசுல இருக்கறவன். நுரையீரல் முழுக்க மண் தூசுல மாட்டிக் கிட்டிருக்கும். நான் பிராந்தி குடிச்சா ஜலதோஷம் வராது, ரத்த ஓட்டம் நல்லாயிருக்கும். செரிமானத்துக்கு பிராந்தி குடிக்கறேன். குடிச்சுட்டு புரளவா. இல்லை. முதல்ல ஒரு பெக். தொட்டுக்கறதுக்கு காராமணி பயிறு. அடுத்தது ரெண்டாவது பெக்; உங்கம்மா ரெண்டு மூணு வெஞ்சனத் தோட குழம்புச் சோறு பரிமாறும். சோறு போட்டு ரசம் ஊத்தும். ரசம் சாப்பாடு பாதி சாப்பிடும்போதே கண்ணு சொக்கும். தட்டுலயே கை அலம்பி எழுந்து பின் பக்கம் போயிட்டு உப்பு போட்டு பல் தேய்ச்சுட்டு நல்லா வாய் கொப்பளிச்சுட்டு வந்து கட்டில்ல சாய்ஞ்சோம்னா தூக்கம் அப்படியே கவ்விக்கிட்டு போயிடும். ஒண்ணுமே தெரியாது; உலகமே தெரியாது.

காலையில் நாலரை அஞ்சு மணிக்கு விழிப்பு வரும். உட்கார்ந்தபடியே தண்ணியை எடுத்து வாய் கொப்பளிச் சுட்டு சிவபுராணம் சொல்வேன். எழுந்து பின்பக்கம் போயிட்டு வந்து டீ குடிக்கறது. நேத்து பீஸ் எதுனா பாக்கி இருந்தா ஒண்ணு ரெண்டு சாப்பிடறது. பேப்பர் படிக்கறது, குளிச்சுட்டு பத்து இட்லி, வெங்காயச் சட்னி, நேத்து மீன் குழம்பு பிரட்டி சாப்டுட்டு மறுபடியும் வாய் கொப்பளிச்

சுட்டு உள்ளங்கையில மட்டும் அந்த மணத்தோட வேலைக்கு போயிடறது.

வேலைக்கு போன இடத்துல ஆளுங்க உட்கார்ந்துட்டு இருப்பாங்க. அப்போ ஆளுங்களை அனுப்பி எல்லாருக்கும் டீ வாங்கிக் கொடுத்துட்டு நானும் குடிப்பேன். மத்தியானம் உங்கம்மா வேலைக்காரங்களுக்கு சோறும் கறியுமா அனுப்புவா. பத்து பேரா பன்னெண்டு பேரான்னு டெலிபோன் பண்ணி சொல்லிடுவேன். அள்ளி அள்ளி போட்டு அவங்க சாப்பிடறபோது வெறுமனே சோறு சாப்பிடாத கவுச்சி மட்டும் எடுத்துப்பேன். ஒரு இலையில ஆறு பீஸ் கறித்துண்டு, ஒரு மீன், பத்துப் பீஸ் கோழி அப்படின்னு சாப்பிடுவேன். மத்தியானம் ஹெவியா சாப்பிடக்கூடாது. சாப்பிட்டா தூக்கம் வரும். நாம தூங்கறத பார்த்தா வேலைக்காரங்க டபாய்ப்பாங்க.

''ஏம்ப்பா... இப்படி நாள் தவறாத கவுச்சி சாப்பிடறியே, தப்புன்னு சொல்றாங்களே.''

''நான் எங்கடா நாள் தவறாத சாப்பிடறேன். அமாவாசைக்கு சாப்பிடறது கிடையாது. சனிக்கிழமைக்கு சாப்பிடறது கிடையாது. கிருத்திகைக்கு நான் ஒரு பொழுது. சாப்பிடறது கிடையாது. முப்பது நாள்ல ஏழு நாள் போச்சுன்னா இருவத்தி மூணு நாள். நம்ம வேலைக்கு மாமிசம் சாப்பிடாம முடியாது. நமக்கென்ன வீட்டு பக்கத்துலயா வேலை கிடைக்கும். இல்லை, ஆபீஸ்ல போய் ஃபேனுக்கு கீழே உட்கார்ந்து வேலை செய்யறோமா. மழையோ வெயிலோ காத்தோ, புயலோ நம்ம வேலை நடந்தாகணுமில்லை, வேலைக்கு தகுந்த சாப்பாடு வேணுமில்லை.''

''ஆமா... பெரிய வேலை. கவர்னர் வேலை. இந்த வேலையை நீ செய்யறேன்னு தெரிஞ்சா உன்னைக் கல்யாணமே கட்டியிருக்க மாட்டேன்.''



''இப்போகூட உன்னை யாரு நிறுத்தறா. இறங்கி வாசப்படி தாண்டி போய்க்கிட்டே இரேன். நான் கூப்பிடவே மாட்டேனே.''

'நீ ஏன் கூப்பிடுவ. கூலி வேலை செய்யற பொம்பளை மூணு பேரை வச்சிகிட்டிருக்க, நான் தேவைதானா உனக்கு.''

அம்மா மறுபடியும் சிடுசிடுத்தாள்.

அப்பாவுக்கு கோபமே வராது. அம்மாவின் எரிச்சலைப் பார்த்து வாய்விட்டுச் சிரிப்பார்.

''உட்கார்ந்து பேசிட்டா போதும். உடனே வச்சிகிட்டிருக்கான்னு வாய்கூசாத பேசுவாளுங்க. அண்ணன் தங்கச்சியா பக்கத்துல போனா கூட யாருடி அது அப்படின்னு கேட்பாங்க. நிஜமாவே அண்ணன்தானா அப்படின்னு விசாரிப்பாங்க. தப்பு உன் பேர்ல இல்லைடி. நீ வளர்ந்த விதம் அப்படி. ஆம்பளை மேல சந்தேகப்பட்டே தீரணும்னு உங்கம்மா சொல்லிக் கொடுத்தா உனக்கு வேற எப்படி இருக்கும் புத்தி.''

''ஏம்ப்பா... நம்ம வேலை தப்பாப்பா. ரெண்டு மூணு தடவை அம்மா வந்து, கருமம் புடிச்ச வேலை அப்படின்னாங்க, எனக்கு மனசு கஷ்டமா இருந்துதுப்பா. கருமம் புடிச்ச வேலையா இது,''

''அடப்போடா, நாம என்ன விபசாரம் பண்றோமா விஷச் சாராயம் விக்கறோமா, போலி மருந்தா, பொய்க் கணக்கா? ஒண்ணுமில்லைடா. வீடு இடிக்கற வேலை நம்முது. இதை எவனும் சட்டுன்னு செய்யமாட்டான். செய்யறதுக்கு ஒரு தெம்பு வேணும். வாழ்ந்த வீட்டை இடிச்சா வளர முடியாதுன்னு சொல்லுவாங்க. நாம வளரலை? நான் குடிசையில் இருந்தேன்டா. இங்கு ஏழு குடித்தனக்காரங்களோடு கொல்லைப்புறத்தோட ஒரு வீடு

ராயப்பேட்டையில கிடைக்குமா. அஞ்சு பவுன் சங்கிலியோட வந்தா. இப்போ அறுவது பவுன் இருக்கு. அத சொல்வாளா வெளிய. அவ தங்கச்சிக்கு கல்யாணம், அப்பனுக்கு வைத்தியம், அண்ணன் புள்ள படிப்புன்னு கூசாத கேட்டு வாங்கிட்டுப் போனாளே. அது எதுவும் ஞாபகம் இருக்குமா, இருக்காது. எல்லாம் சௌகரியமா மறந்துடும். நான் வீடு இடிக்கறேன்றதுதான் புத்தியில் நிக்கும். ஏன், வெளிய இருக்கறவங்க அப்படிச் சொல்றாங்க. அவங்க ஏன் அப்படிச் சொல்றாங்க. நம்ம கிட்ட பத்து ரூபா இருந்தா பத்து ரூபாய்க்கு நாதியத்தவன் இப்படித்தான் பேசுவான். உலகம் பொறாமை மயம்.

போன வாரம் ஒண்ணுவிட்ட தம்பி மக கல்யாணத்துக்கு போனோம். கார்ல போய் இறங்கினோம். வெள்ளைச் சட்டை, வெள்ளை வேட்டி போட்டுக் கிட்டிருந்தோம். கல்யாணத்துக்கு போறமேன்னு உங்கம்மா கூடுதலா ரெண்டு நகை போட்டுக்கிட்டிருந்தா. நான் ரெண்டு மோதிரம் கூட போட்டேன். நீ வண்டி ஓட்டிக்கிட்டு வந்த நம்ம வீட்டுக்கு விளையாட வந்த போது சமைஞ்ச பொண்ணாச்சே. நாம பார்த்துதானே அம்மாகாரிக்கிட்ட சொன்னோம். நாமதானே உட்கார வச்சு மஞ்ச தடவினோம் அப்படீன்னு ரெண்டு வெள்ளி டபராசெட் கொடுத்தோம். அத்தினி பேருக்கும் பொறாமை. எங்க போய் சொல்றது இந்த கூத்தை. வெள்ளி டபராசெட் கொடுக்கற அளவுக்கு ஏழுமலை நாயக்கர் வளர்ந்துட்டானா, அப்படின்னு ஒரு ஆட்டம். ஏன்னா... அதுல பல பேர் என்னை கிழிஞ்ச வேட்டியோட பார்த்திருக்காங்க. தலையில முண்டாசு கட்டி அரை டிராயரோட வீடு இடிக்கற கடப்பாரையோட பார்த் திருக்காங்க. அவன் விளங்கமாட்டான்னு வாய் நிறைய சொல்லியிருக்காங்க. விளங்கிட்டேனே. அதனால் பொறாமை.



'என்னா... ஏழுமலை குடிக்கறானாமே' அப்படின்னு உங்கம்மாகிட்ட ஒரு நியாயஸ்தன் வந்து கேட்டான், அப்போ உங்க அம்மா எடுப்பா இருப்பா. நான் குடிக்கறத விட என் பொண்டாட்டி படுக்க வருவாளான்னுதான் குறி.''

''த்தே... என்னா பேசற நீ.''

''சும்மாயிரு. எனக்குத் தெரியாதது இந்த உலகத்துல எதுவும் கிடையாது.''

''தேவையில்லாத பேசின நாக்கை இழுத்துவச்சி அறுத்துடுவேன்.''

தீனதயாளனின் அம்மா உரக்கக் கத்தினாள்.

''நான் உன் பேர்லயாடி குத்தம் சொன்னேன். வந்த நாயைப் பத்தி சொல்றேன்.''

''சொல்லுப்பா... சொல்லுப்பா... என்னாச்சு?''

''ஆமா. குடிக்கறாரு. அதனால என்ன. எழுந்து போடா அப்படின்னு உங்கம்மா கத்தினா. 'உனக்கு நல்லது சொல்லணும். உனக்கு நல்லது செய்யணும் அப்படின்னு தான் வந்தேன்' அப்படின்னான். எனக்கு ஒரு மயிரும் செய்ய வேணாம் போடா அப்படின்னு துரத்திட்டா. வேணும்டாலுமே எங்கயோ போய் யாரையோ கெஞ்சி ரகசியமா கால் பாட்டில் பிராந்தி வாங்கி குடி அப்படின்னு வச்சிட்டு என் பக்கத்துல உட்கார்ந்து அழுதா. என்னை வேணாம்னு சொல்லு. நான் இப்பவே நிறுத்திடறேன். ஆனா, அவன் சொன்னாங்கறதுக்காக எங்கிட்ட வேணாம்னு சொல்லாத அப்படின்னு உங்கம்மாகிட்ட சொன்னேன். ஒரு பத்து நிமிஷம் பேசாத இருந்தா. தானா போய் டம்ளர் எடுத்தாந்து கரெக்டா ஊத்தி தண்ணி கலந்து குடிச்சு முடிக்கறதுக்குள்ள வேகவச்ச முட்டையும், கறியும் கொண்ணாந்து வச்சா.

என்னை குறை சொன்ன நாய் என்னாச்சு? கம்பெனியில திருட்டு கேஸ்ல மாட்டிக்கிச்சு. என்னா திருடினான் தெரியுமா. காப்பர்... தங்கம் மாதிரி விலை. திருடி என்னா பண்ணான் தெரியுமா? எங்கிட்ட அயிட்டம் இருக்குது வாங்கிக்கறியான்னு கேட்டான். என்னடான்னு பார்த்தேன். காப்பர் வாஷர். எவ்ளோ வச்சிருக்கேன்னு கேட்டேன். ஆயிரம்னான். எனக்கு வேணா இந்த சனியன் எடுத்துட்டுப் போய் எங்கேயாவது வித்துடுன்னேன். எங்க விக்கறது சொல்லுன்னான். நான்தான் இடம் சொன்னேன். அங்க போய் நின்னு பேரம் பேசியிருக்கான். பேரம் படியலை. கெட்ட வார்த்தை சொல்லி திரும்பி விட்டான். திருட்டுப் பொருள்னு தெரிஞ்சா வந்த விலைக்கு வித்துடறதுான் மரியாதை. அதான் திருடனுக்கு அழகு. அங்க போய் சொந்தப் பணத்துல போட்ட சரக்கு மாதிரி பேரம் பேசினா அவன் உடனே கம்பெனிக்கு போன் போட்டு சொல்லி இன்ன ஆளு, இத்தினி சரக்கு, எங்கிட்ட இத்தினி சாம்பிள் இருக்குன்னு சொல்லி காமிச்சு அவனை ராவோட ராவா போலீஸ்காரன் அமுக்கி எடுத்துட்டுப் போய் ஸ்டேஷன்ல போட்டு மெறி மெறின்னு மெறிச்சு கார்த்தால சீட்டை கிழிச்சு அனுப்பிட்டாங்க. அறுநூத்தி நாப்பது ரூபா அப்போ பெரிய காசு. நல்ல சம்பளம். நாலு பேரு நிம்மதியா சாப்பிடலாம். கடைசிவரைக்கும் பிச்சைதான் எடுத்தான். பொய்தான் சொன்னான். திருடத்தான் பண்ணான். அவன் திருட்டுப்புத்தி போகவேயில்லை. அவனுக்கு திருட்டு பாலசுந்தரம்னே பேர் ஆயிப் போச்சு.

நாம திருடலைடா. பொய் சொல்லலை. வீடு இடிக்கறது ஒரு வேலை. நாமளா போய் ஒரு வீட்டை இடிக்கலை. இந்த வீட்டை இடிச்சுத் தரமுடியுமான்னு கேட்கறாங்க. சரின்னு சொல்றோம். அதுக்கு கூலி பேசறோம். எதுக்கு இடிக்கறீங்க, கேட்டுக்கறோம். அவன் கட்டடம் கட்டறதுக்குன்னுவான். வெறும் தரிசா இருக்கறதுக்குன்னு யாராவது வீடு இடிப்பாங்களா. அடுத்தபடி கட்டறதுக்குத் தான் இடிப்பாங்க. இடிக்க வேண்டியது நம்ம வேலை. ஒரு சதுர அடிக்கு இவ்ளோ காசு அப்படின்னு செவுரு பார்த்து, செவுரு வலு பார்த்து, பரப்பளவு பார்த்து கணக்குப் போட்டு சொல்லணும். நாலு நாள்ல முடி, அஞ்சு நாள்ல முடின்னுவான். எத்தினி ஆள் வெச்சு, எத்தினி நாள்ல முடிக்கலாம்னு தெளிவு நமக்கு இருக்கணும். யார் யார் ஆளுன்னு ஒரு கணக்கு இருக்கணும். இடிக்கறா மாதிரி நடிக்கற ஆள் உண்டு. எல்லாம் இடிச்சு சீக்கிரம் வேலை செய்யற ஆள் உண்டு. இடிச்சா மட்டும் போறாது. ஜல்லியெல்லாம் லாரியில போட்டு பழைய நிலைப்படிய வேற இடத்துல போட்டு அதையும் காசு பண்ணலாம் இல்லை, அதை ஓரமா வச்சு நீயே வித்துக்கபான்னு இடிக்க சொல்றவன் கிட்ட விட்டுடலாம். எப்போ கட்டடம் கட்டறது ஜாஸ்தியா போச்சோ அப்போ ஜல்லிக்கு டிமாண்ட்டும் ஜாஸ்தியா இருக்கும். இடிச்ச கட்டடத்தை பத்து பொம்பளை வச்சி ஜல்லியா அடிச்சு ஒரு மாட்டு வண்டியில் அங்கங்க இறக்க சொல்லிட்டோம்னா அதுவும் காசு. இந்த வேலைக்கு எது அடிப்படை, எது அவசியம். உனக்குப் புரியுதா?''

''புரியுதுப்பா. லேபர்?''

''கரெக்ட். ஆளுங்க... கூலியாளுங்க சரியா இருந்தாதான் வீடு இடிக்கற வேலையை ஒழுங்கா வேகமா செய்ய முடியும். வேகமா செய்தாதான் மரியாதை. கூடுதல் காசு. அடுத்த வேலைக்கு அஸ்திவாரம். மொள்ள இடிச்சுக்கிட்டிருந்தோம்னா அவன் டென்ஷனாயிடுவான். ஐயையோ... இவங்கிட்ட வேலை கொடுக்காத

அப்படின்னுடுவான். அதனால நமக்குன்னு ஒரு பட்டாளம் வச்சுக்கணும்.

ஆம்பளைங்க வீடு இடிக்கணும். பொம்பளைங்க இடிச்சதை கொண்ணாந்து போட்டு ஜல்லி உடைக்கணும். உடம்பு கணுக்கணுவா வலிக்கும். பாறாங்கல்லும் சுத்தியலும் கொடுத்தா செங்கல்லைப் போட்டு ஒடிச்சு ஒடிச்சு செங்கல் ஜல்லி பண்ணிடுவாங்க. ஒரு நாள் முழுக்க உடைச்சா அவளுக்கு முப்பது ரூபா, நாப்பது ரூபா, சிலசமயம் அம்பது ரூபா கிடைக்கும். வெறும் அம்பது மட்டும்தானா, கூட கொடுத்தா புருஷன்காரன் புடுங்கிட்டு போய் கள்ளச் சாராயம் குடிப்பான். அதுக்கு பதிலா கறிச்சோறு போட்டுடு. மீன் கொழம்பு ஊத்து. மூணு தடவை டீ குடு. ரொம்ப வெயிலா இருந்தா மோர் ஊத்து. ரெண்டு கவுளி வெத்தலை. ஒரு பொட்டலம் பாக்கு, மூணு கட்டை புகையிலை வாங்கி தூக்கி எவ மடியிலயாவது போடு. அவளுங்க பங்கு போட்டுப்பாங்க. கையில முறுக்கி வாயில அதக்கிகிட்டு ணங்குணங்குனு அடிச்சு ஜல்லி பண்ணிடுவாங்க. மத்தியானம் சாப்டுட்டு ஒரு ஒன் அவர் படுத்து எழுந்தாங்கன்னா ராத்திரி எட்டு மணி வரைக்கும் உடைப்பாளுங்க. ராத்திரி சோறு மட்டும் அவங்களை பார்த்துக்க சொல்லிடறது. அதுங்களா எதுனா கதம்ப சோறோ பண்ணிக்கும். காலையில நாலு இட்லி, ஒரு மசால்வடை கையேந்தி பவன்லேர்ந்து கொண்டாந்து இறக்கிட வேண்டியது. மத்தியானம் நம்ம வீட்டு கறிச்சோறு கொடுத்துட வேண்டியது. எப்போடா நாய்க்கர் கூப்புடுவாருன்னு ஆவலா நிப்பாங்க.

வேலை இல்லியே, சோறு போடுன்னு வந்து வீட்டு வாசல்ல உட்கார்ந்துப்பாங்க. கொல்லைப்புறத்துல வீடு கட்ட என்னால முடியாதா. வந்தா இதுங்களை உட்காரவச்சு



சோறு போடறதுக்கு இடம் வேணுமேன்னு நான் இந்தக் கொல்லைப்புறத்தை வச்சுகிட்டிருக்கேன். வேலை இல்லைன்னு வச்சுக்க, எங்க போவாங்க. நாமதான சோறு போடணும். எங்கயோ தூத்துக்குடிலேர்ந்தும் வேம்பாரிலிருந்தும், இராமநாதபுரத்துலேர்ந்தும் பஞ்சம் பொழைக்க வந்த ஆளுங்க. வரும்போதே பெரிய தட்டி எடுத்துட்டு வருவாங்க. கட்டடம் கட்டற இடத்துல தட்டிய மேல போட்டு தட்டிசைடுல துணி மறைப்ப போட்டு ஆம்படையான், பொண்டாட்டியா குடித்தனம் பண்ணுவாங்க, ஒரு நிமிஷம் நினைச்சா பாவமா இருக்கும். சரியான மறைப்பு கூட இல்லாம படுக்கறாங்களேன்னு. ஆனா, அவங்களுக்கு அது பழகிப் போச்சு. யாராவது பார்த்தாலும் அதுங்க கண்டுக்கறதுல்ல. போடா சரிதான்னு அவங்க தொழிலை அவங்க பார்த்துக்கிட்டிருக்காங்க. அதனலதான் நான் முடிஞ்ச வரைக்கும் பெரிய கட்டடமா இருந்தா கூரை போட்டே கொடுத்துடறேன். கோரைப்பாயை வாங்கிப்போட்டுடறேன். நல்லா சாப்பிடட்டும்னு வீட்டுச் சாப்பாட்டை இறக்கிடறேன்.

ஒரு தடவை ஒரு கட்டடம் இடிக்கும்போது அஸ்திவாரம் முழுக்க கருங்கல், பாறைக்கல். அத்தையும் பேத்துப் போடு. இல்லைன்னா நான் எப்படி அஸ்திவாரம் நோண்டுவேன்னான்.

அந்த வீட்ல எப்படி அஸ்திவாரம் ஓடியிருக்குன்னு பார்த்து ஆழம் பார்த்து, அகலம் பார்த்து ராப்பகலா லைட் போட்டு நோண்டி போட்டோம். அவங்க வேலை செய்யறது பார்த்து என் கண்ல ஜலம் வந்துச்சி. ஆவின் நெய் வாங்கியாந்து எல்லார் சோத்துக்கு முன்னாடியும் நெய் சாப்பிடுங்கடான்னு போட்டேன். பால் குடிக்கச் சொன்னேன். ஒரு பேயம் பழம் ரெண்டு ரூபா. ஒரு சீப்பு

கொண்ணாந்து ஆளுக்கு ஒண்ணு கொடுத்தேன். பேரிச்சம்பழம் கொடுத்தேன்.

எத்தினி நாள்ல முடிப்பீங்கடான்னு கேட்டேன். ஆறு நாள்ல முடிச்சுடுவேன்னான். பத்து நாள் ஆவும்னு சொல்லி மொள்ள பண்ணுங்கடான்னேன். பாறை தூக்கறதுக்கு ஆள் நம்பாத நெம்பி நெம்பி போடச் சொல்லிட்டு மூங்கில் நட்டு சின்ன கிரேன் வச்சு சதக்சதக்குனு தூக்கி போட்டேன், பாறைக் குவியலை காமிச்சதும் கட்டட காண்ட்ராக்டர் ஆடிப் போயிட்டான். நான் எடுக்கலைடா, அவனுங்க எடுத்தானுங்க. என்னா சம்பளம் கொடுப்ப சொல்லு அப்படின்னேன். கூடவேணா கூலி கொடுத்துடறேன்னான். எனக்கு வேணாம். அந்த ஆளுங்களுக்கெல்லாம் வேட்டி சட்டை வாங்கிக் கொடுன்னேன்.

பதினாறு ரெடிமேட் சட்டை, பதினாறு ரெட்டை கரை வேட்டி, மேல்துண்டு, பதிமூணு புடவை, ரவிக்கை, பாவாடை, தேங்காய் எண்ணெய், லைஃப்பாய் சோப்பு அப்படின்னு நிறைய வாங்கிக் கொடுத்தான். எல்லாருக்கும் அத்தினி சந்தோஷம்.''

''ஆமா, அப்போதான் மகேஸ்வரியோட தொடுப்பு ஆயிப்போச்சு.''

அம்மா உரக்க கத்தினாள். அப்பா பதில் பேசாது இருந்தார். பிள்ளைக்கு முன் அதைத் தொடர்ந்து பேச வெட்கப்பட்டார். ஆனால், தீனதயாளனுக்கு அந்த மகேஸ்வரியைத் தெரியும்.

அம்மா அவளைப் பற்றி தாறுமாறாய் புகார் சொல்ல, இடிக்கும் இடத்திற்குப் போய் யார் அந்த மகேஸ்வரி என்று விசாரித்தான். கூட்டத்திற்கு நடுவேயிருந்து அந்த மகேஸ்வரி வந்து நின்றாள். அவன் முறைத்துப் பார்த்து விட்டு நகர்ந்தான்.



அவள் முன்னால வந்து நின்றாள்.

என்ன என்பது போல் திரும்பிப் பார்த்தான்.

''கோவமா இருந்தா அடிச்சுடு. ஆனா, பிரிச்சுடாத'' என்று உதடு நடுங்க சொன்னாள்.

அவன் யோசித்தான்.

''நான் அடிக்கறதுக்கும் வரலை, பிரிக்கறதுக்கும் வரலை. யாருன்னு பார்க்க வந்தேன்.''

''அம்மா ஏதாவது திட்டினாங்களா?''

''அப்படித்தான் திட்டுவாங்க. அவங்க வேலையை அவங்க பார்க்கட்டும். உன் வேலையை நீ பாரு. ஆனா, எங்கப்பாவை குடிக்க வச்சிடாத.''

''இல்லங்க. நாயக்கர் எப்போவாவதுதான் குடிக்கறாரு. அதுவும் ஒஸ்தி சரக்குதான் வாங்கி குடிக்கறாரு.''

அவள் பதில் சொன்னாள்.

அவளுக்கு கணவன் இருந்தான். அவன் மூலம் அவளுக்கு குழந்தையும் இருந்தது. ஆனால், அப்பாவோடு தொடர்பும் இருந்தது.

எங்கு இடிக்கற வேலை ஆரம்பித்தாலும் மகேஸ்வரி தான் கற்பூரம் ஏற்றுவாள். படையல் நடத்துவாள்.

நாயக்கரின் பொம்பளை என்கிற அந்தஸ்துதான் அவளை அந்த வேலை செய்ய வைத்தது. அதபோல மாலை ஆறு மணிக்கு வேலையை நிறுத்திவிட்டு போய்க் குளித்து விட்டு அங்கே கிடைக்கின்ற மரத்துண்டுகளைப் பொறுக்கி அடுப்பு மூட்டி பெரிய அலுமினியச்சட்டியில் அங்குள்ள எல்லோருக்கும் சோறு பொங்குவதும் அவள் வேலை.

மகேஸ்வரியைவிட மகேஸ்வரிக்கு கணவனாக இருக்கிறவனை பார்க்கும் பொழுதுதான் ஆச்சரியமாக இருக்கும்.

ஒரு வார்த்தை யாரோடும் பேசமாட்டான். வெற்றிலைப் பாக்கு போட்டு, புகையிலையை மடக்கி வாயில் அதக்கிக் கொண்டு, இடுப்புத்துணியை இறுக்கி கட்டிக் கொண்டு வெறும் மார்போடு சுவர் இடிக்கத் துவங்கினால் முடிக்காமல் தரை தொடாமல் விலக மாட்டான்.

மகேஸ்வரியும், அவனும் சண்டை போட்டும் பார்த்ததில்லை. தனக்குப் பிறந்த ஒரு குழந்தையை அவன் பள்ளிக்கூடம் அனுப்பினான். அவன் படிப்புக்கு நாயக்கர் உதவவேண்டுமென்று எதிர்பார்த்தான். குழந்தையினுடைய புத்தகத்தை வாங்கிப் புரட்டி பொம்மை பார்த்துக் கொண்டிருப்பான். மிகக் கவனமாக பையில் வைத்து மழைபடாமல் அதன் மீது பிளாஸ்டிக் ஷீட் பொருத்தி பாதுகாப்பாக வைத்திருப்பான்.

எங்கே இடிக்கிற வேலை இருந்தாலும் ராயப் பேட்டையிலுள்ள அந்த பள்ளிக்கூடத்திற்கு குழந்தையை கொண்டுபோய் விட்டுவிட்டு ஒன்பது மணிக்குத்தான் கடப்பாரை தூக்குவான். பிற்பகல் ஒரு மணிக்குத் தரையிறங்கி சைக்கிள் எடுத்துக் கொண்டு போய் குழந்தையை கூட்டிக் கொண்டு இடிக்கிற இடத்திற்கு வந்து விடுவான். பிறகுதான் சாப்பிடுவான். கூலியாட்கள் இருக்கின்ற அந்த ஒரு பகுதியில் வெள்ளைச் சட்டையும், கவுனும் போட்டு அந்தப் பெண்குழந்தை சுற்றிக் கொண்டிருப்பது வித்தியாசமாக இருக்கும்.

விளக்கு வெளிச்சமும், மின்விசிறியும். அந்தக் குழந்தைக்காக ஏற்பாடு செய்திருப்பான். குழந்தையின் கட்டிலுக்குக் கீழே கொசுவத்திச் சுருள் ஏற்றி வைப்பான். அந்தக் குழந்தைக்காகவே மனைவியை அவன் விட்டு விட்டான் என்று பலர் சொல்வதுண்டு. ஆனால், அதற்கான வருத்தமோ, கோபமோ அவன் காண்பித்ததில்லை.



அந்தக் குழந்தைக்கு ஒரு முறை ஜுரம் வந்தபோது அப்பா தனியார் ஆஸ்பத்திரியில் சேர்த்து ஆறாயிரம் ரூபாய் செலவு செய்தார். அவன் அந்த நாட்களில் வேலைக்கு வரவில்லை. ஆஸ்பத்திரி வாசலிலேயே இருந்தான்.

அப்பா இடிப்பதற்கான எஸ்டிமேட் செய்யும்போது மூன்று பேரை அருகே வைத்துக் கொள்வார். அதில் ஒருவனாக மகேஸ்வரியின் புருஷனும் இருந்தான். எப்படி இடிப்பது என்பது பற்றி ஆலோசனை சொல்வான். அப்படி ஆலோசனை சொல்லும்போது அப்பாவிடம் நேரே பேசாமல் அடுத்த ஆளிடம் பேசி தன் அபிப்பிராயத்தை தெரிவிப்பான்.

ஏழுமலை நாயக்கரோடு அவன் சண்டை போடவும் இல்லை, அதேசமயம் சமாதானமாகவும் இல்லை. அது ஒரு விசித்திர உறவு. மனைவியை அடமானம் வைத்துவிட்டு மகளை வளர்க்கின்ற உறவு. ஆனால், தீனதயாளனின் அப்பாவான ஏழுமலை நாய்க்கர் இதுபற்றியெல்லாம் கவலைப்படவேயில்லை. தனக்கு என்ன வேண்டுமோ அதை எடுத்துக் கொள்ளுகின்ற துணிச்சல், தீவிரம், திறமை, திண்மை அவரிடம் இருந்தது.

''என்னா... கூலி வேலை செய்யற பொம்பளைய உங்க வீட்டுக்காரரு வச்சிகிட்டிருக்காராமே.''

அம்மாவிடம் வந்து பலர் சொல்லி தூபம் போட்டு தூண்டிவிட்டபோது வீடு அரைநாள் ரணகளப்பட்டது.

''அப்படித்தான். ஆமாம் வச்சிகிட்டிருக்கேன். உன்னைத் தொந்தரவு பண்ண வேணாம்னுதான் சின்ன வயசு பொம்பளையா சேர்த்துக்கிட்டிருக்கேன். வீணா கத்தாத. அவங்க சொன்னாங்கன்னு ஆத்திரப்படாத. நீ எப்படி கத்தற, எப்போ கத்தற அப்படின்னு பார்க்கறதுக்காகவே

சொல்றாங்க. நீயும் நானும் ஒத்துமையா இருக்கறது புடிக்காத சொல்றாங்க. ஏழுமலை நாயக்கர் தீபாவளிக்கு தீபாவளி பொண்டாட்டிக்கு நகை வாங்கித் தரானே அப்படின்னு பொறாமைல சொல்றாங்க. அங்க மாட்டிக்கிட்டு சாவாத சண்டைப் போட்ட இந்த வீடு ரணகளமாகும்.நான் உன்னை அடிப்பேன். நீ அழுவ. போலீஸ் கேஸ் ஆகும்னு பார்க்கறாங்க. காலையில வந்த சொல்லிட்டுப் போனாங்க இல்ல. சாயந்திரம் மறுபடியும் எதனா சொல்லிக்கிட்டு வருவாங்க பாரு. அவன் பொண்டாட்டி வருவா பாரு. என்னம்மா எப்படியிருக்கன்னு கேட்பா பாரு. இன்னிக்கு வெளிய போகப்போறதில்லை. வீட்லயே இருக்கப் போறேன். நீ கார் எடுத்துட்டுப் போடா. போறபோது வாசப்படியில் இருக்கற என் செருப்பை எடுத்து கட்டில் கீழே போட்டுட்டுப் போ. எந்த நாய் உள்ள வந்து என்னா பேசுதுன்னு பார்க்கலாம்.''

அவர் காத்துக் கொண்டிருந்தார்.

வம்பு செய்கிற வாளை மீன் வசமாக வந்து மாட்டியது.

''நீதானே சொன்ன எங்கிட்ட உன் பொண்டாட்டி உனக்குத் தெரியாத தள்ளுசீட்டு புடிக்கறா. இத்தனைக்கும் ஆயிரம் ரூபா சீட்டு. நாப்பத்தாறு பேரை சேர்த்துட்டா. புடவை வியாபாரம் பண்றா. எல்லாம் சொன்னியே. எனக்குத் தெரியாத அவ எதுவுமே பண்ணலைம்மா. எங்கிட்ட கேட்டுக்கிட்டுதான் பண்றா. ஏன் இப்படி வந்து வம்பு பண்ற. ஏன், ஆம்படையான் பொண்டாட்டிக்கு நடுவுல சண்டை மூட்டி விடற. இந்த மாதிரி செய்து செய்துதானே சோத்துக்கு இல்லாத போயிட்டீங்க. இன்னும் தொடர்ந்து இதையே செய்துகிட்டிருந்தாக்க வீட்ல அநியாய சாவு நடக்கும்மா. கை கால் போயிடும். எந்நேரமும்



ஆஸ்பத்திரிலேயே இருக்கும்படி ஆயிடும். ஊசி போட்டு மாளாது. இந்த மாதிரி ஆம்படையான் பொண்டாட்டிக்கு நடுவுல பேசறது விட்டுட்டுப் போ.''

அந்தப் பெண் திகைத்துத் திரும்ப, ''ஏய்... இங்க வா, போன வருஷம் ஒண்ணுவிட்ட தங்கச்சிக்கு கல்யாணம்னு ஐந்நூறு ரூபா வாங்கிட்டுப் போனியே, அதை எப்போ திருப்பித் தரதா உத்தேசம். வட்டியும் முதலுமா ஆயிரத்து நானூற்று நாற்பது ரூபா ஆச்சு. நாளைக்கு காலையில கொண்ணாந்து கொடுத்துடு.''

'இப்படி தடுக்குனு கேட்டா நான் என்ன செய்வேன்.'

அந்தப் பெண் பிள்ளை விழித்தது.

''முடியாதுன்னா வேலை செய்யற இடத்துக்கு வா. நானும் மகேஸ்வரியும் உட்கார்ந்து பேசிக்கிட்டிருப்போம். விசிறதுக்கு ஆள் இல்லை. வந்து விசிறி விடு. போடி ஆக்கங்கெட்ட நாயே'' என்று கெட்ட வார்த்தையால் இரைந்துவிட்டு அனுப்பினார்.

அம்மா இதற்குப் பிறகு முகம் தூக்கி நிற்க, மறுநாள் காலை 'மோகனாம்பாள் மியூட்சுவல் ஃபண்ட்' என்று போர்டு மாட்டினார்.

ஐயரை வரவழைத்து மாலை போட்டு குங்குமமிட்டு பூஜை செய்தார்.

அம்மாவிடம் ஒரு கவர் நீட்டினார்.

''சிட்டுக் கம்பெனி ஆரம்பிக்கலாம். ஆனா, இப்படி பதிவு பண்ணாத இருக்கக்கூடாது. ஒரு மாசத்துக்கு ஆயிரம்னு நாப்பது பேர்கிட்ட வாங்கற கணக்கு வழக்கு சரியா இருக்கணும். யாராவது புகார் கொடுத்தா மாட்டிப்ப. உன் பேர்ல கம்பெனியை ரிஜிஸ்டர் பண்ணிட்டேன். பில்லு புக்கெல்லாம் இன்னும் ரெண்டு மூணு நாள்ல வந்துடும்.

இந்தப் பக்கம் வரவு எழுது, இந்தப் பக்கம் வட்டி எழுது'' என்று நோட்டு பிரித்து சொல்லிக் கொடுத்தார்.

அம்மா சமையலறையில் உட்கார்ந்து அழத் துவங்கினாள். அவர் போய் சமாதானம் செய்தார்.

இருபத்தோரு வயது தீனதயாளன் பேப்பர் படித்துக் கொண்டே சகலமும் பார்த்துக் கொண்டிருந்தான்.

''வண்டி எடுறா வேலைக்குப் போகலாம்.''

வண்டி எடுத்தான்.

அன்றைக்கே மந்தவெளி குடிசை வாரிய குடியிருப்பில் மகேஸ்வரியை அவள் கணவனோடு குடி வைத்தார்.

''எத்தனை நாள் குடிசையில் இருப்ப நீ'' என்றார்.

மகேஸ்வரி, ஏழுமலையின் ஆள் என்று அங்கும் எல்லோருக்கும் தெரிந்தது.

ஏதாவது ஒரு நாள் மகேஸ்வரியின் கணவன் அப்பாவை முறைத்துக் கொண்டு காயப்படுத்தி விடுவானோ என்ற பயம் வயிற்றில் இருந்தது. ஆனால், அது தவறு என்பதும் ஒரு முறை புரிந்து போயிற்று.

குவித்து வைத்திருந்த கற்குவியலில் ஏறி அவன் தாண்ட முயற்சிக்கற பொழுது சுவரில் பாதி இடிந்த கல்விலகி மேலே சரிய, கால் வைத்த இடத்தை ஊன்ற முடியாமல் தடுமாற, மேலே விழுந்த கல்லோடு புரண்டு கற்குவியலின் மீது உருண்டு தீனதயாளன் கீழே விழுந்தான். இரண்டு மூன்று கூலியாட்கள் உரக்கக் குரல் கொடுக்க, மகேஸ்வரியின் கணவன் பாய்ந்து ஓடி வந்தான். மேலேயிருந்த கல்லை தூக்கிப் புரட்டிப் போட்டான். அவனைத் தூக்காமல் இரண்டு ஆட்கள் வைத்து அலக்காக படுத்தபடியே எடுத்து வந்து தரையில் போட்டான்.



'வலிக்குதா... வலிக்குதா' என்று எல்லா இடங்களையும் தொட்டுப் பார்த்தான்.

எங்கேயும் வலிக்கவில்லை என்றதும், ஆட்டோ பிடித்து ஆஸ்பத்திரிக்கு எடுத்துக் கொண்டு போனான்.

உதடு, மார்பு, கழுத்து, முதுகு, கால் எல்லா இடங்களிலும் தேய்ந்து சிராய்த்துப் போயிருந்தது.

அடிதடி கேஸா, ரகளையா என்று கேட்க, கட்டட வேலையில் விழுந்து விட்டான் என்று சொன்னார்கள்,

நம்ப மறுத்து போலீஸுக்கு சொல்லிற்று. போலீஸ் வந்து விசாரிக்க, அவனுக்கு சரியாகப் பேசத் தெரியவில்லை. மெல்ல மெல்ல வலி அதிகரிக்க, தீனதயாளனாலும் பேச முடியவில்லை. போலீஸ் வந்து விசாரிக்கிறேன் என்று ரத்தினத்தை பளீர் பளீர் என்று அடித்தார்கள். எழுந்திருக்க முடியாமல் விழித்து, ''அவரை அடிக்காதீங்கய்யா. விழுந்துட்டோம்னு சொல்றோமில்லை'' என்று தீனதயாளன் அதட்டிய பிறகுதான் அவர்கள் அடங்கினார்கள்

முதுகிலும், தொடையிலும் பட்டையாய் ஒரு லத்தி அடி விழுந்து விட்டிருந்தது.

''ஏன் என்னை இங்க கொண்டு வந்த. பிரைவேட் ஆஸ்பத்திரிக்கு போயிருக்கலாமில்ல. உன்னை யார் கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரச் சொன்னது'' என்று மறுபடியும் அவனைப் பார்த்து கத்தினான்.

''அப்போ போயிடுங்க.'' டாக்டர்கள் அவர்களை துரத்தினார்கள்.

மறுபடியும் ஆட்டோ ஏறி தனியார் மருத்துவ மனைக்கு வந்து கட்டுப் போட்டுக் கொண்டிருந்தபோது அப்பா வந்து விட்டார்.

''அடிபட்டா எனக்கு சொல்றதில்லையா. உன்னை எவன்டா தூக்கிட்டு ஆஸ்பத்திரிக்கு வரச் சொன்னா.''

அவரும் பளீரென்று ரத்தினத்தை அடித்தார்.

தீனதயாளனுக்கு கோபம் வந்தது.

''என்னப்பா. அந்தாள்தான் உதவி செய்தான். அவனை போய் அடிச்சுக்கிட்டிருக்கியே'' என்று சீறினான்

''இந்த ஆஸ்பத்திரிலேர்ந்து அந்த ஆஸ்பத்திரி. அந்த ஆஸ்பத்திரிலேர்ந்து இந்த ஆஸ்பத்திரிக்கும் அலை வாங்களா. டாக்டர் கையில் கால்ல விழுந்து உன்னை சேர்க்க வேண்டிய இடத்துல சேர்த்திருக்க வேணாம். எடுத்தவுடனே இங்க வந்திருக்க வேணாம். முட்டாள்.''

மாலையில் நல்ல ஜுரம் வந்து விட்டது. உள் பக்கத் தலையில் தசை கிழிந்திருப்பதாகச்சொல்லி கட்டு போட்டு விட்டார்கள். காலைத் தூக்கி உயரே மாட்டி விட்டார்கள்.

கும்பலாய் வேலையாட்கள் வந்து பார்த்துவிட்டு. அழுதுவிட்டுப் போனார்கள்.

''டேய், அவன் இடிக்கணும்னு கத்தறாண்டா. என்னா பண்ண சொல்ற. நிறுத்திடட்டுமா.''

''வேணாம்ப்பா. எனக்கு ரத்தினத்தை விட்டுட்டுப் போ. நீ போய் நின்னு வேலையை கவனி.''

அவன் மிகச் சாதாரணமாய் ரத்தினத்தை தன் பக்கம் இழுத்துக் கொண்டான்.

ரத்தினம் சிறிதுகூட இந்தப் பக்கம் அந்தப் பக்கம் நகராமல் ஒரு குழந்தையை கவனிப்பது போல் கவனித்துக் கொண்டான்

நடக்க முடியாமல் கால் இருப்பதால் படுக்கை யிலேயே எல்லாக் கடன்களும் முடிக்க வேண்டியதாயிற்று. ரத்தினம் கூசாமல் செய்தான். முகம் துடைத்துவிட்டான். பல் தேய்த்து விட்டான். தலை வாரி நெற்றியில் திருநீறு பூசுவான்.



ஆறு நாட்களுக்குப் பிறகு கட்டு பிரித்து விட்டார்கள். அறுநூறு ரூபாய்க்கு அலுமினியத் தடி ஒன்றைக் கொடுத்து, 'இதை ஊன்றிக் கொண்டுதான் சிறிது நாட்கள் நடக்க வேண்டும். கனம் போட்டால் மறுபடியும் உள்ளுக்குள்ளே இருக்கின்ற தசை கிழிந்துவிடும்' என்று சொன்னார்கள். கைத்தடி விற்பதற்காகச் சொன்னார்களா, இல்லை உண்மை யிலேயே தசை கிழிந்துவிடுமா என்று தெரியவில்லை. அப்படி ஊன்றி நடப்பது சந்தோஷமாக இருந்தது, 'சட்டி சுட்டதடா கைவிட்டதடா.' என்று சிவாஜி கணேசனைப் போல அவன் நடந்து பாட, ''சே... அதெல்லாம் பாடாதீங்க'' என்று ரத்தினம் அதட்டினான்.

''தலைக்கு வந்தது தலைப்பாகையோட போயிருக்கு. உருண்ட கல்லு தலையில் விழுந்திருந்தா இழுத்து வெளிய போட்டிருக்க முடியுமா, மண்ணா போயிருப்பீங்க.''

அன்போடு கடிந்து கொண்டான்.

''யாரோ நல்லபடியா வாழ்ந்த வீடு. ஐயோ நம்ம வீட்டை இடிக்கறாங்களேன்னு அவங்க மனசுல நொந்துருப் பாங்க. அந்த நோவுதான் நம்ம தலைக்கு வருது. நாம எய்யிற அம்புதான். நமக்கும் இதுக்கும் சம்பந்தமில்லைதான். இருந்தாலும் நாமதானே கடப்பாரை தூக்கி ணங்குணங்குனு இடிக்கணும். அத்தனை இடியும் அவன் நெஞ்சுல விழுமில்லை. அவன் பதறுவான் இல்ல. அந்தப் பதறல் சும்மா போகுமா. மேல விழுமில்லை. இப்போ மேல விழுந்துடுச்சு.''

ரத்தினம் பேசுவதை தீனதயாளன் வியப்போடு கேட்டான்.

ரத்தினம் பார்ப்பதற்கு கறுத்த அடர்ந்த தலை முடியுடன், லேசான தாடியுடன், கச்சலான உடம்புடன், சற்று

தூக்கிய முகவாயுடன் நீளமான மெல்லிய கைகளுடன், வேகமான நடையுடன் இருந்தான்.

சில சமயம் பேசும்போது அவன் வயது நாற்பத்தி யிரண்டோ, நாற்பத்தி ஐந்தோ சரியாகத் தெரியவில்லை என்று சொன்னான்.

தீனதயாளனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''உன்னைப் பார்த்தா அப்படித் தெரியலையே.''

''எல்லாரும் அப்படித்தான் சொல்றாங்க. எதனாலயோ என் மூஞ்சியில வயசு தெரியலை. நான் ஜாஸ்தி விளையாடாம இருந்ததும் காரணமா இருக்கலாம்.''

''ஜாஸ்தி விளையாடலைன்னா...''

''எனக்கென்னமோ பொம்பளை சகவாசம் பிடிக்கலை.''

''ஏன். அப்போ எதுக்கு கல்யாணம் பண்ணிக்கிட்ட.''

''எங்கம்மா வற்புறுத்தி கல்யாணம் பண்ணி வச்சிடுச்சி. என் பொண்டாட்டி வற்புறுத்தி குழந்தை பெக்க வச்சிடிச்சு. மத்தபடி பொண்ணுங்கள தொடறதோ, பேசறதோ, அதுங்களோட சல்லாபமா இருக்கறதோ எனக்குப் பிடிக்கலை.''

தீனதயாளன் ஆச்சரியமாகப் பார்த்தான்.

''அது தப்புன்னு நினைக்கறியா.''

''தப்பு சரின்றது அவங்க அவங்க மனப்பான்மை. எனக்குப் பிடிக்கலை. எனக்கு அதுல ருசி வரலை.''

''உனக்கு எதுலதான் ருசி. வேற எதனா தப்பு காரியமா. ஓரினச்சேர்க்கையா.''

''இல்லை தம்பி. அந்த மாதிரி மகாபாபங்களெல்லாம் நான் பண்ணமாட்டேன். கொஞ்சம் சூட்சும விஷயங்க ளோட பேசுவேன்.''



''என்னது?''

''பேய், பிசாசுங்களோட எனக்கு தொடர்பு உண்டு.''

''எப்படி?''

''நான் கூப்பிட்டா அது வந்து நிக்கும்.''

''நல்லாயிருக்கு கதை. ஊரை ஏமாத்தற வித்தை.''

''அப்படித்தான் எல்லாரும் நினைக்கறாங்க.''

''அதுங்களோட தொடர்பு ஏற்படுத்தி என்ன செய்வ?''

''உட்கார்ந்து பேசிக்கிட்டிருப்பேன். இந்த உலகம் ஒண்ணுமில்லை. ஒரு குப்பை. இங்க பொம்பளை, ஆம்பளை சேர்றதும், துட்டு சம்பாதிக்கறதும், வாய்க்கு ருசியா அலையறதும், விதம் விதமா உடுத்திக்கறதும் எல்லாமே முட்டாள்தனம். சாவுன்னு ஒண்ணு கண்ணு முன்னாடி நிக்கறபோது உடுத்தறதுக்கும் திங்கறதுக்கும் அலையறது சிரிப்பாதான் இருக்கு.''

''அவங்ககிட்டதான் இதை கத்துக்கிட்டியா.''

''ஆமாம். தெள்ளத் தெளிவா சொல்லித் தராங்க.''

''தினம் பார்ப்பியா.''

''இல்லை. எப்போதாவது தோணிச்சுன்னா தனியா இருக்கிறபோது அதுங்களா வந்து சீண்டும். சீண்டி எதுனா பேசேன் அப்படின்னும். நானும் எனக்கு பிரச்சினை இருந்தா கேட்டுப்பேன். மகேஸ்வரியை ஏழுமலை நாயக்கர் கூப்பிடறாரு, என்னா பண்ணட்டும்னு கேட்டேன். அனுப்பிடு, நீ வச்சிகிட்டு என்னா பண்ணப் போற. வைக்கப் போர் மேல உட்கார்ந்த நாய் மாதிரி நீயும் சாப்பிடாத மத்தவங்களுக்கும் கொடுக்காத என்னாத்துக்கு. உனக்குன்னு ஒரு பொண்ணு இருக்கு. அதை வளர்த்துக்கோ. நாயகர்கிட்ட அதுக்கு காசை கேள். அப்படின்னுதான் சொல்லிச்சு.''

''யார் சொன்னா?''

''கோட்டைப்பக்கம் ஒரு பங்களா இடிச்சோமே அந்த இடத்துல இருக்கற அம்மா சொல்லிச்சு.''

வீட்டின் கொல்லைப்புறத்தில் சாய்வுநாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்த தீனதயாளன் நிமிர்ந்து உட்கார்ந்தான். அலுமினியத் தடியை ஊன்றிக் கொண்டான்.

''நிஜமாத்தான் சொல்றியா, இல்லை என்னை எதுனா கலாட்டா பண்றதுக்கு சொல்றியா.''

''நான் அப்படியெல்லாம் ஒருத்தரையும் செய்ய மாட்டேன். இதுவரைக்கும் செய்ததுமில்லை. இனி செய்யப் போறதும் இல்லை. என்னமோ உங்கிட்ட சொல்லணும்னு தோணிச்சு. அதனால் சொல்றேன்.''

''அந்தப் பேயை எனக்கு காட்டுவியா.''

''அந்தம்மா வரது இல்லை, விட்டுட்டாங்க.''

''அப்போ யார் வர்றது?''

''யார்னா வருவாங்க. யாருன்னு கேட்பேன். அவங்கள பத்தி சொல்வாங்க.''

''எனக்கு காட்ட முடியுமா?''

''அவங்களுக்கு இஷ்டம் இருக்கணுமே.''

''என்னா இஷ்டம்?''

''உன்னோட என்னாத்துக்கு பேச்சுன்னு சொல்லிட்டா அவங்க வரமாட்டாங்க.''

''உன்கூட பேசறதுக்கு இஷ்டமா?''

''ஆமாம். நான் சந்தேகப்படறதில்லை. கலவரப் படுத்தறதில்லை. கோவப்படுத்தறதில்லை.''

''எதுனா பலி கேட்பாங்களா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லைப்பா. இந்தக் கல்லு புரட்டி அங்க வை. இந்தக் கிளையை ஒடிச்சு எடு. அந்த



இடத்துல ஒரு கன்னு நடு, ஒருத்தன் அங்க சாப்பாடு இல்லாம தவிக்கறான். போய் பத்து ரூபா கொடுத்துட்டு, சாப்பாடு வாங்கிக் கொடு அப்படின்னு சொல்வாங்க.''

''என்னால நம்பவே முடியலை ரத்தினம்.''

ரத்தினம் குத்திட்டு உட்கார்ந்து கொண்டான். அவனுக்கு லேசாக முதுகு காட்டி எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''இந்த வீட்டுக்கு வரமாட்டேன்றாங்க.''

''ஏன்?''

''தெரியலை. நான் மொள்ள கூப்ட்டேன். ஐயா நம்ப மாட்டேன்றாரு. நம்ப வைக்க என்ன பண்ணணும்னு கேட்டதுக்கு, இங்க வராத வேலை செய்யற இடத்துக்கு வா அப்படின்னு சொன்னாங்க.''

''இப்போ போவோமா.''

''வேணாம். நாளை காலையில போவோம். இடம் முழுக்க ஒரே கல்லா இருக்கு. நீ எப்படி இதை ஊனிகிட்டு வரமுடியும்.''

''நீ மகேஸ்வரியை விட்டுட்டதே அகனாலதானா.''

''ஆமாம்.''

''மகேஸ்வரிக்கு இது தெரியுமா?''

''எது?''

''நீ பேயோட பேசறது.''

''என்னாத்துக்கு அதுங்கிட்ட போய் சொல்லணும். அது பயந்துடும்.''

''என்னான்னு சொல்லி எங்கப்பாக்கு தாரைவாத்த.''

''நான் ஒண்ணும் தாரை வாக்கலை. உங்கப்பா ஆசைப்பட்டு அதுங்கிட்ட லொள்ளு பண்ணாரு. அது

என்னா பண்றதுன்னு தெரியாம தவிச்சுது. என்னைப் பார்த்து மிரண்டது. உங்கப்பாகிட்ட போகணும்னு ஆசை. உங்கப்பா டக்குடக்குனு துட்டு வெட்டறாரா, அதை வாங்கிக்கணும்னு ஒரு அலாதி, அப்போ கோட்டைப் பக்கம் இருக்கற மிலிட்டரி பங்களால கையில இருக்கற கடப்பாரை கீழ போட்டுட்டு யார்னா உதவி செய்யுங்களேன், யார்னா உதவி செய்யுங்களேன்னு சுத்தி சத்தி வந்தேன். போய் திரும்பினவுடனே தடுக்குனு என்னைவிட பெரிய உயரமா, கொஞ்சம் அகலமா ஒரு அம்மா நின்னுகிட்டிருந்தாங்க. யாருங்கன்னு கேட்டேன். கூப்பிட்டியே, அதான் வந்திருக்கேன்னாங்க. உடம்பு சிலீர்னு ஆயிப்போச்சு. இதுக்கு முன்னாடி நாலஞ்சுபேர் பார்திருக்கேன். ஆனா இவ்வளவு பழமையான ஆளை பார்த்ததில்லை.

ரொம்ப காலமா இருக்கீங்களான்னு கேட்டேன். உனக்கு என்னாடா. உனக்கு வேணுங்கறத கேளு, அப்படின்னாங்க. என் பொண்டாட்டிய ஏழுமலை நாயக்கர் ஆசைப்படறாரு. என்னா செய்யறதுன்னு கேட்டேன். தாரை வார்த்துடறா. வைக்கப் போர் மேல நாய் மாதிரி உட்கார்ந்திருக்கேன்னு அப்போதான் சொன்னாங்க. சரின்னு சொல்லிட்டு நேரா மகேஸ்வரி வேலை செய்ற இடத்துக்குப் போனேன். அங்க மகேஸ்வரி இல்லை. நாயக்கரோட கார்ல போயிடுச்சின்னாங்க.

அவர்வேற ஒரு பங்களாக்கு கூட்டிட்டுப் போயிட்டாரு. அந்த பங்களா இடிக்கவேயில்லை. அப்போதான் காலி பண்ணியிருந்தாங்க. காலி பண்ணி கொடுத்த இடத்துல கதவைப் பூட்டிக்கிட்டு மகேஸ்வரியோட சந்தோஷமா இருந்திருக்காரு. ரெண்டு பேரும் கார்ல திரும்பவந்தபோது அதுங்க மூஞ்சியைப் பார்த்தவுடனே தெரிஞ்சுப் போச்சு. நல்லா சாப்டாருன்னு. தனியா வா அப்படின்னு கூப்ட்டேன்.



அது பயந்துகிட்டே வந்துது. நாயக்கர் ஏய்... ஏய்ன்னாரு. ஒண்ணுமில்லைப்பா. இதோ வந்துடறேன்னு சொல்லி 'நீ நாயக்கரோடயே இருந்துக்க, எனக்கு ஒண்ணும் கஷ்டமில்லை. ஆனா, நம்ம குழந்தைய பிரியமா வளர்க்கணும். அதனால நாயக்கர் மூலமா குழந்தை பெத்துக்கிட்டா நம்ம குழந்தைய அசிங்கப்படுத்திருவாங்க. அதனால ஆபரேஷன் பண்ணிக்கோ'ன்னேன். உட்கார்ந்து அழுதது. காலப்புடிச்சு கதறுச்சு. அதனால என்ன. எனக்கொண்ணும் இதுல ஆசை இல்லை. உனக்கு ஆசைப்பட்ட இடத்துல போயேன் அப்படின்னு சொல்லிட்டு நேரா எந்த இடத்துல அந்த அம்மாள பார்த்தேனோ அங்க வந்த நின்னு இடிக்க ஆரம்பிச்சேன்.

கட்டடம் ரொம்ப பழசு. அங்கங்க விரிசல் விட்டிருக்கு. மேல நின்னு இடிக்கறதுன்றதே பயமான காரியமா இருந்தது. சாரம் கட்டி சாரத்துல நின்னு இடிக்கறா மாதிரி ஏற்பாடு செய்திருந்தாங்க. இருந்தாலும் சாரத்துல நின்னா இடி பலமா விழலை. நான் செவுத்துமேல ஏறி நின்னு நாலு தடவை குத்தினேன். மொத்த செவுரும் அப்படியே சரியுது. பதினைஞ்சு அடி கீழ விழணும். பதினைஞ்சு அடி குதிச்சுடலாம். கைகால்ல லேசா அடியோட போயிடும். ஆனா, மேல கட்டை விழுந்துதுன்னா, கல்லு விழுந்துதுன்னா நசுங்கி செத்துடுவோமே. அம்மான்னு கத்தினேன். ஏத்தி யாரோ சாரத்துல நிக்க வச்சுட்டாங்க. நாப்பதடி நீள செவுரு உட்கார்ந்துடுச்சு. நான் சாரத்துலதான் நின்னுகிட்டிருந்தேன்னு சொன்னேன். இறங்கி கடப்பாரையோட சுத்தி வந்தேன். மறுபடியும் அதே மூலை. அங்க நின்னுகிட்டிருந்தது. பாத்து இடிக்கக்கூடாதா அப்படின்னு சொல்லிச்சு. நல்லவேளை காப்பாத்தினீங் கம்மா. நான் என்ன செய்யணும் அப்படின்னு கேட்டேன். வேம்பும், அரசும் நட்டு உரம் போட்டு மூடிடு. நான்

வளர்த்துக்கறேன்னு சொல்லிச்சு. ஏம்மா குடியிருக்கறதுக்கு இடம் தேடறியான்னு கேட்டேன்.

ஆமாண்டா... எத்தனை நாள் செவுத்துல உட்கார்ந்து கிட்டிருக்கறது. மரத்துல உட்கார்ந்தா நல்லாயிருக்கும் அப்படின்னுச்சு. நாம சுவத்தை இடிச்சதுனால அதுக்கு தங்கறதுக்கு இடமில்லை. நான் அங்க இங்கன்னு தேடிக்கிட்டு வந்து நல்லா மார் உயரம் வேப்பஞ்செடியும், நான் எக்கி கை நீட்டினா எத்தனை உயரமோ அந்த உயரம் அரசஞ்செடியும் தண்ணி ஊத்தி, தண்ணி ஊத்தி அப்படியே சுத்தி புடிங்கியாந்து இங்க நட்ட குழியில எருபோட்டு வச்சேன். மறுநாள் எல்லா இலையும் விழுந்துடுச்சு. ஒரு துளிர்கூட நிக்கலை. சரி, நாம செய்த வேலை சரியில்லை. இன்னும் சின்ன கன்றை நட்டாதான் சரியா வரும்னு சொல்லிட்டு வேற இடத்துல குழி தோண்டினேன். அப்போ அம்மா செவுத்து மேல நின்னுகிட்டிருந்தாங்க. வேணாம்டா. அது பொழைக்சுக்கும். விட்டுடுன்னாங்க.

பசுஞ்சாணம் கலந்த தண்ணியை ஊத்துன்னாங்க, நான் வெளிய போகும்போது பசுமாட்டுக்கு காத்திருந்து சாணம் பொறுக்கிட்டு வந்து அதை தண்ணில கரைச்சு தினம் விடுவேன். பத்து நாள் காய்ஞ்ச குச்சி மாதிரி இருந்தது பச்சுனு பிடிச்சுக்கிச்சு. சின்ன சின்னதா வேப்பிலை. அப்புறம் பார்த்தா உச்சியில ரெண்டு கொழுந்து அரச இலை. ஒரு மாசம் பொறுத்து பார்த்தா ரெண்டும் பக்கத்துல ஆணும், பொண்ணுமா, மாப்பிள்ளையும் பெண்ணுமா ரொம்ப அழகா இருந்தது. நல்ல கூரான கத்தி எடுத்து ரெண்டுத்துக்கும் பட்டை சீவி, பட்டை சீவின இடத்துல சாணத்தை வச்சு இருந்தது. கட்டினேன். அதுக்கு மேல துணியை போட்டு சுத்தினேன். யாருக்கும் தெரியாத ஓலை முடைஞ்சு தட்டி பண்ணி செவுரு ஓரமா சாத்தி வச்சேன். நாயக்கர் கூட என்னான்னு கேட்டாரு. நான் படுக்கற இடம்னேன்.



இடிச்சு முடிச்சு ரப்பீஷெல்லாம் வாரி எடுத்துட்டுப் போறபோது பார்த்தாரு. ஓனரோட அவங்க வீட்டு பொம்பளைங்க ரெண்டு பேர் வந்தாங்க. அரசமரத்தைப் பார்த்துட்டு 'என்னா அது தட்டியைப் போட்டு மறைச் சுருக்கியே, என்னா அது?' அப்படின்னாங்க. தட்டியை எடுக்கச் சொன்னாங்க. நான் தொலைவில் நின்னு பார்த்துக்கிட்டிருந்தேன். தட்டியை எடுத்து ஆணும், பொண்ணுமா மரத்தை கட்டியிருக்கறத பார்த்தவுடன், 'ஐயோ! இது இருக்கக் கூடாதே. இது இருக்கக் கூடாதே' அப்படின்னு கத்தினாங்க. வெட்டிடுன்னாரு நிலத்து ஓனரு. நாயக்கர் உள்ள பூந்து, வெட்டக் கூடாதுங்க. எப்படி வளர்ந்ததுன்னு தெரியலை. எது வளர்த்ததுன்னு தெரியலை. கட்டிப் போட்டு வேற வச்சிருக்கு. இதை வெட்டினா பெரிய பாவம் வரும்னாரு. இது இப்படியிருந்தா கோவில் கட்டணும்னு சொல்வாங்களே அப்படின்னு அந்த வீட்டுக்காரம்மா கூவிச்சு.

ஆமாம், சுவர் ஓரமாதானம்மா. இருக்கு. சின்னதா கோவில் கட்டிடுவோம். பிள்ளையார் வச்சிடுவோம். அஞ்சு தலை நாகத்தோட நாகாத்தம்மன் வச்சிடுவோம் அப்படின்னு சொன்னாங்க. அவங்க யார் யாரோ ஐயரை கூப்பிட்டு வந்து காமிச்சாங்க. எல்லாரும் இதை வெட்ட வேணாம் பச்சுனு இருக்கு. வெட்டினா பாபம்னு சொல்லிட்டாங்க. ஒரு வருஷம் மேல வச்சுப் பாருங்க. உங்களுக்கு எதுனா தொந்தரவு இருந்தா அப்போ வேற வழி பண்ணிக்கலாம்னு ஒரு வாஸ்து ஜோசியர் சொன்னார். இப்போ என்ன பண்றதுன்னு கேட்டபோது சுத்தி மேடை கட்டறதுக்கு ஆர்டர் வந்தது. நாயக்கர் என்னை கட்டச் சொன்னாரு. ரப்பீஷ் எடுத்துக்கிட்டுப் போக மிச்சம் இருந்த கல்லெல்லாம் எடுத்து கல்லையும் உள்ள வச்சு அதைச் சுத்தி செங்கல் அடுக்கி ரெண்டடி உயரத்துக்கு மேடை போட்டு,

மேடை மேல சிமெண்ட் பால் போட்டு தண்ணி ஊத்தறதுக்கு நாலா பக்கமும் வழி பண்ணி, அங்க ஊத்தற தண்ணி வேருக்கு போகும்படியா வழி பண்ணி செய்த கொடுத்தேன். கட்டின மூணாவது நாள் காஞ்சி இறுகற நேரம் அம்மாவும் ஐயாவும் வந்தாங்க. நாயக்கர் வெளிய போயிருந்தாரு. நாகம் வச்ச அம்மன் சிலையைப் பார்த்தோம். பிள்ளையார் சிலையும் பார்த்தோம். மகாபலி புரம் போய் வாங்கிட்டு வந்தோம். அம்மன் சிலை வேணாம். பிள்ளையார் சிலையே வாங்கிப்போம்னு ஆயிரத்து நானூறு ரூபா கொடுத்து பிள்ளையார் சிலை வாங்கினோம். வண்டியில் வச்சிடலாம்னு சொல்லி வண்டியில் எடுத்துட்டு வந்தோம். திறந்து பார்த்தா நாகர்சிலையா இருக்கு. அப்புறம் அவனுக்கு போன் பண்ணி கேட்டோம். கேட்டதுக்கு 'பிள்ளையார் சிலை இங்கதான் இருக்கு. தப்பா நாகம் இருக்கற அம்மன் சிலையை அனுப்பிட்டோம்' அப்படின்னான். என்னா பண்றதுன்னு தெரியாம வாஸ்து ஜோசியரை கேட்டோம். அப்படித்தான் உத்தரவு ஆகியிருக்கு. அதுபடியே இருக்கட்டுமே அப்படின்னுட்டான். இதை இங்க வச்சுடறியா அப்படின்னு கேட்டாங்க. நானே மறுபடியும் கல்லு வாங்கிட்டு வந்து. சிமெண்ட் வாங்கிட்டு வந்து மேடைக்கு மேல ஒரு மேடை கட்டி சின்னதா ஜல்லி நொறுக்கிப் போட்டு கருங்கல் ஜல்லி கலவையும் சேர்த்து இறுக்கமாக கான்கிரீட் தயார் பண்ணி சிலையை நிக்கவச்சு சுத்தி கலவையை அடிச்சு சிமெண்ட்டுப் பால் ஊத்தி ஊத்தி அடிச்சு பூச்சு வேலை செய்தேன். நெத்தியில சந்தன குங்குமம் வச்சு கதம்ப மாலை போட்டேன். அதை அவங்க ரெண்டு பேரும் ரொம்ப நேரம் பார்த்துக்கிட்டே இருந்தாங்க.

நல்லாயிப்போச்சு இந்த இடம். கட்டடம் கட்டலாம்னு தோணுது அப்படின்னாங்க. நறுக்குனு





நாகத்துல போட்ட மாலை நழுவி கீழ விழுந்தது. அதை நல்ல சகுனமா எடுத்துக்கிட்டாங்க. நீ இங்கதானப்பா இருக்க, உனக்கு எதுனா தப்பா தெரிஞ்சுதாப்பா அப்படின்னு கேட்டாங்க. ஒண்ணும் தப்பா தெரியலைம்மா. அது நல்ல வங்க இருக்கற இடம். நல்லவங்க தங்கறதுக்கு நாம வசதியும் பண்ணி கொடுத்துட்டோம். இனிமே அவங்க இங்க காவலா இருப்பாங்களே தவிர உங்களுக்கு ஒண்ணும் கெடுதல் பண்ணமாட்டாங்கன்னு சொன்னேன்.

அது எப்படிப்பா அவ்ளோ திடமா சொல்ற அப்படின்னாங்க. எனக்கு தோணினதை சொல்றேனம்மா அப்படின்னேன். உனக்கு எழுத படிக்க தெரியுமான்னு கேட்டாங்க. தெரியாதும்மா அப்படின்னேன். சரி, தப்புன்னு இங்கிலீஷ்ல எழுதி அதை உருட்டி குலுக்கி போட்டு அம்மனுக்கு முன்னாடி வச்சு என்னை எடுக்கச் சொன்னாங்க, நான் எடுத்தேன். சரின்னு வந்திருக்குன்னு சொன்னாங்க. ரொம்ப சந்தோஷம். இது போறும் அப்படின்னாங்க.

மூணே மாசம்... கடக்கால் நோண்டி ஜிகுஜிகுன்னு கட்டடம் உயர்ந்து போச்சு. ஆபீஸ் கட்டடம். நான் அப்பப்போ வந்து நிப்பேன். அந்தம்மா மேடையில் உட்கார்ந்திருக்கும். நான் போய் மேடைக்குக் கீழ உட்கார்ந்துப்பேன். வேலை செய்யற கிழவன் இறங்கி வந்து கேட்டான். ஏனப்பா, நீ இடிக்கற ஆள்தானேன்னு. ஆமாங்கன்னேன். இந்த இடத்தை நீதான் இடிச்சியான்னு கேட்டாங்க. ஆமாம் நாயக்கர் ஆள்தான் நான். ஏழுமலை நாயக்கர் இடிச்சாருன்னு சொன்னேன். இங்க காத்து கருப்பு இருக்கான்னு கேட்டான். இங்க காத்தும் கிடையாது. கருப்பும் கிடையாது. நல்ல சமாசாரம் இருக்கு. பயப்படாத வேலை செய்யுங்கன்னு சொன்னேன்.

இல்லை. ரெண்டு மூணு பொம்பளைங்க பயந்துட்டாங்க. அழுத்துது. திணறுது. யாரோ கைவைக்

கிறாங்கன்னு சொன்னாங்க. அதான் உன்னை கேட்கறேன் அப்படின்னு காதோரம் கேட்டான். ஒரு கற்பூரம் கொளுத்திட்டு வேலையை ஆரம்பியேன் அப்படின்னேன். அவன் போய் அந்தம்மாகிட்ட சொல்லியிருக்கான்.

ஏன் கற்பூரம், தினம் வெத்தலைப் பாக்கு, ஒரு டசன் வாழைப்பழம், ரெண்டு தேங்காய், கொஞ்சம் கல்கண்டு வச்சு அந்தக் கிழவனையே வச்சு பூஜை பண்ண சொன்னாங்க. நம்மாளுக்கு குஷால் ஆயிப்போச்சு. ஆபீஸ்காரங்களுக்கும் குஷால், எல்லாரும் காலங்காலையில் வந்தவுடனே வாயில கல்கண்டை போட்டுக்கிட்டு வேலை செய்ய ஆரம்பிக்கறாங்க. அந்தக் கிழவன் வெத்தலைப் பாக்கு எடுத்துக்கறான். பொண்ணுங்க எல்லாரும் வாழைப் பழம் சாப்பிடுதுங்க. பெரியவங்க எல்லாரும் தேங்காய் சில்லு எடுத்துக்கறாங்க. கல்கண்டும் தேங்காய் சில்லும் வாயில அதக்கிகிட்டு வேலை செய்தா அதும் சுகமே தனி அப்படின்னு ஆரம்பிச்சிட்டாங்க. ஆளுங்க ஜாஸ்தியாற போது இன்னும் ரெண்டு தேங்காய்க்கு துட்டு கொடுங்கம்மான்னு கேட்டு வாங்கி கூட துட்டு போட்டு அஞ்சு தேங்காய் அம்பது பழம் படைச்சாங்க தினம்.

கட்டடம் கட்டறாரே, அவர் பொண்டாட்டி கனவுல ஏதோ பட்டிருக்கு. இந்த இடம் அடிக்கடி என் கனவுல வருது. நான் வந்து அங்க நிக்கறேன். ஆனா, யாரும் இருக்க மாட்டேன்றாங்க, வெறும் வெட்ட வெளியே பார்த்து இங்க வேலை செய்யறவங்க கும்பிடறாங்க. நாலு தடவை இந்தக் கனவு வந்திடுச்சி. இந்த இடத்துல ஏதோ விசேஷம் இருக்கு அப்படின்னு சுத்தி வந்தாங்க. அன்னிக்கு சர்க்கரைப் பொங்கல். மறுநாள் பால்பாயசம், அடுத்த நாள் கொத்துக் கடலை சுண்டல், வெள்ளிக்கிழமை வெள்ளிக்கிழமை ஒரு தவலை சோறு, நெய், பருப்பு, சின்னத் தடங்கல் இல்ல. ஒரு



ஆள் சறுக்கலை, ஒரு கீறல் ஒருத்தருக்கும் விழலை. ஒரு மாடிக் கட்டடம். அட்டைப் பொட்டியில செய்து தூக்கி வைக்கறா மாதிரி சரசரன்னு வந்திடுச்சு. முன்னாடி நிலம் வாங்கினவங்க அஸ்திவாரம் போட்டவங்க, கட்டடம் கட்டினவங்க, எல்லாரும் சிமெண்டுக்கும். இரும்புக்கும் முழி பிதுங்கறபோது இவருக்கு எல்லாம் தங்கு தடை யில்லாம கிடைச்சுது.

அதே வேப்பமரத்துக்கு கீழ நாலு பக்கமும் சித்திரத் தூணா போட்டு, மேல தளம் போட்டு விமானம் எழுப்பி பரமேஸ்வரி அம்மன்னு பேரு எழுதி விமானத்துல ரொம்ப அழகா ஒரு பொம்மை பண்ணி வச்சிட்டாங்க. அன்னைய தேதிக்கு அந்தக் கோயிலுக்கு வராத ஆள் இல்லை போயேன், பெரிய பெரிய சாமியாரெல்லாம் வந்துட்டுப் போயிட்டாங்க. இப்போ போனாலும் அந்த அம்மாளை பார்க்கலாம். எல்லாம் உன்னாலதாண்டா அப்படின்னு சொல்லும் அந்தம்மா. நான் என்னம்மா பண்ணேன் அப்படின்னு கேட்டேன். நீ மட்டும் வேம்பும், அரசும். அறுத்து சீவி கட்டாத இருந்தீன்னா இது நடந்திருக்காது. எனக்கு நிக்க நிழல் கிடைச்சிருக்காது. இன்னும் அந்த அம்மாளுக்குப் பிறகு நான் பல இடங்கள்ல பல பேரை பார்த்துட்டேன்.'

''இந்த மாதிரி சொல்ற ஆளை என்னால நம்ப முடியலையே.''

தீனதயாளன் வியப்போடு நோக்கினான்.

''நம்பினா, நம்பு, நம்பாட்டி போன்னுதான் அம்மா சொல்றாங்க.''

''அம்மா சொல்றாங்களா நீ சொல்றியா. சும்மா ஏண்டா எதுனா ஆளை கவுக்கற மாதிரி பொய் சொல்றீங்க.''

செல்லமாய் அவனை அடிப்பதற்கு கை ஓங்கினான். சட்டென்று இறக்க முடியாமல் அங்கேயே நின்றது. பக்கத்தில் யாரோ கட்டை வைத்தாற் போல எத்தனை அழுத்தினாலும் கீழே இறக்க முடியவில்லை. பிடித்துக் கொண்டது போல ஒரு மெல்லிய வலி உண்டாயிற்று. அழுத்தியும் இறக்க முடியவில்லை.

''டேய் ரத்னம்...'' என்று கூவ, ரத்தினம் எகிறி நின்று கை தொட்டான்.

கை சரக்கென்று கீழே இறங்கியது.

''கொஞ்சம் கோவமாயிட்டாங்க. என்னா இது அடிதடி விளையாட்டு, என் பேரை சொல்லி அப்படின்றாங்க.''

தீனதயாளன் சற்று கலவரத்தோடு ரத்தினத்தைப் பார்த்தான். அவனால் நம்பவும் முடியவில்லை. நம்பாமல் இருக்கவும் முடியவில்லை.

கை நின்றது எதனால். பிடிப்பா. கோல் ஊன்றி, கோல் ஊன்றி அங்கு அழுத்தம் ஏற்பட்டுவிட்டதா. ஏதேனும் சற்று தசை பிசகி கையை இறக்க முடியாமல் விறைப்பாகி விட்டதா அல்லது யாராவது பிடித்து நிறுத்திவிட்டார்களா.

அவன் பயந்தான். மல்லாக்க சாய்ந்தான்.

அவனுக்குத் தெரிந்தவளே எனக்கும் உன்னைக் காட்டு என்று உள்ளுக்குள் பேசத் துவங்கினான்.

''அந்தக் கோயிலுக்கு போகலாமாடா.''

சட்டென்று எழுந்து நின்றான்.

அப்பா கார் எடுத்துப் போயிருந்தார். அனேகமாக மகேஸ்வரி வீட்டிற்குத்தான் அப்பா போயிருக்க வேண்டும்.

அவர்கள் ஆட்டோ ஏறினார்கள். முன்பக்கம் முழுவதும் கறுப்புக் கண்ணாடியில் பளபளத்துக் கொண்டிருந்த கட்டடத்தின் காம்பௌண்டிற்குள் நுழைந்தார்கள்.



கட்டடத்தின் கீழ் தளத்தில் கம்பெனி திறந்து வேலை செய்ய ஆரம்பித்து விட்டது. மற்ற தளத்தில் ஒயரிங் வேலையும். பார்ட்டிஷியன் வேலையும் செய்து கொண்டிருந்தார்கள்.

வேம்பும் அரசும் சேர்ந்த இடத்தில் போய் தீனதயாளனும் ரத்தினமும் நின்றார்கள்.

''அடடே... எதுவும் வாங்கியாராத போயிட்டமே'' என்று தீனதயாளன் பரிதவித்தான்.

''போய் வாங்கிட்டு வந்துடலாமா.'' வெளியே நடந்தான்.

''வேணாம் வா.''

போனவனை மடக்கிக் கூப்பிட்டு மேடை மீது ரத்தினம் உட்காரச் சொன்னார்.

''இந்தம்மா அதெல்லாம் ஏதிர்பார்க்கறதில்லை'' என்று சொல்ல, தீனதயாளன் வியப்போடு பார்த்தான்.

''அந்தம்மா என்ன எதிர்பார்க்கும்'' என்று கேட்டான்.

''அமைதியா உட்காருவதைதான் அந்தம்மா எதிர்பார்க்கும். நிறைய கோயில்ல நிறைய பெண் தெய்வங்கள் பேசாம உட்கார்ந்திருக்கிறவனை கிட்ட நெருங்கி உத்துப் பார்த்து ஆசீர்வாதம் பண்ணும். இத மக்களுக்கு தெரியறதே இல்லை. எல்லா கோவில்லயும் போன எதுனா ஒரு மூலை பார்த்து மௌனமா, யாரோடயும் பேசாத உட்காரணும். இது தெரிஞ்சவன் ரொம்ப குறைச்சல். கொஞ்சம்கூட கூச்சல் போடாத இருக்கற ஆளை தெய்வம் பக்கத்துல வந்து நின்னு பார்க்கும்.''

'சும்மா பீலா உடாதீங்கப்பா. தெய்வம் நின்னு பார்க்கும். உட்கார்ந்து பார்க்கும்னு. நாம நம்ம வேலையை ஒழுங்கா செய்துகிட்டிருந்தோம்னா போதும். நாம நம்ம

வேலையை செய்யறதுக்கு ஏத்தாப்போல ஜெயிக்கறதும், தோக்கறதும் நடக்கறது.''

தீனதயாளன் சற்று கோபமாகவும், அலுப்பாகவும் பேசினான்.

ரத்தினம் வாய்விட்டுச் சிரித்தான்.

''உனக்கு வேலைன்னு ஒண்ணு கிடைக்கறதும் அந்த வேலையில நீ முழு மூச்சா இறங்கறதும் உன்னாலயா நடக்குது. நூறு பேர் வேலை செய்தா, நூறு பேரும் ஒரே மாதிரி திறமையாவா வேலை செய்யறாங்க. இல்லியே. திறமையா வேலை செய்யறதுக்கு யாரோ தூண்டணும். யாரோ வழி நடத்தணும். திறமையா வேலை செய்யறவன் எத்தினியோ பேர் இருக்கான். அவனுக்கு சரியான வேலை கிடைக்குதா. இல்லை. நல்ல வேலை யாரோ கூட்டுவிக்கணும். கொண்ணாந்து மடியில போடணும். தெய்வம் இல்லேன்னு யார் தெரியுமா சொல்லுவான். எல்லாம் தனக்கு தெரியும்னு நினைக்கறவன். எல்லாம் தனக்குத் தெரியும்னு யார் தெரியுமா நினைப்பான், வாழற கொஞ்ச காலத்துல, கொஞ்ச நேரம் கொஞ்ச விதமா அதிகாரம் இருக்கறவன். எல்லாரும் நல்லதுன்னு சொல்றத எதிர்த்துப் பேசினா நமக்கு நல்லதுன்னு நினைக்கறவன். இவ்ளோ பெரிய உலகம் அது சுழலற விதம். இத்தினி பெரிய வானம். அதுல இருக்கற நட்சத்திரம். ஒவ்வொரு நட்சத்திரமும் உலகத்தைவிட பெருசா இருக்கற விதம். எல்லாம் தெரிஞ்சவன் திகைச்சுப் போய்தான் நிப்பான். அதை விடு. நீ என்னிக்கு சாவேன்னு உனக்குத் தெரியுமா? நான் என்னிக்கு சாவேன்னு தெரியுமா? என்னிக்கு சாவேன்னு தெரியாதவரைக்கும் உனக்கு நீ எஜமானில்லை. யாருக்கோ அடிமை. என்னிக்கு சாவுன்னு தெரியாத வரைக்கும் நீ எல்லாம் தெரிஞ்சவனில்லை. ஏதோ குறை



இருக்கறவன். சாவைத் தடுத்து நிறுத்த முடியாத வரைக்கும் நீ பெரிய புடுங்கி இல்லை. வெறும் குப்பை மேடு. மேல, கீழ, நல்லது கெட்டது எதையும்... எதையும் உன்னால் தடுத்து நிறுத்த முடியாது.

எல்லா வியாபாரமும் சூதாட்டம்தான். எல்லா வைத்தியமும் சூதாட்டம்தான். எல்லாப் படிப்பும் சூதாட்டம்தான். எல்லா வேண்டுதலும்கூட சூதாட்டம் தான். ஒண்ணுமே தெரியாத திகைப்புலதான் உலகம் அன்னிலேர்ந்து இன்னிக்கு வரைக்கும் இருக்கும். சின்ன கிளிஞ்சல்களை மடியில வச்சிகிட்டு இதுதான் என் சொத்துன்னு சின்னப்புள்ள கத்துமே அதை எங்கயும் யார் கிட்டயும் கொடுத்துடாதேன்னு சொல்லுமே. கண்டு பிடிச்சுட்டேன், கண்டுபிடிச்சுட்டேன்னு பெரிய கிளிஞ்சல் கண்டுபிடிச்சுட்டேன்னு எடுத்துட்டு வருமே. அந்த மாதிரி இந்த ஜனங்க, ஏதோ நாலு விஷயம் கண்டுபிடிச்சுட்டு அலட்டறாங்க.

மனுஷன் பண்ண பெரிய தப்பு. பூமியை குடைஞ்சது. கடலை குடைஞ்சுருக்கணும். கடல்ல பேர்பாதி விஷயம் இவனுக்குத் தெரியலை. கடலைப்பத்தி நீங்க ஒண்ணுமே கண்டுபிடிக்கலை. கண்டுபிடிக்காதது நிறைய இருக்கு. கடலையே கண்டுபிடிக்க முடியலையே, வானத்துல என்ன பண்ணிடப்போறீங்க. தும்பி பறக்கற மாதிரி இந்தாண்டயும், அந்தாண்டயும் போயிட்டு வரீங்க. இதுலயே ஏகப்பட்ட குளறுபடி... நீங்க கண்டுபிடிச்ச எந்த விஷயமாவது பத்திரமா இருக்கா. ஜாக்கிரதையா இருக்கா. பாதுகாப்பானதா இருக்கா. இல்லியோ.

எதுக்குடா விமானம் கண்டுபிடிச்ச அப்படின்னு கேட்டு, இன்னொரு விதமா சாகறதுக்கு. இப்படித்தான் பதில் சொல்லணும்.'' ரத்தினம் முடித்துக் கொள்ள, தீனதயாளன் சீறினான்.

''ரொம்ப அல்பத்தனமா பேசாத. மரத்தடியிலும் ஒலைக் குடிசையிலும் மண்ணு சுவருல கட்டின கோட்டையிலும் இருந்தவன். எவ்ளோ உயரம். என்ன உறுதியா வீடு கட்டியிருக்கான். குண்டு போட்டாக்கூட விழுமா அது. இவ்ளோ சௌகரியமா இத்தனை குளுகுளுன்னு வீடு கட்டிவச்சுருக்கு. ராத்திரியா, பகலான்னு ஒண்ணும் தெரியாம உள்ளுக்குள்ள உட்கார்ந்துட்டு இருக்கலாம். எவ்ளோ சௌகரியம் இது. இதெல்லாம் அனுபவிச்சுட்டு ஒண்ணுமில்லைன்னு பேசறியே.''

''இதனால எதுவும் நடந்துடலை. எதுவும் மாறிடலைன்னு சொல்றேன். இன்னொரு ஒலை கொட்டாய் கட்டி வச்சுருக்கேன். ஒலை கொட்டாய்குள்ள இதே குளுகுளுன்னு இருக்கும். ஆபீஸ் குளுகுளுன்னு இருக்கு. வீடு குளுகுளுன்னு இருக்கு. என்னிக்காவது ஒரு நாள் வெளிய வந்து வெயில்ல மாட்டிக்கிட்ட செத்து கண்ணாம்பு ஆயிடுவ. தோல் பாளம் பாளமா வெடிச்சுப் போயிடுது. ஏ.ஸி. கண்டுபிடிப்பானேன். தோலு பாளம் பாளமா வெடிப்பானேன்.''

''எங்கயோ பேச ஆரம்பிச்சு எங்கயோ முடிக்கறோம். இந்தம்மா இன்னும் வரலியே.''

''நீ கூப்பிடலை.''

''நான் கூப்பிடலைன்னா என்னா...''

''அமைதியா உட்காரு. உள்ளுக்குள்ளேயும் அமைதியா உட்காரு. பேசாம உட்கார்ந்து அம்மா வாங்க. உங்களை பார்க்கணும்னு சொல்லு.''

''அப்படி வரலைன்னா, கடைசியா இன்னொரு டயலாக் சொல்லிடுவியே.''

''என்ன?''



''அந்தம்மா விருப்பப்படலை. அதனால பார்க்கலைன்னுடுவியே.''

''அப்படியும் நடக்கலாம்.''

''தோ...டா...ரத்னம், வாயில வெத்தலைப் பாக்கு போட்டுக்கிட்டு பல்லில்லாத கிழவி இருக்கும் பார் அதுங்கிட்ட பேசு.''

''நானும் நம்பாமதான் இருந்தேன் தீனதயாளா. திடுக்குனு வந்து நின்னவுடனே மூச்சு அடைச்சுப்போய் கண்ணு பிதுங்கிபோய் நாக்கு குழறி அடிவயிறு பிரண்டு இதோ புடிங்கிட்டு எல்லாம் வெளிய வந்துடும்னு நினைச்சு தொடையை இறுக்கிகிட்டேன். கையில கடப்பாரை இருந்தாலும் உடம்பு ஆடிக்கிட்டு இருந்தது. அந்த மாதிரி ஆடிக்கிட்டு இருந்தவனை நிதானத்தை வர வழைச்சுதான் என்னான்னு சொல்லுச்சு அந்தம்மா. நான் பார்த்ததும் அவ விருப்பத்துல, அவ கருணையில.''

''உன்னோட பேசவே முடியாதுப்பா.''

''உங்களோட நான் பேச முடியாது தீனதயாளா.''

ரத்தினமும் அலுத்துக் கொண்டான். அங்கு ஒரு அமைதி நிலவியது.

''நீ வேண்டிக்கக்கூடாதா?''

''என்னான்னு?''

''இங்க பக்கத்துல தீனதயாளன்னு ஒருத்தர் உட்கார்ந்திருக்கான். அவன் பெரிய முட்டாள். அவன் நீ இல்லைன்னு சொல்றான். அவனுக்கு நீ யாருன்னு சொல்லக்கூடாதா?''

''உள்ள நுழைஞ்சது'லேர்ந்து சொல்லிட்டேன்.'

''என்னா நான் முட்டாள்னா.''

''உன்னை முட்டாள்னா உனக்கு கோவம் பொத்துக்கிட்டு வந்துருமா. கடவுள் இல்லைன்னு சொல்றவன் அத்தனை பேரும் முட்டாள்தான்.''

''என்னா இவ்ளோ கோவப்படற இதுக்கு.''

''நான் கோபப்படவே இல்லை. எது கத்துக்கணுமோ அதை கத்துக்க மாட்டேன்றீங்களேன்னு வருத்தப்படறேன். சந்தேகப்படணும் தீனதயாளா, என்ன அது... என்ன அது... என்ன அதுன்னு கேள்வி கேட்கணும். அப்படி கேள்வி கேட்டதினுடைய பயன்தான் நீ கண்டுபிடிச்ச நாலஞ்சு விஷயம்.''

''நாலஞ்சு விஷயமா.''

''ஆமாம். நீ கண்டுபுடிச்சதே நாலஞ்சு விஷயம். சக்கரம், மின்சாரம், அணுகுண்டு, ஒரேமாதிரி நூறு ஆடு கண்டுபிடிச்சிருக்கானாமே அந்த சமாசாரம். இவ்ளோதான் நிறைய... நிறைய... கோடிக்கணக்கா இருக்கு. நீ அஞ்சுதான் முடிச்சிருக்கே. அஞ்சு முடிக்கறதுக்கே இத்தினி வருஷம் ஆயிருக்கு. அந்த திகைப்பு வரணும். இன்னும் என்னவெல்லாம் இருக்கோ அப்படின்னு ஒரு பயம் வரணும், சந்தேகம் வரணும். அடடா... என்னை மாதிரி உண்டா அப்படின்னு முட்டாள்தான் ஆரம்பிப்பான். கடவுள் நம்பிக்கைங்கறது திகைப்புலேர்ந்து வர்றது. நாம ஒண்ணுமே இல்லாத தூசா இருக்கோமேன்னு நினைப்புலேர்ந்து வர்றது. கும்பிடறது. கும்பிடாதது. கும்பிடறவனை ஏமாத்தறது. கும்பிடுதலை ஃப்ராடுதனம் பண்றது. மதம்னு சொல்லிட்டு மக்களை வழிதப்பி அனுப்பறது. இதெல்லாம் வேற விஷயம். இதுக்கும் கடவுளுக்கும் சம்மதம் கிடையாது. உன்னை ஏமாத்துவான். அரசாங்கம்னு ஏமாத்துவான், கட்சின்னு ஏமாத்துவான். மக்களுக்கு பாடுபடறேன்னு ஒரு கட்சியை ஆரம்பிப்பான். அவன் வீட்டுக்கு மட்டும் பாடுபடுவான். இந்தக் கருமத்தை எங்க போய் சொல்றது. எந்த நல்ல விஷயம் ஆரம்பிச்சாலும் அது குப்பையா முடிக்கறது மனுஷன் விஷயம். அதனால மதத்தை குறை



சொல்லி புண்ணியமே இல்லை. அரசியலையும் குறைசொல்லலாம் எல்லாகட்சியையும் குறை சொல்லலாம். கடவுள் இல்லேன்ற கட்சி இப்போ என்ன கதிக்கு வந்தது. சின்னாபின்னமாகி நாலுபேர்கூட இல்லாத ஒரு நிலைமை வந்துடுச்சி இல்லை. அந்த கட்சியில இருந்தவனெல்லாம் திருநீறு பூசிக்கிட்டு தீச்சட்டி தூக்கறான் இல்லை. எதுக்காக ஆரம்பிச்சோம்னு அதையே மறந்துபோய் எல்லா ஜாதியும் ஒண்ணுன்னு சொல்ற விஷயத்தை சுத்தமா மறந்துட்டு நான் என்னா ஜாதி, அவன் என்ன ஜாதி அப்படின்னு ஜாதி பேசற விஷயமே இந்தக் கட்சிதான் மாத்திச்சு. மதத்தினால் குழப்பம் நிச்சயம். ஏன்னா அது மனுஷன் கண்டுபிடிச்சது. மதம் குழப்புதுன்னு சொல்லி கடவுள் இல்லேன்னு சொல்றவன் முட்டாள். மதங்கள் தோன்றும் அழியும். ஜாதிகள் தோன்றும் அழியும்.''

''படிச்சிருக்கியா ரத்னம்.''

''பத்தாவது வரைக்கும் படிச்சிருக்கேன்.''

''இப்போ இடிக்கிற வேலை செய்யற.''

''ஏன் இதுக்கு என்ன குறைச்சல். யாரையும் ஏமாத்தலை. லஞ்சம் வாங்கலை. பொய் சொல்லலை. பொம்பளைய துன்புறுத்தலை. குடிச்சுட்டு ஆடலை. இன்னொருத்தர் சொத்தை களவாடலை. கடன் வாங்கினதை திருப்பித் தராத ஏமாத்தலை. யாரையும் கேவலப்படுத்தலை. இன்னிக்கு தொழில் செய்தோமா. உடம்பு துடைச்சோமா. வந்து கூலியை வாங்கினோமா. அதுக்குண்டான சோறு தின்னோமா, தூங்கினோமான்னு இருப்போம்.''

''இத்தினி பேசற நீ மகேஸ்வரியை ஏன் எங்கப்பா கிட்ட இறக்கி விட்டே.'

''மகேஸ்வரி குழந்தைய கொண்டாடணும்னு நினைச்சுது. அதை கான்வென்ட்ல படிக்க வைக்கணும். அது

இங்கிலீஷ்ல பேசணும்னு சொல்லிச்சு. எனக்கு அதுக்கு வக்கில்ல. எனக்கு அது இங்கிலீஷ்ல பேசணும்னு அவசியமும் தோணலை. நான் சொன்னா மகேஸ்வரிகிட்ட எடுபடாது. எனக்கும் மகேஸ்வரிக்கும் நடுவில பதினேழு வயசு வித்தியாசம். முறை மாமன் அது இதுன்னு முட்டாள் தனமா கட்டி வச்சிட்டாங்க. அந்த பொண்ணை யாரும் கேட்கவும் இல்லை. அதுவும் பயந்து வாயை மூடிட்டு இருந்தது. எனக்கும் இவமேல ஆசை இல்லை. பருவத்துக்கு வந்து நாலே மாசமான பொண்ண வச்சிகிட்டு நான் என்னத்த குடித்தனம் பண்றது. கல்யாணம் கட்டின நாள்லேர்ந்து அவளோட போக்குலயே விட்டேனே தவிர, நான் எனக்குன்னு மகேஸ்வரியை வளைக்கவேயில்லை. வா அப்படின்னா போவேன். இங்க போலாமா அப்படின்னா சரிம்பேன்.''

''நீ ஏன் தனியா கடை போடக் கூடாது.''

''எதுக்கு இடிக்கற வேலை பண்ணணுங்கறியா. ஆஹா... கடை போடலாமேன்னு இட்லி கடை பேட்டேன்.''

''ஏன் விட்டுட்டீங்க.''

''ரௌடிப்பசங்க வந்தானுங்க. இட்லியை தின்னுட்டு மகேஸ்வரி மேல கைய வச்சானுங்க. விட்டா போதும்னு ஏழுமலை நாயக்கர்கிட்ட ஓடியாந்துட்டோம்.''

''அப்போ அம்மாவை கேட்கலியா.''

''தெரியாது. ஆனா, யாரோ இருக்காங்க காப்பாத அப்படின்னே பட்டுது. அந்த ரௌடிபசங்ககிட்டேர்ந்து மகேஸ்வரி தப்பிச்சதுகூட யாரோ காப்பாத்திதான். யார் காப்பாத்தினாங்கன்னு தெரியாது. பேட்டை கவுன்சிலர், எப்படியும் உன்னை படுக்கையில சாய்ச்சுட்டுத்தாண்டி வேலைன்னு சாப்பிடற இட்லி மேல சத்தியம் பண்ணினான்.



நாய்க்கராண்ட போயிட்டான்னவுடனே நகர்ந்துட்டான். அப்புறம் ஒரு நாள் குடிபோதையில கைகலப்பு ஏற்பட்டு எவனோ இரும்புக்குழாயில மண்டையில அடிக்க ஆறு மாசம் படுக்கையிலேயே இருந்தான். யாரையோ படுக்கையில சாய்க்கறேன்னு சொல்லிட்டு இவன் படுக்கையில சாய்ஞ்சுட்டான். கொஞ்சம் கொஞ்சமா செத்துப்போனான். நானும் அதை உத்து பார்த்துக் கிட்டிருந்தேன். மகேஸ்வரி ஆம்படையான்னு அவனுக்குத் தெரியாது. இருந்தாலும் மாசத்துக்கு ஒருவாட்டி போய் பார்ப்பேன். எதுனா புலம்புவான். அவன் புலம்பினது அத்தனையும் எனக்கு பாடமாச்சு. மறந்தும் போய் இப்படி யொரு தப்பு பண்ணிடக்கூடான்னு அவன் புலம் பினதுலேர்ந்துதான் நான் தெரிஞ்சுகிட்டேன்.

ஏகப்பட்ட பாவம் சொன்னான். இவளைக் கெடுத்தேனே. அவளை ஏமாத்தினேனே. அந்த துட்டு எடுத்தேனே. இந்த துட்டு எடுத்தேனே. அன்னிக்குதான் தெரிஞ்சுது. இடிக்கற இந்த வேலை உத்தமமான வேலை. யாருக்கும் கெடுதல் பண்ணாத வேலை. சாவறது. கம்பீரமா சாகணும் தீனதயாளா. அதுக்கும் கடவுள் அருள் வேணும். வாழறது கம்பீரமா வாழ்ந்தா சாகறது கம்பீரமா சாக முடியும்.''

''வாழறது எப்படி கம்பீரமா வாழறது?''

''யாரோ வழிநடத்தினா நல்லா வாழலாம், மனுஷங்க வழிநடத்தினா குழப்பிடுவாங்க. தெய்வம் வழிநடத்தினா குழப்பமே இருக்காது.''

''நல்லா பேசற ரத்னம். பத்தாவது படிச்சுருக்கேன்னு சொன்னாகூட நம்பமாட்டாங்க.''

''பார்க்கறதுக்கு காட்டான் மாதிரி இருக்கேன். அதால தானே.'' ரத்தினம் பெரிதாய் சிரித்தான்.

''நான் நம்பறேன்ப்பா. நல்லா பேசறியே. நிறைய யோசனை பண்ணியிருக்கேன்னு தெரியுது. நான் நம்பறேன். ஆனா அந்த அம்மாளை காணுமே.''

''நீ இன்னும் கூப்பிடவே இல்லையே. எங்கூட வம்பு பண்றியே தவிர அமைதியா உட்கார்ந்து, அம்மா உன்னை பார்க்கணும்னு இன்னும் கேட்கலையே.''

''உனக்கு தெரிஞ்சுடுச்சா.''

''நான் கூப்பிடலை..''

''எனக்காக நீ பார்க்கணும்னு சொல்லேன். நீ வேண்டிக்கயேன்.''

''நல்லாயிருக்கே. உனக்காக நான் சாப்பிட முடியுமா. உனக்காக நான் குளிக்க முடியுமா. என்னா கதை இது. உனக்கு பசிச்சா நீதான் சாப்பிடணும்.''

''மற்றவங்களுக்காக பிரார்த்தனை பண்றதுன்னு கிடையாதா?''

''உண்டு.''

''அந்த மாதிரி பண்றது.''

''அதுலயும் எனக்காகன்ற பேச்சுதான் நிற்கும். எனக்காக இவரு நிறைய செய்திருக்காரு. அவருக்காக நீ எதுனா பண்ணு அப்படின்னு கேட்கலாம். தீனதயாளன் பழைய சட்டை கொடுப்பாரு. அஞ்சு பத்து கைமாத்து தருவாரு. அவராலதான் நானும் என் குடும்பமும் நல்லா இருக்கோம். எந்தக் கவலையும் இல்லாம நான் உன்னை கும்பிடறதுக்குக் காரணம் தீனயாளன்தான். அதனால தீனதயாளனுக்கு உடம்பு சரியாப் போகணும். அப்படின்னு நான் வேண்டிக்கிட்டும் இருக்கேன்.''

''எங்க வேண்டிகிட்ட.''



''ஆஸ்பத்திரியில கிடந்து வலிதாங்காம கத்தினபோது அந்தம்மாகிட்டதான் வேண்டிக்கிட்டேன். தீனதயாளன் வலியை எனக்கு கொடுத்துடுன்னு வேண்டிக்கிட்டேன். மறுநாளே உனக்கு வலி குறைஞ்சு போச்சு.''

''உனக்கு கொடுத்துட்டாங்களா வலியை.''

''கொஞ்சம் எனக்கு கொடுத்தாங்க. நிறைய அந்தம்மா எடுத்துக்கிட்டாங்க.''

''நிஜமாவா?''

''உன் மேல் சத்தியமா.''

''ஏம்ப்பா... இவ்வளவு பெரிய வார்த்தை சொல்ற.''

''என்னா சொன்னாலும் நம்ப மாட்டேன்றியே. நான் வேற என்னதான் சொல்றது.''

''என் வலியை அந்தம்மாவா எடுத்துக்கிச்சு.''

''ஆமாம்.''

''அந்தம்மா இன்னம் காணோமேப்பா.''

''கேளுப்பா. ஏம்மா வரமாட்டேன்றன்னு கேளு. எங்க இருக்கேன்னு தேடு. உன் மனசுல ஒருமையே இல்லை. அதுதான் பிரச்சினை. முழுசா நம்ப முடியலை. உன்னை மாதிரி நூத்துக்கு தொண்ணூத்தி ஒன்பது பேரு. அல்லாடறான். ஏன் தெரியுமா? முழுசா நம்ப முடியலை. அப்படியே தூக்கி கடவுள் கிட்ட கொடுக்க முடியலை. நீ பார்த்து எனக்கு உண்டானதை செய்யின்னு வாயாற சொல்ல முடியலை. நம்பணும்னு ஆசையா இருக்கு. ஆனா, நம்பவும் முடியலை. இதுதான் இன்னிக்கு குழப்பமே. நம்பணுங்கற ஆசை. நம்பமுடியாத புத்தி. கடவுள் இல்லைன்னு சொல்றவன் குழப்பினது மட்டுமில்லை. கடவுள் இருக்குன்னு சொன்ன ஃப்ராடு பசங்க எல்லாம் ஒண்ணா சேர்ந்துகிட்டு குழப்பி விட்டுட்டாங்க. என்ன சொல்லித்

தரணுமோ அதை சொல்லித் தராத, தான் எப்படி சௌக்கியமா இருக்கணுமோ அதுக்குண்டான வழியை பார்த்துக்கிட்டான். கடவுள் இருக்குன்னு சொல்றவன் பண்ண அயோக்கியத்தனத்துனால கடவுள் இல்லைன்னு சொல்றவன் ஞானியாயிட்டான்.''

''இந்த மாதிரி அயோக்கியனை கடவுள் ஒண்ணும் கேட்காதா.''

''அயோக்கியத்தனம் பண்ணவன் சந்தோஷமா செத்ததா வரலாறே கிடையாது.''

''ச்சு...என்ன அப்படிச் சொல்றீங்கப்பா. எல்லாரும் நல்லாதான் இருக்கறாங்க. வீடும், பங்களாவுமா, காரும், தோப்பும், தொறவுமா இருக்காங்க''

''தோப்பு இருக்கும். பங்களா இருக்கும். எல்லாம் இருக்கும் ஆனா, மனசுல நிம்மதி இருக்காது. இதெல்லாம் எதுக்கு வாங்கினது. சந்தோஷமா இருக்கறதுக்காக வாங்கினது. சந்தோஷமில்லாத இதை மட்டும் வச்சிகிட்டு என்னா பண்றது சொல்லு. எல்லாம் வச்சிகிட்டிருப்பாங்க. ஆனா கார்ல போறபோது பயந்து பயந்து போவான். எங்க இன்னொரு லாரி வந்து இடிக்குமோ, எவன் குண்டு போட்டு கொல்லுவானோ அப்படின்னே சாகறாங்க. எந்தப் பணக்காரனும் சந்தோஷமா இல்லைப்பா.''

'' எங்கப்பா சந்தோஷமாத்தானே இருக்காரு.''

''உங்கப்பா பணக்காரரா. அநியாயமா காசு சேர்த்தவரா. இல்லியே. பழைய காலத்து வீட்டை முன்பக்கம் எழுப்பி அவரால முடிஞ்ச அளவுக்கு கட்டி குடித்தனமும் விட்டு ஒரு வீட்டை பாழாக்காத வச்சிகிட்டிருக்காரே. அது எவ்ளோ பெரிய விஷயம். நினைச்சிருந்தா இந்த வீட்டை வித்துட்டு வேற எங்கனா வேளச்சேரியில பெரிய பங்களாவா கட்டிட்டு





போகலாம். போகலியே. கொல்லைப்புறத்துல தேவதை இருக்குன்னு அவருக்கு தெரிஞ்சுப் போச்சு. சரி, சாகறமட்டும் நமக்கு இங்கதான் இடம்னு நின்னுட்டாரு.''

''எங்க வீட்டுக் கொல்லைப்புறத்துல தேவதையா.''

''நீங்கதானப்பா இருக்கீங்க. என்னை கேட்டீங்கன்னா.''

''சொல்லு ரத்னம்.''

''உங்க வீட்ல பெரிய பாதாம் மரம் இருக்கில்லியா. அந்த வீட்டை விக்கலாம்னு போனபோது அந்த பாதாம் மரம் பெரிய கிளை உடைஞ்சு விழுந்தது. உங்கப்பா பயந்துட்டாரு. என்னா, அப்படின்னு ஈஸிசேர் போட்டு உட்கார்ந்து கேட்டிருக்காரு. தூக்கமுமில்லை, விழிப்பு மில்லை. அப்படியொரு நிலைமை. கண்ணை இழுத்து கிட்டு போற நேரம். அப்போ இந்த வீட்டை விக்காத. நான் சொல்றவரைக்கும் அப்படியே வச்சிகிட்டு இரு அப்படின்னு சொல்லிச்சு. சரி, விக்கமாட்டேன்னு சொல்லிட்டாரு.

அவர் நினைச்சதைவிட மூணு மடங்கு அதிகமா கொடுக்கறேன்னு ஆளுங்க நின்னுது. ராயப்பேட்டையில அடகு கடை வச்சிருக்கிறவன், எனக்குக் கொடுத்துடு. எனக்கு கொடுத்துடுன்னு கெஞ்சினான். முடியவே முடியாதுன்னு சொல்லிட்டாரு. அம்மாகூட சொல்லிப்பார்த்தாங்க. இடிக்கற வேலையை விட்டுட்டு கட்டற வேலை பண்ணிப் போம்னு. இல்லை, இல்லை. கடைசி மட்டும் எனக்கு இடிக்கிற வேலைதான்னு சொல்லிட்டாரு. உங்கப்பா. எப்போ கொல்லைப்புறத்துக்கு வந்தாருன்னு உனக்குத் தெரியுமா?''

''நான் எட்டாவது படிக்கும்போது.''

''கரெக்ட். அதுக்கப்புறம் உங்கப்பா ஒரு நாளும் கீழ இறங்கலை. எந்த வேலை எடுத்தாலும் அற்புதமா முடிச்சு

கொடுப்பாரு. அழகா செய்து கொடுப்பாரு. எட்டு மாடி கட்டடம் இடிக்கணுமா, ஏழுமலை நாயக்கரை கூப்பிடுன்னு தான் சொல்லுவாங்க. காரணம், அந்த பாதாம் மரம்.''

''மரமே சாமியா.''

''இல்லை மரத்துல சாமி இருக்கா. உங்கப்பாவை கேட்டு தெரிஞ்சுக்கோ.''

''நம்பவே முடியலை. ஆனா, கதையெல்லாம் அழகா சொல்றே. நான் நினைக்கிறேன், நம்ம ஊர்ல கதை சொல்லி, கதைசொல்லி நம்பும்படியா கதை சொல்லி... கவுத்துட்டீங்கன்னு.''

''உன்னை கவுத்து எனக்கு என்ன ஆகணும். எனக்கு வேணுங்கறது பழைய சட்டை, கொஞ்சம் சோறு. அஞ்சுபத்து, வெத்தலைப்பாக்கு, பீடி கொடுக்கறதுக்கு இப்போகூட உங்கப்பா தயாரா இருக்கறபோது நான் கூடுதலா உங்கிட்ட காசு வாங்கி என்னா பண்ணப் போறேன்.''

''நிஜமாவே ரத்னம், உனக்கு ஒண்ணும் வேணாமா?''

''ஒண்ணும் வேணாமான்னா.''

''சொத்து சுகம் எதும் வேணாமா?''

''இருக்கற ஒரு சொத்தையும் உங்கப்பாகிட்ட கொடுத்துட்டேன். எனக்கு என்னா வேணும்.''

''எப்படி கொடுக்க முடிந்தது உன்னாலே.''

''அது என் சொத்துன்னே நினைக்கலை. பாவம் வழி தெரியாத எங்கிட்ட வந்த மாட்டிக்கிச்சு. எங்கிட்ட வந்து இது பொண்டாட்டியா இருந்து ஆசைப்படறதை விட எவனுக்கு பொம்பளை மேல ஆசை இருக்கோ அவங்கூட குஷாலா இருக்கட்டுமே.''



''ஒரு சமயம் உன்னை நினைச்சா பாவமா இருக்கு. இன்னொரு சமயம், சீ பெரிய மனுஷன்னு தோணுது. உன்னைப் பத்தியும் நான் ஒரு முடிவுக்கு வரமுடியலை ரத்னம்.''

''தெருவுல போற பிச்சைக்காரனைப் பார்த்து ஐயோ பாவம்னு சொல்லுவேன்... ஆனா, அந்தப் பிச்சைக்காரன் உன்னைவிட பெரிய பணக்காரனா இருப்பான்.''

''எப்படி, பிச்சை சேர்ந்து பேங்க்ல போட்டிருப் பான்றியா.''

''இல்லை. ஞானியா இருப்பான். எல்லாம் தெரிஞ்சவனா இருப்பான்... போகவர அத்தனையும் என்னா என்னான்னு உத்து உத்து பார்த்து வாய்விட்டு சிரிக்கறவனா இருப்பான்.''

''அப்படி ஆளு யாராவது பார்த்திருக்கியா.''

''சின்ன வயசுல பார்த்திருக்கேன்.''

''எங்க?''

''ஜார்ஜ் டவுன்ல ஒரு மாதா கோயில் இருக்கு. அதுக்கு அடுத்ததா ஒரு சந்து. அந்தத் தெருவுல உட்கார்ந்து கிட்டிருப்பார். காகிதம் போட்டு எரிச்சுகிட்டிருப்பார். குப்பை மேட்ல எரிச்சுக்கிட்டிருப்பார். ஏதோ பேசிக்கிட்டிருப்பார். பைத்தியம் பைத்தியம்னுவாங்க. பைத்தியமில்லை, ஞானின்னு ஊர் புரிஞ்சுகிச்சு, புரிஞ்ச அடுத்த வருஷம் அந்தாள் உதறிட்டு மேல போயிட்டான்.''

''ஏன்?''

''ஜனங்க புடுங்கல் தாங்கலை.''

''என்ன புடுங்குவாங்க.''

''தங்கம் பண்ணிக் கொடு சாமின்றான். அவன் பொம்பளைய எனக்குக் கூட்டிக்கொடு சாமின்றான். அவன்

பொண்டாட்டி பேரழகி. என் மேல ஆசைப்படறா. அவளை எனக்கு கொண்ணாந்து கொடுன்றான். சாமிகிட்ட பேசற பேச்சா அது. கேட்டு கேட்டு காது புண்ணாகி விட்டுட்டு ஓடிப் போயிட்டாரு.''

''ஒழுக்கம்றது ரொம்ப முக்கியமா ரத்னம்?''

''ஆமாம்பா. உலகத்துல நல்லது. கெட்டதுன்னு பெரியவங்க சொல்லியிருக்காங்களே, அது பிரகாரம் இருந்துட்டா அமைதியா இருக்கலாம். திருடணும்னு நினைச்சேன்னு வச்சுக்க, உள்ளுக்குள்ளே பக்பக்குனு ஒரு பயமும் பதட்டமும் பரவும். அந்த பயமும் பதட்டமும் உன்னால் மத்தவங்களுக்கும் தொத்திக்கும். நீ போய் எங்கயோ திருடி சம்பாதிச்சுடுவ. உன் சொத்தை எவனாவது திருடிடுவானானு பயப்படற.யார் வீட்டுக்கு வந்தாலும் இவன் திருடனா, நோட்டம் பார்க்க வந்திருக்கானா. நாம அப்படித்தானே பகல்ல நோட்டம் பார்த்தோம். ராத்திரியில திருடினோம் அப்படின்னு நினைப்ப.

பொண்ணு அவசியம்தான். போ, கல்யாணம் பண்ணிக்க. குடித்தனம் பண்ணு. அவளோட சந்தோஷமா இரு. அவளைச் சந்தோஷப்படுத்து அப்படின்னுதான் சொல்லியிருக்காங்க. அது அல்லாத ஊரான் பொண்டாட்டி மேல கை வைச்சின்னா மனசு அமைதியில்லாத இருக்கும். பயப்படும். உன் பொண்டாட்டி யாரைப் பார்த்து சிரிச்சாலும் எதுக்கு சிரிக்கறா அப்படின்னு கோவம் வரும். கீழ துப்பவும் முடியாத, தொண்டைக்குள்ள விழுங்கவும் முடியாத ஒரு வேதனையா உன் திருட்டுத்தனம் எல்லாமுமே மாட்டிக்கும். எந்நேரமும் பதட்டம், பயம். கலவரம். கணக்கு. வழக்கு. சரியா தப்பான்னு குழப்பம். எங்கயோ மாட்டினா என்ன ஆகும்னு கற்பனை, எப்படி சால்வ் பண்றதுன்னு ஒரு அச்சம். தெரிஞ்சிருந்தா என்ன பண்றது அப்படின்னு ஒரு பதட்டம்.



அவனைக் கேட்கறது. அவன் தெரிஞ்சாப்போல சொன்னா உடனே அவன் மேல பாயறது. ஒரு குத்தம் நூறு குத்தத்துக்கு விதை போடும். அதனாலதான் ஊர்ல இருக்கற பெரிய மனுஷன், உலகம் தெரிஞ்சவன், கடவுள் தெரிஞ்சவன் இருக்கறத சாப்டுட்டு கிடைக்கற இடத்துல படுத்துக்கறான். எதுவுமே என்னது இல்லைன்னு உதறிவிட்டு வெறுமனே நிக்கறான். யாரையும் பிடிச்சுக்காம எதையும் பிடிச்சுக்காத சுயமா, தானா நிக்கறான். காத்து போன திக்குல போயி கிட்டிருக்கான். அப்படி வாழ கத்துக்கணும்.''

''பொம்பளைய அனுபவிக்கறதே தப்புன்றியா?''

''இல்ல. உனக்குன்னு உண்டான பொம்பளைய அனுபவி.''

''அப்பாவுக்கு அப்போ குழப்பம்தானா.''

''இல்லியா பின்ன... என்னைப் பார்த்தவுடனே மூஞ்சியில ஒரு வெளிச்சமா. சுத்தமா கைகழுவிட்டேன். எனக்கும் மகேஸ்வரிக்கும் எந்த சம்பந்தமுமில்லைன்னு தெரிஞ்சும் அவருக்கு என்னைப் பார்த்தா ஒரு பயம். மந்திரவாதின்னு ஒரு நினைப்பு. எனக்கு மந்திரமும் தெரியாது. தந்திரமும் தெரியாது. நான் சாதாரணமான ஆள்.''

''மகேஸ்வரியை விட்டது உனக்கு வருத்தமாவே இல்லியா?''

''இல்லை.''

''எப்படியப்பா இது?''

''மகேஸ்வரி என் சொத்து இல்லைப்பா.''

'கல்யாணம் கட்டாதயே இருந்திருக்கலாமில்லை.''

''கட்டிட்டேன். மேற்கொண்டு விதி சேர்த்துவச்சிடுச்சு. நான் அப்படித்தான் பார்க்கறேன். நீ சொன்னமாதிரி கல்யாணம் கட்டாதயே இந்நேரம் நான் வடக்க எங்கயோ

இமயமலை அடிவாரத்துல சுத்திக்கிட்டிருப்பேன். கல்யாணம் கட்டி ஒரு பெண்குழந்தையும் பொறந்துடுச்சு. அதுக்கு ஏழு வயசு. பள்ளிக்கூடம் போகுது. அவளுக்கு தெரிஞ்சு போச்சு. அப்பா வேற. ஏழுமலை நாயக்கர் வேறன்னு. அம்மா நாயக்கர் கார்ல ஏறிப்போயிருக்கறாங்க. வரும்போது துட்டு எடுத்துட்டு வருவாங்க. துட்டு எடுத்துட்டு வந்தா புஸ்தகம் வாங்கலாம், அப்படின்னு கூட படிக்கிற பொண்ணுகிட்ட சொல்லுது. நான் கிளம்பிப் போயிட்டேன்னா அந்தப் பொண்ணு வாடிப்போயிடும். அது எனக்கு போன ஜென்மாந்தரத்துக் கடன். அதை நல்லபடியா ஒரு இடத்துல சேர்த்துட்டுதான் போகணும்.''

''உன்னைப் பார்த்தா ஆச்சரியமா இருக்குப்பா.''

''நாம ரெண்டு பேரையும் பார்த்தா ஆச்சரியமா இல்லை.''

''என்னா இப்படிச் சொல்ற?''

''என் பொண்டாட்டிய உங்கப்பா வெச்சு கிட்டிருக்காரு. நீ அவருக்கு முதல் பிள்ளை. எனக்கு முதலாளி. நீயும், நானும் உயிருக்குயிரா பழகிட்டிருக்கோம். இதை விட ஆச்சரியம் எதுனா உண்டா.''

''ஆமாம், ஆச்சரியம்தான். நீ ஆஸ்பத்திரியில செய்த உதவியைப் பார்த்தவுடனே உள்ளுக்குள்ள ரொம்ப துக்கமா போயிடுச்சி. எங்கப்பா மேல கோவமா வந்தது. ஒரு நல்ல மனுஷனை புண்படுத்தறீங்கன்னு ஆத்திரமா இருந்தது.''

''நல்ல வேளை, உங்கப்பா கிடைச்சாரு. வேற யார் கிட்டயாவது மகேஸ்வரி மாட்டியிருந்தா சித்ரவதை பட்டிருக்கும். சீரழிஞ்சுட்டிருக்கும். உங்கப்பா மரியாதையா இடம் போட்டு கொடுத்து. ஆசைப்பட்டதெல்லாம் வாங்கிக் கொடுத்து நல்லபடியா வச்சிருக்காரு.''



''சரி, அதைவிடு. அதை பேச வேணாம். எனக்கு இந்தம்மாவை காமிக்கறேன்னு கூட்டியாந்துட்டு வேற எதுவோ கதை அடிச்சுகிட்டு ஏமாத்தறியோன்னு தோணுது.''

''யோசனை பண்ணு. நான் ஏமாத்தறேனா. நான் ஃப்ராடா அப்படின்னு யோசனை பண்ணு.''

அவர்கள் இருவரும் மௌனமாக இருந்தார்கள்.

தீனதயாளன் ஆழ்ந்து சிந்தித்தான். ரத்தினத்தைப் பற்றி சிந்திக்காமல் மகேஸ்வரியைப் பற்றி சிந்தித்தான்.

மகேஸ்வரி இப்படிப்பட்ட நல்ல புருஷனை விட்டு விட்டு எதற்கு அப்பாவிடம் வரவேண்டும் என்று யோசனை செய்தான்.

மகேஸ்வரியின் தேவைகள் என்ன என்று யோசித்தான்.

பெண் எதன் பொருட்டு ஒரு ஆணை அணுகுகிறாள். ஏன் இவ்வளவு நல்லவனான ரத்தினத்தை புரிந்து கொள்ளாமல் போய் விட்டாள். நான் உட்கார்ந்து ரத்தினத்தை வேள்வி கேட்கிறேனே, இம்மாதிரி இவள் கேட்டிருக்க மாட்டாளா. இவள் ஆர்வம் இல்லாதவளாய் போய் விட்டாளா. அவளுடைய ஆர்வம் எது புடவையா, நகையா, காரில் சவாரியா.

ஒரு முறை காரில் அவள் உட்கார்ந்து போகின்ற தோரணையைப் பார்த்து மற்ற தொழிலாளிகள் கேலி செய்ய, அவனும் பார்த்து வியந்து போனான்.

பொருளாசை இருப்பின் ரத்தினம் போன்ற புருஷனை புரிந்து கொள்ளத் தோன்றாதா. ஒருவேளை இம்மாதிரிப் பேச்சுகள் அவளுக்கு அலுப்பு கொடுக்குமோ.

பெண்கள் விசித்திரமானவர்கள். பதின்மூன்று வயதில் திருமணம் செய்து தன்னைவிட பதினாறு வயது ஆணோடு

குடித்தனம் பண்ணுகின்ற பெண் வேறு எப்படித்தான் இருப்பாள். தன்னைவிட வயது அதிகமானவன் என்கிற விஷயம் ஆரம்பத்திலிருந்தே அவளுக்குச் சொல்லப்பட்டு ஊர் ஜனங்கள் அவளுக்கு ஒரு அலுப்பை ஏற்படுத்தியிருப் பார்களோ. மகேஸ்வரி சரியா தவறா. மகேஸ்வரி செய்தது பாபமா. இல்லையா. அப்படியானால் மகேஸ்வரிக்கு என்ன தண்டனை கிடைக்கும். மகேஸ்வரி என்ன விதமாக நடத்தப்படுவாள். அவளுடைய மரணம் என்ன விதமாக இருக்கும். மகேஸ்வரியை யார் தண்டிப்பார்கள். எப்போது தண்டிப்பார்கள்.

கம்பெனியின் கதவு திறந்து ஒரு வயதான அம்மாள் கீழே இறங்கிவந்தாள். கிராமத்துப் பெண் போல இருந்தாள். முகத்தைத் துடைத்துக் கொண்டு வாசலில் உட்கார்ந்து தூங்குகின்ற செக்யூரிட்டியை சிறிது நேரம் பார்த்துவிட்டு சிரித்துவிட்டு கீழே இறங்கி வந்தாள்.

''பகல்லயே தூங்கறான் பாரேன். இவனெல்லாம் ஒரு செக்யூரிட்டி.''

இறங்கி நடந்து வந்து தீனதயாளன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

அருகே வந்தவுடன் சில்லென்று ஒரு குளிர்ச்சி ஏற்பட்டது. எப்படி என்பது போல் அவன் பார்க்க, ''உள்ளுக்குள்ள மொத்தமும் ஏ.ஸி. பண்ணி வச்சிருக்காங்க. எங்க போய் நின்னாலும் வெடவெடன்னு குளிருது. எனக்கு ஆகவேயில்லைப்பா இந்தக் குளிரு. அதான் அப்பப்போ வெளிய வந்து மரத்தடியில உட்கார்ந்துடறது. இந்த நிழல் மாதிரி வருமா. உள்ள இருக்கற குளிரு வெப்பம்தான். அது யாருக்கும் தெரியமாட்டேன்னுது. என்னாப்பா ரத்தினம் ரொம்ப நாளா ஆளைக் காணும்.''



''வேலைதாம்மா.'' ரத்தினம் பதில் சொன்னான்.

''என்ன திடீர்னு இந்தப் பக்கம்.''

''தம்பி பார்க்கணும்னு சொல்லிச்சு வந்தேன்.''

சட்டென்று தீனதயாளனுக்கு தூக்கி வாரிப் போட்டது. திரும்பி கிழவியைப் பார்த்தான்.

ஐம்பத்தைந்து வயது கிழவி பச்சை நிறப் புடவை அணிந்திருந்தாள். வெள்ளி நிறத்தில் பார்டர் இருந்தது. வெள்ளை ஜாக்கெட் அணிந்திருந்தாள். வெள்ளை வெளேரென்ற முடியை வாரி சுருட்டிப் போட்டிருந்தாள். கையில் ஒரு கனமான தங்கக் காப்பு இருந்தது. மோதிரம் இருந்தது. கழுத்தில் ஏதோ மாலை அணிந்திருந்தாள்.

''ஏழுமலை நாயக்கர் பையன்தானே. பார்த்திருக்கேன்.''

அவன் திரும்பி ரத்தினத்தைப் பார்த்தான். ரத்தினம் ஆம் என்று தலையசைத்தான்.

குப்பென்று அடிவயிற்றிலிருந்து ஒரு பயம் கிளம்பி தொண்டையை அடைத்து விழிகளை நிலைகுத்தி வைத்தது. பளிச்சென்று வியர்த்தது. காதுகளில் ஒரு ரீங்காரம் ஏற்பட்டது. உதடு துடித்தது. உள்ளங்கால்கள் முறுக்கி வலியில் தவித்தன. இப்பொழுதே போய் எங்கேனும் வழித்துக் கொண்டு உட்கார்ந்து கொள்ள வேண்டும் என்ற பரபரப்பு அடிவயிற்றில் ஏற்பட்டது.

புலன்கள் அனைத்தையும் சேர்த்து எந்தவித விபரீதமும் இல்லாமல் இருக்கும்படியான கட்டுக் கோப்புக்கு அவன் கொண்டு வந்தான். அப்படிக் கொண்டு வரும் பொழுதே மெல்ல ஒரு தைரியமும ஏற்பட்டது.

கிழவியைப் பார்த்து கை கூப்பினான்.

''இருக்கறபோது இதை ஒண்ணும் கும்பிடலை.''

அந்தக் கிழவி வாய் விட்டுச் சிரித்தாள்.

அவன் அவளுடைய கேலியை லட்சியம் செய்யவே இல்லை. கூப்பிய கையைப் பிரிக்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனுடைய இயற்கை உபாதையை மனம் எப்படி அடக்கிற்றோ அதே போல மனம் வேறு விதத்தில் மும்முரம் கொள்ளத் தொடங்கியது. உடனே தோன்றிய நீ என்னை விட்டு நகர முடியாது. உன்னை நான் விடமாட்டேன் என்பது போல் கூப்பிய கையிலிருந்தும், உடம்பிலிருந்தும் கதிர்கள் வெளியே வந்தன.

''என்னா வேணும் உனக்கு?''

அவள் தலையை ஆட்டிக் கொண்டே கேட்டாள்.

''இது என்னா எனக்கு சொல்லிக் கொடு.''

''சொன்னா என்ன கிழிச்சுடுவ.''

அவள் ஆட்டிய தலையை உதறினாள். அதில் அலட்சியம் தெரிந்தது.

அவன் அந்தக் கேள்விக்கு பதில் சொல்லாதிருந்தான்.

''இதை தெரிஞ்சுக்கணும்னா செத்துப்போய் தெரிஞ்சுக்கலாம். சாகறதுக்கு முன்னாடியே தெரிஞ்சுக் கணும்னா அதுக்கு சில நியதிகள் இருக்கு, அது பிரகாரம் இருந்தாதான் செய்ய முடியும்.''

''என்னா நியதி?''

''ஏன் செஞ்சுடப் போறியா?''

''அது என் தலையெழுத்து. நியதி இருக்குன்னு சொல்றவ என்னான்னு சொல்லிக் கொடு.''

''எகிறி பேசினா சொல்லி கொடுத்துடுவாங்கற... கத்துக்கிறவனுக்கு பணிவு வேணும்டா. திமிரு இருந்தா



எங்கிட்ட காட்டறியா. நான் திமிரு காட்டினேன்னா என்னா பண்ணுவ.''

மேலேயுள்ள பழைய அரசங்கிளை ஒன்று முறிந்து படேரென்று எதிரே விழுந்தது, அரசங்கிளை விழுந்த இடத்திற்கும் அவன் கால் இருந்த இடத்திற்கும் சில அடிகளே தூரம் இருந்தன.

ரத்தினம் எந்த சலனமும் இல்லாமல் காலைக் கட்டிக் கொண்டு லேசாய் ஆடிக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

நீயாச்சு, அவளாச்சு ஏதாவது பார்த்துக்கோங்க என்பது போல் மௌனமாக இருந்தான்.

''எனக்கு பணிவா பேசி பழக்கமில்லை. பணிவா பேசறேன்.''

அவன் விழுந்து நமஸ்காரம் செய்தான்.

ஆபீஸிலிருந்து டை கட்டிக் கொண்டு வந்த ஆள். சிலை இருக்கிற இடத்தைவிட்டு தள்ளி ஒருவன் நமஸ்காரம் செய்கிறானே, எதற்காக என்று பார்த்துவிட்டு சட்டென்று அவன் வேலை ஞாபகம்வர விரைவாக அந்த இடத்தை விட்டு அகன்றான்.

இந்த முறை தீனதயாளன் உட்காரவில்லை கைகட்டி நின்றிருந்தான்.

அவள் தலையாட்டி முடி உதறி பின் முடிச்சு போட்டாள். சட்டென்று தன் முகத்தைத் தடவி நெட்டி முறித்தாள்.

''ஒண்ணும் செய்யறதுக்கில்லை. அதான் எனக்குப் பெரிய துக்கம்'' என்று ரத்தினத்தை பார்த்துச்சொன்னாள்.

ரத்தினம் சரி என்று தலையாட்டினான்.

''ஒண்ணு பொறந்தோம்னா எதுனா செய்யணும், செய்யறதுக்கு ஒண்ணுமே இல்லாத ஒரு விஷயம் இருந்து

என்ன பிரயோஜனம். சும்மா சுத்தி சுத்தி வருது இல்லை. ஒண்ணுமே இல்லாம எங்கனயோ உட்கார்ந்து கிடக்கறது. சாப்பிடறதுக்கில்லை. துணி தோய்க்கறதுக்கு இல்லை. குளிக்கறதுக்கு இல்லை. பல் தேய்க்கறதுக்கு இல்லை. எந்த உபாதையும் இல்லை. அதே மாதிரி ஒரு வேலையும் இல்லை.'' கிழவி சொன்னாள்.

''ஊர்ல எத்தினி பேர். கஷ்டப்படறாங்க. அவங்களுக்கு உதவி செய்யறது.''

''அதெல்லாம் செஞ்சுட முடியாது. ஏன் இங்க வந்து இப்படி கெஞ்சறானே. நான் அவனுக்கு ஏதாவது செய்யட்டு மான்னு போய் கேட்கணும். செய்யின்னுவாங்க.''

''யாரைக் கேட்கணும்?''

''எல்லாத்தையும் இங்க உட்கார்ந்துகிட்டே கேட்டுட்டா முடியுமா.''

''ரத்தினத்துக்கு மட்டுமே சொல்வியோ?''

''அவன் ஞானிடா. அவன் கூட நீ யாரு. துட்டு இருந்தா கொம்பன் ஆயிடுவியா. இதெல்லாம் அந்த பக்கம். இந்த பக்கம் துட்டுக்கு மரியாதையே இல்லை. திங்கறதுக்கும், உடுத்தறதுக்கம், தூங்கறதுக்கும்தானடா துட்டு, இது மூணுமே இல்லாதபோது துட்டை வச்சுட்டு என்னா பண்றது.''

''சரி, சொல்லிக் கொடு. இது என்னான்னு சொல்லிக் கொடு.''

''என்னா மயிரைப் புடுங்கப் போறேன்னு சொல்லுடா.''

கிழவி எகத்தாளமாகப் பேசிவிட்டு உரக்கச் சிரித்தாள். அவன் திண்டாடினான்.

கிழவி எழுந்திருந்தாள். மறுபடியும் அலுவலகத்திற்குள் நுழைய படியேறினாள். பின்னாலேயே நடக்க அவன் முயற்சி செய்தபோது ரத்தினம் தடுத்து விட்டான்.



''கேட்ட கேள்விக்கு பதில் சொல்ல முடியலை. அப்புறம் அந்த அம்மாளை ஏன் தொந்தரவு பண்ற.''

அவள் கதவைத் தாண்டிக் கொண்டு உள்ளே போனாள். கண்ணாடிக் கதவு அசையாமல் இருந்தது. ஆனாலும் அவள் உள்ளே நடப்பது தெரிந்தது

''நிஜமா, நிஜமா இப்படி நடக்குமா. என்னா ரத்தினம். ஏன் ஒண்ணும் சொல்லை. நான் என்னா பண்ணணும்னு ஏன் சொல்ல மாட்டேங்கற.''

''இதெல்லாம் சொல்லி கொடுத்து வராது. உன் புத்தி என்னா சொல்லுதோ அது பிரகாரம் நட. எனக்கு யார் சொல்லிக் கொடுத்தாங்க. உள்ள நல்ல மனசு இருந்தா நல்ல புத்தி தானா வரும். நல்ல செய்கை தானா வரும். இது சந்தேகம். அதனால் இது என்னா சொல்லிக் கொடு அப்படின்னு கேட்கற. அம்மா பதிலுக்கு ஒரு கேள்வி கேட்டாங்க. சொல்லிக் கொடுத்தா என்னா புடுங்கிடு வேன்னு கேட்டாங்க. நானும் அந்த கேள்வி கேட்கறேன். அதை சொல்லிக் கொடுத்தா என்னா புடுங்கிடுவ.''

''தெரியலையே.''

''அந்தக் கேள்விக்கு பதில் தெரியாத வரைக்கும் உங்ககூட அவங்க பேசமாட்டாங்க. உனக்கு தெளிவில்லாத போது உங்கிட்ட என்னா பேச்சு.'

''எனக்கு தெளிவு வரணும்னுதானய்யா பேசறேன்.''

''அதெல்லாம் அவங்க வேலையில்லை.''

''எனக்கு தெளிவு வரது யார் வேலை. கடவுள் வேலை இல்லையா.''

''இல்லை. உன் வேலை. நீ உட்கார்ந்து உன் கேள்விக்கு பதில் யோசனை பண்ணு. அப்புறம் வா. வா போகலாம்.''

வெளியே வந்ததும் ஆட்டோவுக்குக் கை தட்ட ரத்தினம் முயற்சி செய்ய, அவனை தடுத்து நிறுத்தினான்.

''இல்லை. என்னால் ஆட்டோல வர முடியாது.''

''பிறகு.''

''அப்படியே மொள்ள நடக்கலாம். எங்கேயாவது உட்கார்ந்து போகலாம்.''

''இது நல்ல விஷயம். நடக்கற மாதிரி நல்ல விஷயம் உலகத்துல எதுவும் இல்லை. என்னிக்கு கார்லயும், ஏரோப்ளேன்லயும், ரயில்லயும் பறக்க ஆரம்பிச்சோமோ. அப்போ நாம யோசிக்கறது அமைதியில்லாம போயிடுச்சு. அத்தினி வேகமா போனா எப்படி அமைதியா யோசிக்க முடியும். எப்படி யோசிக்கணும்கறதே தெரியாத போயிடுச்சு. நடந்தாதான் சரியா யோசிக்க முடியும். இது ஸ்பீடு. உடம்பு தாங்காது. இந்த வேகம் உடம்பு தாங்கலைன்னா புத்தியும் தாங்காது. இத்தினி வேகப்படறதுக்கு புத்தி பழக்கப்படுட்டு அதனால சூழ்நிலையே மாறிப் போச்சு.''

''நல்ல விஷயம்தானய்யா. ரெண்டரை மணி நேரத்துல டெல்லி போயிடலாம்.''

''எதுக்கு போய் என்னா பண்ணப் போறோம்.''

ரத்தினம் கேட்ட கேள்விக்கு தீனதயாளன் பதில் சொல்லாது இருந்தான்.

''போ....ஏரோப்ளேன்ல போ. டொமுக்குன்னு டிரெய்ன்ல போ. இது எல்லாம் உன் புத்தியை தொந்தரவு பண்ணும். அப்போ, நீ எது கத்துக்கணுமோ அதை கத்துக்க முடியாம போகும். சூட்சுமமான எந்த விஷயத்தையும் உன்னால் புரிஞ்சுக்க முடியாத போகும். உன்னால யாரையும் பார்க்க முடியாத போகும். பாட்டு கெட்டுப் போச்சு. அது தெரியுமா உனக்கு. இன்னும் மோசமா கெட்டுப் போகப் போகுது. அது தெரியுமா உனக்கு. யாராவது குழந்தைய மடியில போட்டு தாலாட்டு பாடறாங்களா, தடார் தடார்னு சத்தம்தான் போட்டு விட்டுடறாங்க. எல்லாருக்கும் எப்பவும் நாடித்துடிப்பு ஜாஸ்தியா போச்சு. நாடித்துடிப்பு ஜாஸ்தியா போற விஷயத்துக்குத்தான் ரொம்ப சந்தோஷம் இருக்கு. டி.வி.-யில பார்த்தேன் ரங்கராட்டினம். கன்னா பின்னான்னு சுத்தற ரங்கராட்டினம். அப்படியே நெட்டுக்குத்தா தலைகீழா வருது. எல்லாம் அலறி தவிக்கறாங்க. அவ்வளவு நாடித்துடிப்பு வேண்டியிருக்கு, அவ்ளோ போதை தேவைப்படுது. பனங்கள்ளு போறலை, சாராயம் போறலை, போதைப் பொருள் உறிஞ்சறான். நரம்புல ஊசிபோட்டுக்கறான். ஏன், இவன் எதிர்பார்க்கற படபடப்பு பனங்கள்ளுல இல்லை. நூறு மூட்டை தூக்கிகிட்டு மத்தியானம் போய் ஒரு பாட்டில் பனங்கள்ளு சாப்பிட்டோம்னா ரெண்டு மணி நேரம் அசந்து தூங்கலாம். எழுந்து முகம் கழுவிகிட்டு செடி ஓரமா உட்கார்ந்துட்டு வந்தோம்னா உடம்புல இருக்கற அத்தனை கெட்ட சமாசாரமும் வெளிய போயிடும். நல்லா பசிக்கும். பசும்பால் சாப்பிடணும். அரிசிக்கஞ்சி சாப்பிடணும். அரிசி சோறு சாப்பிடணும். அப்போதான் நல்லாயிருக்கும். பனங்கள்ளை ராத்திரி சாப்பிடக் கூடாது. அப்படியெல்லாம் பக்குவமா இருந்திருக்காங்கய்யா.

நடக்கறதுன்ற விஷயத்தை நாம விட்டுட்டோம். நடக்கறதுதான்யா நம்ம வேகம். ஓடறது கூட இல்லை. யார் தெரியுமா ஓடுவா? யார் கையில கத்தி வச்சிருக்கறானோ, யார் படையெடுத்து போறானோ அவன்தான் ஓடுவான். மத்த ஜனங்க எல்லாம் விறுவிறுன்னு நடந்துதான் போகும். வேகமா நடக்கிறதே சுகம்தான்'' என்று ரத்தினம் சொல்லி முடித்தான்.

அவளுக்கு சம்பூர்ணம் என்று பெயர். ஆனால். மனதில் நிறைய குறைகள் இருந்தன. அதில் முதல் குறை முப்பத்தியிரண்டு வயதாகியும் எதனாலோ திருமணம் என்ற விஷயம் தகையவேயில்லை. இரண்டு மூன்று முறை மிக நெருக்கத்தில் நடந்துவிடும் என்று நினைத்து கொண்டிருந்த போது மிக அல்பமான காரணங்களுக்காக அந்த சம்பந்தங்கள் நின்று போயின.

இரண்டு அண்ணன்கள், ஒரு தம்பி. அவர்கள் மூவரும் சம்பூர்ணத்தைப் பற்றி எந்தக் கவலையும் படாது திருமணம் செய்து கொண்டார்கள். மூத்தவன் இரண்டு திருமணம் செய்து கொண்டான். அவர்கள் யாரும் சம்பூர்ணம் திருமணம் செய்து கொள்ளவில்லையே என்று வருத்தப்படவே யில்லை. அவங்க அவங்க வாங்கிட்டு வந்த வரம் என்று வாய் கூசாது அவள் எதிரிலேயே சொன்னார்கள்.

''நானே வழிச்சிகிட்டுப்போய் கல்யாண வரம் வாங்கிட்டு வந்தா நல்லா இருக்குமாடா.'' பேசின சகோதரனுக்கு பதிலடி கொடுத்தபோது அவன் முகம் தூக்கி வைத்துக் கொண்டான்.

''இந்த மாதிரி பேசறதாலதான் உனக்கு கல்யாணமே ஆகமாட்டேங்குது'' என்று பதில் சொன்னான்.

''ஆகாட்டி போகுது போடா'' என்று அவள் சீறி விழுந்தாள்.

நாணப்பட்டு அச்சப்பட்டு மிருதுவாகப் பேசுகின்ற எல்லா இயல்பும் மெல்ல மெல்ல அவளிடமிருந்து நகர்ந்து கொண்டன.

நன்கு உழைத்தால் நன்கு சம்பாதிக்கலாம். நன்கு சம்பாதித்தால் நன்கு வாழலாம் என்கிற அடிப்படைத் தத்துவம் அவளுக்கு புரிந்து போய் இருந்தது.





சகோதரர்கள் ப்ளஸ்டூ பரீட்சையை நான்கைந்து முறை போட்டி போட்டுக் கொண்டு எழுத, அவள் முதல் முறையே உயர்ந்த மதிப்பெண்கள் வாங்கி தினத்தந்தியில் முகம் காட்டினாள்.

''எங்கப்பா சாராய கடை வைக்காம இருந்தா நான் எல்லா பாடத்திலும் நூறு வாங்கியிருப்பேன். சாராய கடை வச்சு ராத்திரி பன்னெண்டு மணிக்கு மேல ஒரே சத்தம் போட்டதுனால என்னால தொண்ணூறு தொண்ணூத்தி அஞ்சுன்னுதான் வாங்க முடிஞ்சுது''' என்று ஒரு வாரப் பத்திரிகைக்கு பேட்டி கொடுத்தாள்.

மற்ற எல்லாருடைய கதையைவிட இவளுடைய கதை நெஞ்சைத் தொட்டது.

''பொண்ணு நல்லா பேசுதே, என்னா ஜாதி'' என்று கேட்டார்கள்.

பின்தங்கிய வகுப்பு என்று தெரிந்ததும் முதலமைச்சரே அவளுடைய பேட்டியை குறிப்பிட்டு கடிதம் எழுதி 'உங்களுக்கு பெரிய கல்லூரியில் சேர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. உங்கள் விருப்பப் பாடத்தை நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்' என்று தெரிவித்தார்.

அவள் சந்தோஷமானாள்.

முதலமைச்சரின் காலில் விழுந்து 'அம்மா... அம்மா...' என்று கதறினாள்.

போதும் நிறுத்து என்று முதலமைச்சர் சிறிது நேரம் அவளை அழவிட்டு கடிந்து கொண்டார்.

அவள் கண்களைத் துடைத்துக்கொண்டு முதலமைச்சரைப் பார்த்து மலரச் சிரித்தாள்.

''இன்ஜினீயரிங்ல என்ன கோர்ஸ் எடுக்கப் போறே.''

''சிவில் இன்ஜினீயரிங்.''

''ஏன். எலெக்கட்ரானிக்ஸ் எடுக்கலையா?''

''எடுக்கலாம். எடுத்தா வெளியூர் ஓடணும், இல்லை இங்க இருக்கறடெலிபோன் டிபார்ட்மெண்ட்ல வேலை செய்யணும். மத்திய அரசாங்கத்துல வேலைசெய்யறதுக்கு சும்மா இருக்கலாம்.''

''ஏன் மத்திய அரசாங்கத்துக்கு என்ன குறைச்சல்?''

''எங்கனா போபால், பீஹார்னு போடுவான். எனக்கு இந்த இடத்தைவிட்டு போகறதுக்கு பிடிக்கலை.''

''அப்புறம்?''

''வெளிநாடு போகறதுக்கும் இஷ்டமில்லை.''

''பிறகு?''

''சிவில் இன்ஜினீயரிங் படிச்சு, இங்க இந்த தமிழ் நாட்ல நிறைய கட்டடம் கட்டணும்னு எனக்கு ஆசை. எலெக்ட்ரானிக்ஸ்ல ஏகப்பட்டபேர் வந்து விழறாங்க. தடுக் தடுக்குனு அது சப்ஜெக்ட் மாறிகிட்டிருக்கு. மெக்கானிக்கல் இன்ஜினீயரிங் எனக்கு கஷ்டம். ஒரு தொழிற்சாலையோட ஒரு பொம்மனாட்டி அவ்ளோ ஒண்ணும் பிரகாசமா வந்துட முடியாது.சிவில் இன்ஜினீயரிங்கனா நான் ஒண்டி ஆளா நின்னு கட்டடம் கட்டுவேன். என்னால முடியும்.''

''மேல ஏறணும். சாரத்துல நிக்கணும்.''

''நிக்கலாம் மேடம்.''

''சிமெண்ட். சுண்ணாம்புன்னு தூசா இருக்கும் வெயில்ல கஷ்டப்படணும்.''

''எல்லா நேரமும் வெயில்ல இருக்கத் தேவையில்லை மேடம். கொஞ்ச நேரம்தான். ஏ.ஸி. ரூமுக்குள்ளேயே இருந்தா போர்அடிச்சுடும். கொஞ்சம் வெளிய இப்படி உயரமான கட்டடத்துல நிக்கறது. மனசுக்கு நல்லாயிருக்கும். மறுபடியும் ஏ. ஸி-யில போய் புகுந்துக்க வேண்டியதுதான்''



என்று அவள் சிரிப்போடு சொல்ல, முதலமைச்சரும் வாய் விட்டுச் சிரித்தார்.

''ரொம்ப சாமர்த்தியமா இருக்கியே.''

''இல்லைன்னா ஆம்பளைங்க ஏமாத்திடுவாங்கம்மா'' என்று மறுபடி சொல்ல, மீண்டும் அந்த இடத்தில் பெருஞ்சிரிப்பு ஏற்பட்டது.

''ஏன் உனக்கு ஆம்பளைங்கன்னா புடிக்காதா?''

முதலமைச்சர் கண்களை சுருக்கிக் கொண்டு கேட்டார்.

''புடிக்கும் புடிக்காதுன்றதவிட கொஞ்சம் ஜாக்கிரதையா இருக்கணும். எப்படின்னா...'' என்று ஆரம்பித்து விட்டு சட்டென்று நிறுத்திக் கொண்டாள்.

''எப்படின்னான்னு ஆரம்பிச்ச. சொல்லு, எப்படி?''

''வேணாம்மா. இந்த இடத்துல வேணாம்.''

''ஏன்?''

''சுத்தி ஆம்பளைங்க இருக்காங்களே.''

''அப்போ... ஆம்பளைன்னா பயம் உனக்கு.''

''இல்லைம்மா. சொல்லிடுவேன். உங்களுக்கு கஷ்டம் வந்துடக்கூடாதுன்னு வாயை மூடிட்டு இருக்கேன்.''

''எனக்கா... கஷ்டமா... சொல்லு?''

''நாம வேற ஆம்பளைங்க வேற. நாம மாடு வளர்க்கறோம். நாம நாய் வளர்க்கறோம். நாம யானை வளர்க்கறோம். அதுக்காக ரொம்ப கட்டி கொஞ்சிட முடியுமா? அது வேற. நாம வேற. மிருகம் எப்போ வேணா பாயும். என்னா வேணா செய்யும்கற ஜாக்கிரதையோட நாம அந்த மிருகத்துகிட்ட பழகறதில்லையா. அது மாதிரிதான் ஆம்பளைங்களோட பழகணும்.''

அந்த இடத்தில் குண்டூசி விழும் நிசப்தம் நிலவியது.

மெல்ல யாரோ கை தட்டினார்கள்.

முதலமைச்சர் தலைகுனிந்து கொண்டிருந்தார்.

''நீ சொல்றது உனக்கு சரியா இருக்கலாம். ஆனால், வெளிய ரொம்ப சொல்லாத.''

''பயந்தாபோல் இருக்க சொல்றீங்களா?''

''இல்லை. யாரும் உன் மேல பாய்ஞ்சுடக் கூடாதில்லை. அந்தக் கவலையில சொன்னேன்.'' முதல்வர் சொன்னது அவளுக்குப் புரிந்தது. மறுபடியும் மண்டியிட்டு நெற்றி நிலம் பட முதலமைச்சர் காலில் விழுந்து எழுந்தாள்.

முதலமைச்சர் அவள் கைகளை இறுகப் பற்றிக் கொண்டார்.

'வாழ்க... வாழ்க...' என்று ஆசீர்வதித்தார்.

உள்ளங்கையால் அவள் உச்சந்தலையைத் தொட்டார்.

அவளுக்கு இன்ஜினீயரிங் கல்லூரியில் ராஜ வரவேற்பு இருந்தது. அவள் பேட்டியில் முதலமைச்சரை தெய்வம் என்று சொன்னாள். மனதில் வைத்து வழிபடுவதாகத் தெரிவித்தாள். இந்த நன்றியை என் வெற்றியில் காட்டுவேன் என்று சொன்னாள்.

முதல் வருடம் வகுப்பில் முதல் மாணவியாக தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தியை முதலமைச்சருக்கு எழுதி வாசலில் மூன்று மணி நேரம் காத்திருந்து அவர்கள் வந்ததும் கைகூப்பினாள்.

''உன் லெட்டர் படிச்சேன். நல்லாயிரு, நல்லாயிரு.''

மறுபடியும் முதலமைச்சரோடு நாற்பது வினாடிகள் பேச முடிந்தது. விரல் நுனியைத் தொட முடிந்தது.

அவள் குதூகலித்தாள். சந்தோஷமானாள்.



அடிக்கடி போய் தொந்தரவு பண்ணுவானேன். அவங்க கூப்பிட்டா போகலாம் என்று சொல்லி வருடா வருடம் தன்னுடைய வளர்ச்சியைக் கடிதம் மூலம் எழுதி அனுப்பினாள். அவளுடைய சகோதரர்கள் பலமுறை பல்வேறு விஷயங்களுக்கு முதலமைச்சரை பார்க்கலாம் என்று அழைத்தபோதும் சுத்தமாக மறுத்துவிட்டாள்.

''ஒரு தடவை பிச்சை போட்டாங்க. அதை வாங்கி அதுல சோறு தின்றதுதான் மரியாதை. சும்மா சும்மா போய் நின்னா எனக்கும் அசிங்கம். அவங்களுக்கும் கஷ்டம்'' என்று ஒரே வார்த்தையில் மறுத்து விட்டாள்.

அவள் படிப்புக்கு அரசு உதவி செய்தது.

பதின்மூன்று வயதில் அப்பாவின் அட்டகாசத்தால் சுருங்கிப்போன குடும்பம் பத்தொன்பது வயதில் சம்பூர்ணத்தால் மதிப்பு பெற்றது. அந்த வீட்டின் நம்பிக்கை நட்சத்திரமாக அவள் விளங்கினாள்.

அவர்களுடைய சொத்துபத்து எல்லாவற்றையும் விற்று அவளுக்கென்று வைத்திருந்த நகைகளையும் விற்று சாராயக்கடை துவங்கிய தகப்பன் அதிலுள்ள கடும் போட்டியைச் சமாளிக்க முடியாமல் ரௌடியின் தொந்தரவை எதிர்கொள்ள முடியாமல் சட்டென்று ஒரு நாள் கடையை காலி செய்துவிட்டு கடன்காரர்களுக்கு நாமம் சார்த்திவிட்டு ஊரைவிட்டு வெளியேறி விட்டார்.

கடன்காரர்கள் வீட்டை மொய்த்துக் கொண்டார்கள். அம்மாவும் அவளுமே பதில் சொல்லும்படியாக இருந்தது.

''நீ வாடி. கடனுக்கு பதிலா'' என்று ஒருவன் கூப்பிட, அம்மா அரிவாள் எடுத்துக்கொண்டுவர, அவனுக்கும் அம்மாவுக்கும் கைகலப்பு ஏற்பட்டு அவன் அரிவாளை பிடுங்கிப் போட்டு அம்மாவை மூர்க்கமாகத் தாக்கினான்.

அம்மா அந்த அடியின் வேகம் தாங்காமல் நான்கு வருடம் படுக்கையில் சுருண்டு கிடந்தாள். மெல்ல இறந்து போனாள்.

''அந்த நாயை நான் சும்மா விடமாட்டேன். அவனை அழிச்சுட்டுத்தான் நான் மேல கடவுள்கிட்ட போவேன்'' என்று உயிர் பிரியும்போதும் அடித்தவனை சபித்துக் கொண்டே உயிர் பிரிந்தாள்.

அப்பாவாலும், அண்ணன்களாலும், அந்நியர்களாலும் அவள் பாதிக்கப்பட்டு ஆண்கள் மீது வெறுப்பாகவே வளர்ந்தாள். அதன் காரணமாகவே எடுத்துவுடன் முறைத்துக் கொண்டாள். பேசும்போதே கை உயர்த்தினாள். சர்வ சாதாரணமாக கெட்ட வார்த்தைகள் இறைத்தாள்.

''ஏய்... இதுங்ககூட வச்சிக்காதடா. இது பார்ட்டி ஆளு... நேரா போய் சி. எம். கிட்ட வத்திவச்சிடும். அப்புறம் உன் கதை கந்தல்தான். எதுனா சொன்னா ஆமா ஆமான்னு சொல்லிட்டுப் போயிடு. இல்லை. வேகமா இங்கிலீஷ்ல பேசு.''

''இங்கிலீஷ்ல பேசினா என்ன ஆகும்?''

''சைலண்ட் ஆயிடும்.''

நான்காம் வருடம் காதுபட ஒரு பையன் பேசினான்.

மறுபடியும் அவள் கோபமானாள்.

அப்படியென்னா இங்கிலீஷ் யாருக்கும் புரியாத ஒரு விஷயமா. பேச முடியாத பாஷையா.

தனியாக டியூஷன் வைத்து ஆங்கிலம் சரளமாகப் பேசவேண்டுமென்று படாதபாடு பட்டாள். அதையும் தன் வசப்படுத்தினாள்.

பாதி படிப்பு முடிக்கிற நேரத்தில் ஆட்சிமாறிப் போயிற்று.



இவளை மெல்ல வம்புக்கு இழுக்க ஹாஸ்டல் மாணவர்கள் முயற்சி செய்ய, வாங்கடா நான் ரெடி என்று கத்தி காட்டினாள்.

மாணவர்கள் காணாமல் போனார்கள்.

நாம பொம்பளைங்கறத மறந்துட்டு இடுப்புல புடவைய சொருகிட்டு, கத்தியை காட்டி கை தெரிஞ்சாலும் பரவாயில்லை. கால் தெரிஞ்சாலும் பரவாயில்லை அப்படின்னு உருட்டுக்கட்டையோட கீழ இறங்கினோம்னா ஓடியே போயிடுவானுங்க.

அவன் அடிச்சா நான் தாங்குவேன். நான் அடிச்சா அவன் தாங்குவானா. நான் ரெண்டு அறை. நீ ரெண்டு அறை. வா பார்க்கலாம் என்று மாணவனை கைதட்டிக் கூப்பிட, யாரும் எதிரே வந்து நிற்கவில்லை.

ஒரு முறை சகமாணவியின் முடியைப் பிடித்து ஒருவன் இழுக்க, அவள் மிகப் பலத்தோடு அவன் கழுத்தில் குத்தி அவனைக் கீழே தள்ளினாள். இடுப்பில் மிதித்தாள். இருபது மாணவிகள் சேர்ந்து கொண்டு அவனை செருப்பால் அடித்தார்கள்.

மிகப் பெரிய கலாட்டாவாக அது மாறி ஒரு மாதம் ஹாஸ்டல் மூடப்பட்டது.

இவர்களின் அத்துமீறலை மாணவிகள் சொல்ல, மாணவர்கள் மூன்று பேரை போலீஸ் கைதுசெய்தது. கோர்ட் அவர்களை கடுமையாக எச்சரித்தது. மாணவர்கள் மூன்று பேரும் பரீட்சை எழுதக்கூடாது என்று உத்தரவிட்டது.

அந்த வெற்றியை அவர்கள் பட்டாக வெடித்தும் இனிப்பு வழங்கியும் கொண்டாடினார்கள்.

'டேய்... நாய்களா' என்று அந்த மாணவனின் தோழர்களை கூப்பிட்டார்கள்.

'செருப்பு பிஞ்சுடும்' என்று எச்சரித்தார்கள்.

இன்ஜினீயரிங் கல்லூரி மாணவிகளுக்கு தன்னிகரற்ற தலைவியாய் அவள் விளங்கினாள்.

வெறும் படிப்பு போதாது. அனுபவம் வேண்டும் என்பதால் அவள் பெரிய கட்டட கலைஞரோடு சேர்ந்து கொண்டாள்.

''நீ படிச்சதெல்லாம் இருக்கட்டும். ஓரம் வை. அது அடிப்படை. இப்போ கத்துக்க வேண்டியது யார் யார் எப்படியெல்லாம் ஏமாத்தறான். அவன் ஏமாத்தாம நாம எப்படித் தடுக்கறது, நாம எப்படி ஏமாத்தறது, இதுதான்'' என்று சொல்ல, அவள் வியப்போடு பார்த்தாள்.

''ஏன் அப்படி பார்க்கற. நாம எதுக்கு ஏமாத்தணும்னு நினைக்கறியா. வா, சாயந்தரம் ஆறு மணிக்கு லஞ்சம் கேட்கறதுக்கு ஒருவன் வருவான். அவனை என்ன பண்றதுன்னு நீதான் எனக்கு சொல்லணும்.''

லஞ்சம் கேட்க வந்த அரசு அதிகாரியை அவள் வியப்போடு பார்த்தாள்.

''இப்படி வாய்கூசாத லஞ்சம் கேட்கறீங்களே, வெட்கமா இல்லை. இதுக்கு வேற தொழில் பண்ணிட்டு போகலாமே'' என்று முதலாளி இருக்கும் பொழுதே சீறி விழுந்தாள்.

''ஒண்ணுமில்லை. மாடிலேந்து தள்ளிட்டு கால் தடுக்கி விழுந்துட்டீங்கன்னு சொன்னா என்னா பண்ணுவீங்க. ஆறாவது மாடிலேர்ந்து விழுந்தா எலும்பு தேறுமா. தள்ளிடட்டுமா'' என்று அவன் மீது கை வைக்க, அவன் அலறத் துவங்கினான்.

''நான் கேட்க மாட்டேன், தப்பு. மன்னிச்சுடும்மா'' என்று அவள் காலைத் தொட்டான். மடமடவென்று கீழே இறங்கிப் போனான்.



மறுநாளிலிருந்தே ஏகப்பட்ட தொந்தரவுகள் அங்கு வரத் துவங்கின.

''புரிஞ்சு போச்சா. நீபாட்டுக்கு கத்திட்ட. அவன் எல்லாம் தப்பு, இதுக்கு முன்னாடி கையெழுத்து வாங்கினதும் செல்லாது அப்படின்னு கத்த ஆரம்பிச்சுட்டான். அரசாங்க விதிகளை மீறிய குற்றத்திற்காகன்னு நமக்கு நோட்டீஸ் அனுப்புவான்.''

''என்ன சார் பண்றது?''

''கூட லஞ்சம் கொடுக்கணும். அதனால உன் கூச்சல் அலட்டலெல்லாம் காலேஜோட வச்சுக்க. இங்க செல்லுபடியாகாது. நான் பேசறேன் பார்.''

மறுபடியும் ஆறாவது மாடிக்கு அந்த அதிகாரியை வரவழைத்து, அவர் வந்தவுடன் டேபிளில் காசு கட்டுகளைப் பரப்ப, அவன் வாரி துணியில் சுருட்டிக் கொண்டு கீழிறங்கிப் போனான். கீழே இறங்கும்போது திரும்பிப் பார்த்தான்.

''அந்தப் பொட்டை நாயை இந்த இடத்தைவிட்டு துரத்திடுங்க சார். ஏன் அந்தப் பீடையை வச்சிருக்கீங்க'' என்று உரக்கக் கத்தினான்.

அவள் முறைக்க, அவன் ஓடிப் போனான்.

கீழே போய் சம்பூர்ணம் தூணைப் பிடித்துக் கொண்டு அழ, அறுபது வயது முதலாளி அவளைச் சமாதானப் படுத்தினான்.

''நீ ரொம்ப நல்லவோ. ரொம்ப சின்ஸியர். இது மட்டும் போறாது. அனுசரணையா, நெளிவு சுளிவு தெரிஞ்சவளா இருக்கணும். ஆடற மாட்டை ஆடிக் கறக்கணும். பாடற மாட்டை பாடிக் கறக்கணும். பத்தாயிரம் ரூவா லஞ்சம் கேட்கறானா. பதினஞ்சாயிரம் ரூவா கொடு.

''இல்லை சார்! சத்தியம் பண்றேன். எழுதி கொடுக்கறதவிட சம்பூர்ணம் சத்தியம் பண்ணா அது நிக்கும் சார்.''

''உன் சத்தியம் போறும்.''

அவளுக்கு அடையாறு காந்திநகர் கெனால் ரோடு பக்கம்தெற்கத்திக்காற்று பிய்த்துக்கொண்டு வரும்படியாக ஒரு இரண்டாவது அடுக்கு மாடிவீடு கிடைத்தது. இழைத்து இழைத்து உள்ளுக்குள் கட்டிக் கொண்டாள். தன் சொல் பேச்சைக் கேட்கின்ற தம்பியையும் அவன் மனைவியையும் தன்னோடு தங்க வைத்துக் கொண்டாள்.

மூன்று அறைகள் கொண்ட அந்த இடத்தில் ஒன்றை தன் படுக்கை அறையாகவும், இன்னொன்றை தான் வேலை செய்யும் இடமாகவும் வைத்துக்கொண்டு மற்ற இடத்தில் அவர்கள் புழங்க விட்டாள்.

தம்பியின் மகனை தன் மகன் போல் பாவிப்பாள்.

வேண்டுமென்றே முறுக்கு தாலிச்சங்கிலியை மாட்டிக் கொண்டு அந்தக் குழந்தையை இடுக்கிக் கொண்டு காய்கறி வாங்கப் போனாள்.

''என்னா உங்க பையனா?'' என்கிறபோது, ஆமாம் என்று சொன்னாள்.

அவளுக்கு குடும்பத்தின் எல்லா சௌகரியங்களும் இருந்தன. ஆண் என்ற துணை மட்டுமே இல்லாமல் இருந்தது. அது அவசியமென்றும் அவள் நினைக்கவில்லை.

''எப்போனா டி.வி. பார்க்கறபோது பத்திக்கும். ரெண்டு நிமிஷத்துல அணைஞ்சுடும். அந்த ரெண்டு நிமிஷம் பத்திக்கிட்டு அணையறதுக்காக வாழ்க்கை முழுசும் இவனுங்ககிட்ட தலையை கொடுக்கணுமா அப்படின்னு



சுத்தமா அந்த எண்ணத்தையே உதறிட்டேன்'' என்று தன் முதலாளியிடம் சொன்னாள்.

அவன் முன்னிலும் கடுமையாக உழைத்தாள்.

அவளுக்கு சம்பளம் அதிகம் உயர்த்தினார்கள். மிக மரியாதையாக வைத்துக் கொண்டார்கள்.

சம்பூர்ணத்திற்கு அதிகாரங்கள் பலது கொடுக்கப் பட்டன. பயமும் அதிகரித்தது. மிகமிகத் தந்திரம் மிக்கவளாக மாறினாள். காசின் மீது ஆசை வந்தது. பத்து ஆட்கள் வேலை செய்ய வேண்டிய இடத்தில் நாலு ஆட்களை வைத்து வேலை செய்துவிட்டு கூடுதலாக காசு வாங்கிக் கொள்வது, செங்கல், மணல், கருங்கல் ஜல்லியில் கமிஷன் அடிப்பதும், இரும்புக்கம்பியை பிரித்து வேறு இடத்திற்குக் கொண்டு போய் விற்று வருவதும் எளிதாகச் செய்தாள். ஒரு முறை சந்தேகப்பட்டு அவர்கள் கேட்ட போது ''விட்டுடுங்களேன். நான் வேற இடத்துக்கு போறேன்.'' என்று வீட்டில் உட்கார்ந்திருந்தாள்.

மூன்று நாட்கள் கழித்து அவர்கள் மறுபடியும் கூப்பிட்டு சமாதானம் செய்தார்கள்.

அவள் மறுத்து விட்டாள்.

''நானே செய்யலாம் என்றிருக்கிறேன்'' என்று பேச ஆரம்பித்தாள்.

அவளுக்கு சப்-காண்ட்ராக்ட் விடுவதாக அவர்கள் சொன்னார்கள். 'நாங்கள் எடுக்கின்ற ஆர்டரை எங்களுக்காக நீ செய்து கொடு' என்று சொன்னார்கள் ஒரு தொகை பேசி வாங்கி வந்து இவளுக்கு ஒரு தொகை கொடுத்தார்கள். அந்தத் தொகையைவிட கம்மியான தொகைக்கு கட்டடங்கள் எழுப்பத் துவங்கினாள்.

சுவர் எழுப்புவதில் நேரம்தான் மிக முக்கியமான விஷயம். திறமையன ஒரு கட்டுமானப் பணிக்கு குழு

இருப்பதுதான் நல்லது. திறமையான குழு தொடர்ந்து இருக்கவேண்டுமென்றால் நன்கு காசு கொடுத்து நல்ல படியாக வைத்துக் கொள்ள வேண்டும். அதிகமும் கொடுத்து விடக்கூடாது. குறைவாகவும் இருக்கக்கூடாது அடுத்தடுத்த வாய்ப்புகள் இருக்க வேண்டுமென்ற நம்பிக்கையை கொடுக்க வேண்டும். முந்நூற்று அறுபத்தைந்து நாட்களும் வேலை இருக்கிறதென்று தெளிவாகச் சொல்ல வேண்டும். அதே நேரம் உழைத்தது போதும், போய் ஓய்வெடுத்துக் கொண்டு வா என்று அனுப்பவும் தெரிந்து கொள்ள வேண்டும்.

அவளுக்கு அந்த சாமர்த்தியம் இருந்தது.

சும்மா இல்லாமல், நகத்தைக் கடித்துக் கொண்டு யோசனை செய்யாமல் மேஸ்திரிகளோடும், சித்தாள்களோடும் அவள் படியேறி இறங்கி என்ன செய்யலாம், ஏது செய்யலாம் என்று விவாதித்து வேலை செய்தாள்.

சப்-காண்ட்ராக்ட் எடுப்பதாகச் சொன்னதும் அவளுக்கு வேலை கொடுத்திருந்த கம்பெனி அவர்கள் கட்டிய கட்டடத்தின் ஏழாவது மாடியை கட்டும்படி அவளுக்கு வேலை கொடுத்தார்கள்.

நாலாபக்கமும் கண்ணாடி போட்டு பளபளப்பாக இருந்த அந்தக் கட்டடத்தின் ஏழாவது மாடியை கட்டித் தருவதாக அவள் கையெழுத்திட்டாள்.

‘‘கட்டடம் கட்டறேன்னு கண்ட ஆளுங்களை உள்ள நுழைக்கக்கூடாது. நுழைய விடமாட்டோம். இது ஆபீஸ். அதுபாட்டுக்கு நடந்துட்டிருக்கும். நீ மேல போகணும்னா உன் வழியை நீதான் பார்த்துக்கணும். ஏதாவது லிஃப்ட் வெளிப்பக்கமாக வச்சக்கணும். மூணு பக்கமும் கண்ணாடி இருக்கற கட்டடம் இது. ஒரு கண்ணாடி விரிசல் விட்டாகூட



ஒண்ணுக்கு ரெண்டா நான் விலை கேட்பேன். கார் நிறுத்தற இடத்துல வேலையாட்கள் இருக்கக்கூடாது. கார்மேல கல்லோ. தூசோ விழக்கூடாது. காலையில நிறுத்தற காரை சாயந்திரம் நீங்கதான் துடைச்சு தரணும், என்று பலவகையாக கண்டிஷன்கள் போடப்பட்டன.

அவள் லேசாக கோபமானாள்.

‘‘கட்டடம் கட்டறதபத்தி தெரியுமா உங்களுக்கு. எங்கனா கட்டடம் கட்டி எடுத்தாந்து மேல வைக்கறதா அந்த மாதிரியான வேலையா இது? நான் அப்படி செய்யலை. நீ சொன்ன விஷயத்துல எது வேணாலும் ஆகும். நடந்தால் நான் பொறுப்பு எடுத்துக்கறேன். அவ்ளோதான். நடக்கவே நடக்காதுன்னு எவனும் சொல்ல முடியாது. ஒரு கண்ணாடி இல்லை. ஒன்பது கண்ணாடி உடையும். உடைஞ்சா உடைஞ்சதை மாத்தி கொடுக்கறதுக்கு எனக்குத் தெரியும். கார் துடைக்கறதுக்கு நான் ஆள் கொடுக்க முடியாது. அதுக்கு நீங்க வச்சுக்கோங்க. கார் மேல கல்லோ, வேற எதுவோ விழுந்தா நான் சரிபண்ணித் தரேன். நஷ்டஈடு நான் எடுத்துக்கறேன். எல்லா பக்கமும் கார் நிறுத்தி எதுவும் விழக்கூடாதுன்னு சொன்னா இது முட்டாள்தனம். ரெண்டு பக்கம் நீங்க எடுத்துக்கோங்க, ரெண்டு பக்கம் எனக்கு வேணும். வெயில் இல்லாத எதிர்ப்பக்கம் நீங்க காரை நிறுத்திக்கோங்க. கோயில் இருக்கற பக்கம் நான் போய் பார்த்துக்கறேன்.

சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை லீவுநாள் எல்லா நாள்லயும் வேலை இருக்கும். உள்ள வர வேண்டியவங்களோட நான் வரத்தான் செய்வேன். உள் பக்கமாக லிஃப்ட்ல சாமான்கள் போகும். வேலையாட்களும் போவாங்க. நான் லிஃப்ட்ல போக முடியாது. உள்ளதான் வருவேன். எனக்கு இங்க ஆறாவது மாடியில ஒரு தனி

ஆபீஸ் வேணும். ஒரு ரூம் வேணும். வாடகை எவ்வளவுன்னு சொல்லு? கொடுத்துடறேன். கொடுத்தா சீக்கிரம் வேலையாகும். இல்லியா லேட் ஆகும்.''

கட்டடத்தின் சொந்தக்காரருக்கு பதில் நிபந்தனை களைப் போட்டாள். அவர்கள் இருவரும் பரஸ்பரம் பேசிக் கொண்டு அவள் சொன்ன விஷயங்களை சம்மதித்தார்கள்.

ஏழாவது மாடியிலிருந்து பத்தடி தள்ளி சாரம் இருந்தது. மெல்லிய நைலான் கயிறு வலை வாங்கி வந்து கட்டடத்தின் மீது போர்த்தியது போல் கட்டினாள். கீழே இழுத்து நைலான் வலையை விறைப்பாக வைத்தாள். மேலிருந்து ஏதேனும் விழுந்தாலும் நைலான் வலையில் பட்டு வெளியே விழும். உள்ளுக்கு கண்ணாடியைத் தாக்காது. சிறு கற்கள்கூட நைலான் கயிற்றை தாண்டிப் போகாது. ஒருவேளை சிதறிய சிமெண்டுகள் வேண்டு மானாலும் விழலாம். அவைகளை துடைத்து எடுத்து விட முடியும்.

அவளுக்கு காண்ட்ராக்ட் கொடுத்த அவள் பழைய கம்பெனி இந்த யுக்தியை பார்த்துவிட்டு வியந்தது.

''என்ன மூளை உனக்கு. இப்படி நைலான் வலை கட்டணும்னு எப்படி தோணிச்சி. யார் சொல்லிக் கொடுத்தா? எங்கயாவது பார்த்தியா?'' என்று கேட்க, இதை ஒரு பழைய ஆங்கிலப் புத்தகத்தில் படித்ததாகச் சொன்னாள்.

''அமெரிக்காவிலிருந்து மாதா மாதம் வெளிவரும் கட்டடக் கலைஞர்களுக்கான பத்திரிகையில் இந்த வகை கட்டுகிற விளம்பரம் இருந்ததாகவும் அங்கே கட்டடங்கள் கட்டும்போது இப்படிச் செய்வது இயல்பென்றும் தெரிய வந்தது. அந்த மாதிரி வலைகள் அங்கிருந்து தருவிக்க முடியாது. அவை இன்னும் உறுதியானவை. பெரும்





கற்களையும் தாங்கக் கூடியவை. அதற்குப் பதிலாய் வெறும் மீன் பிடி வலைகளை வாங்கி போட்டு விட்டேன். நன்றாக உற்றுக் கவனித்தால் இவை அனைத்தும் பழைய வலைகள். ஆனால், புதிய வலைகள் வாங்கியதாக கட்டட முதலாளியிடம் சொல்லியிருக்கிறேன்'' என்று கண் சிமிட்டினாள்.

ஆறாவது மாடியிலிருந்து, ஏழாவது மாடிவரை கட்டப் பட்டிருக்கின்ற நைலான் வலைகள் பழையதா, புதிதா என்று எவராலும் கண்டுபிடிக்க முடியாது. அந்தச் சுற்றுச் சுவர்களை மிகக் கவனமாக அவள் கட்டத் துவங்கினாள்.

''ஒரு கண்ணாடிகூட உடையக் கூடாது'' என்று மறுபடி மறுபடி சொல்லி எல்லோரையும் கவனப் படுத்தினாள்.

மூன்று நாட்களில் சுற்றுச்சுவர்கள் எழுப்பப்பட்டன. வலைகள் அகற்றப்பட்டன. சுற்றுச்சுவருக்கு உள்பக்கமாக அந்த வலைகள் போடப்பட்டன. உள்பக்கமாக இருக்கின்ற அந்த வலைகளைத் தாண்டி வெளியே எதுவுமே வராது.

இரண்டையுமே வேடிக்கை பார்த்த கட்டடச் சொந்தக்காரர்கள் நேரிலே வந்து பாராட்டினார்கள்.

அவள் சந்தோஷமானாள். ஒரு சிறு தவறுகூட செய்யாமல் கட்டிய கொத்தனார்களையும், கூலியாட் களையும் அவளும் பாராட்டினாள்.

''சீக்கிரம் முடிச்சு கொடுங்கப்பா. கூடவே தர்றேன்'' என்று சிறிதுகூட வஞ்சனையின்றி சொன்னாள்.

அவர்கள் சந்தோஷமானார்கள்.

''கூட துட்டு கொடுப்பாங்க. நிறுத்திக்கோங்கடா. கண்டதை கேட்டு அசிங்கப்படாதீங்க.''

வயதான ஒரு ஆள் சொல்ல, அவள் நின்று அவர்களைத் திரும்பிப் பார்த்தாள்.

''இவனுங்க எதுனா கேட்பாங்க. நீ திரும்பிப்போ.''

அந்த வயதான ஆள் வேண்டுமென்றே அவளை நகர்த்துவது போல் நடித்தான்.

''என்னா வேணும். என்னா வேணும் உங்களுக்கு?''

''திங்கறதுக்கு சோறு வேணும். வெறும் சோறு போறாது. கறிபோட்டு அவிச்சு கொடுக்கணும். தினமும் அசைவ சாப்பாடு சாப்பிடணும்னா முடியற காரியமா. ஒரு கிலோ கறி நூத்தி நாப்பது ரூபா விக்குது. அதுவும் இளம் ஆடா கேட்பானுங்க.''

''சரி. கொடுத்தா போச்சு. நாப்பது பேர்தானே. இங்கேயே ஆக்கிட சொல்லிடலாம்.''

அவர்கள் மிகப் பெரிதாக காவிப் பற்கள் தெரிய சிரித்தார்கள்.

''வெறும் சோறு மட்டும் போட்டா போதுமா. உடனே, வெத்தலை பாக்கு வேணும்னு கேட்பான். பன்னாடைப் பசங்க. இவங்களுக்கு கொடுத்து மாளாது. நீ போன்னு சொல்றனே.''

அந்தக் கிழவர் மறுபடியும் நடிக்கத் துவங்க, அவரைப் பார்த்து, ''போறும் ரொம்ப அலட்ட வேண்டாம்'' என்று சொல்ல, அங்கு போட்டா போட்டி ஏற்பட்டது.

அவள் அதட்டி நிறுத்தினாள். வெளியிலிருந்து ஆள் வரும் என்று சொன்னாள்.

''கூட செலவாகும்மா.''

அருகிலிருந்து மேஸ்திரிகள் அவள் காதருகே கிசுகிசுத்தார்கள்.

''நாலஞ்சு நாள் நல்லா ருசியா போடுவேன். அஞ்சாம் நாள் வேலை சரியா நடக்கலைன்னு சொல்லி சட்டுனு அந்த



ஆளை நிறுத்திடுவேன். வெறும் ஹோட்டல்லேர்ந்து சாப்பாடு வாங்கிக் கொடுப்பேன். செத்துடுவாங்க. வேலை சரியா செய். மறுபடியும் கறிச்சோறுன்னு ரெண்டு நாள் காய விடுவேன். வேலை வேகமா நடக்கும். மறுபடியும் கறிச் சோறுக்கு ஏற்பாடு பண்ணுவேன்'' என்று அவள் அடிக் குரலில் பேச, மூன்று மேஸ்திரிகளும் வாயடைத்துப் போனார்கள்.

''இதைப் போய் அவங்ககிட்ட சொன்னீங்க உங்களை தூக்கி எறிஞ்சுடுவேன்'' என்று அவர்களையும் மிரட்டி வைத்தாள்.

'இந்தப் பொம்பளை பெரிய ராட்சசியா இருக்காப்பா. ஒண்ணுமே புரியலை. எப்போ எங்க பாய் வான்னே தெரியலை' என்று மேஸ்திரிகள் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டார்கள்.

திருநெல்வேலி பக்கமிருந்து வந்திருந்த ஒரு பெரிய வரை அசைவ சாப்பாடு சமைக்க ஏற்பாடு செய்யச் சொல்லி வெறும் கறிச்சோறு மட்டுமில்லாமல் சில மீன் துண்டங்கள் போட்டு குழம்பும் செய்யச் சொன்னாள்.

ஒரு மணிக்கு வாசனை பின்பக்கம் கிறங்கடிக்கும். அலுவலகத்திலிருந்த சில பியூன்கள் கூட வந்து தட்டில் ஏந்தி சோறு வாங்கிக் கொண்டு போனார்கள். அதிகாரிகள் கேட்கிறார்கள் என்று மீன் குழம்பு வாங்கிப் போனார்கள்.

''அவங்களுக்கே நிறைய போகுதே என்னா செய்யறது?''

அசைவ சமையல்காரர் கேள்வி கேட்டார்.

''கூட செய்யுங்க. நான் காசு தரேன்.''

அவள் ஆயிரம் ரூபாய் எடுத்து நீட்டினாள்.

‘‘இன்னும் நல்லா ருசியா பண்ணுங்க. வாசனையா பண்ணுங்க. நல்ல மீனா வாங்கிட்டு வாங்க. கூட ஒரு ஆளை வச்சுக்கோங்க’’ என்று சொன்னாள்.

‘‘இதனால நமக்கு நஷ்டம்தானுங்களே. கிட்டத்தட்ட பதினேழு தட்டு கறிச்சோறும், குழம்பும் போவுது.

‘‘யார் யாருக்கு போகுதுன்னு பார்த்து எங்கிட்ட சொல்லு?’’

சொன்னவனிடம் அவள் உத்தரவு கொடுத்தாள்.

வந்து சொன்னவுடன் அந்த அதிகாரிகளைப் போய் பார்த்தாள்.

‘‘பின்னால ஒரு இடத்துல கேன்டீன் கட்டிக்கறேங்க. நானே லீசுக்கு எடுத்துவிடலாம்னு இருக்கேன். அதுக்கு அனுமதி கொடுக்கணும். சைவமோ, அசைவமோ அல்லது ரெண்டுமோ பண்ணலாம்’’ என்று சொல்ல, அந்த விண்ணப்பம் மேலே போயிற்று.

அந்த முயற்சிக்கு வரவேற்பு அதிகமிருந்தது. ஆதரவு அதிகம் பெருகியது.

நிலமும், கட்டடமும் சொந்தமில்லாது வெறுமே ஏழு வருட லீசுக்கு கேன்டீன் அவளுக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது. ஆனால், கட்டடம் அவள்தான் கட்டிக்கொள்ள வேண்டுமென்றும் போகும்போது அப்படியே அதை கொடுத்துவிட்டுப் போகவேண்டுமென்றும், மாத வாடகை இத்தனை தரவேண்டுமென்றும், வருடாவருடம் வாடகை பற்றிப் பரிசீலிக்கப்படும் என்றும் அவளுக்குச் சொல்லப்பட்டது.

யாருக்கும் தெரியாமல் அந்த ஒப்பந்தத்தை கையில் வாங்கி வைத்துக் கொண்டாள். அசைவ சமையல்காரரிடம் பேசினாள்.



‘‘இங்க கேன்டீன் போட்டுக்கறீங்களா. வெளி வேலைக்கு போய் அவஸ்தைப் படறீங்க, ஒரு ஐயரை வச்சு போண்டா, வடை, உப்புமா, இட்லின்னு பண்ணுங்க. தனியா ஒரு ப்ளாக்ல பிரியாணி பண்ணி பொட்டலமாக்கி இங்க கொடுங்க. மிச்சத்தை வெளிய கொடுங்க. இந்த ஏரியாவுல பல ஆபீஸ் இருக்கு. வந்து நூறு நூறா வாங்கிட்டுப் போகச்சொல்லுங்க’’ என்று சொல்ல, அவர்கள் சம்மதமானார்கள்.

ஒருவரிடம் பத்தாயிரம் ரூபாய் கடன் வாங்கி பாத்திரங்கள் வாங்கினாள். மேலே கட்டடம் எழும்பும் போதே பின் பக்கம் கேன்டீனும் எழும்பியது. ஆனால், கறிச்சோறை நிறுத்த வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

‘‘நல்லா சோறு போடறாங்க. மத்த இடத்தைவிட அதிகம் சம்பளம் வேற தராங்க. வேகமா வேலை செய்யச் சொல்றாங்க. அவங்க சொல்றதுக்கு ஒரு நாள் முன்னாடி நாம முடிக்கணும். ஒன்பது மணின்னா ஒன்பது மணிக்கு நாம நின்னுடணும். ஏழு மணிவரைக்கும் வேலை செய்யணும். ரெண்டு நாள் நைட் வேலை உண்டு. அதுவும் சொல்லிடுங்க’’ என்று கூலியாட்கள் உற்சாகப்படுத்திக் கொண்டார்கள்.

மேஸ்திரிகளிடமிருந்து கசிந்த விஷயத்தை உள்வாங்கி கறிச்சோறு நிறுத்தாத வண்ணம் வேலை செய்ய தயாரானார்கள்.

சனிக்கிழமை இரவு இரண்டு படமும், ஞாயிற்றுக் கிழமை இரவு இரண்டு படமும் டி.வி-யில் போட்டுப் பார்க்க ஏற்பாடு செய்தாள்.

கூலியாட்கள் இன்னும் சந்தோஷமானார்கள்.

இருபத்தைந்து நாளில் முடிக்க வேண்டிய வேலையை பத்தொன்பது நாளில் முடித்தார்கள். இன்டீரியர் டெக்க

ரேஷனை அவளே எடுத்துக் கொண்டாள். அதை வேறு ஒருவனுக்கு காண்ட்ராக்ட்டுக்கு விட்டாள். அவனிடம் கமிஷன் பெற்றாள்.

அந்த இடத்தின் பின்பகுதியிலுள்ள குப்பைகளை லாரியில் ஏற்றி அனுப்பினாள். தோட்டம் செய்யலாமே என்று சொன்னாள்.

தோட்டக்காரனை வைத்து தோட்டத்தை மேம்படுத்த ஏற்பாடு செய்தாள்.

இன்டீரியர் டெக்கரேஷன் நடக்க பதினைந்து நாட்கள் ஆயின. அந்தப் பதினைந்து நாட்களில் தோட்டம் களை கட்டியது.

கண்ணாடிகள் பதித்து கடைசிப் பூச்சுகள் செய்கிற வேலை நடந்து கொண்டிருந்தது.

கயிறு ஊஞ்சல்கள் கட்டி ஸ்பிரே பெயிண்ட்டால் பெயிண்ட் அடித்துக் கொண்டிருந்தார்கள். அது முடிந்து பிறகு கண்ணாடியின் மேல் ஒட்டியிருந்த காகிதங்களைச் சுரண்டி எடுக்கத் தொடங்கினார்கள்.

வேலை நடக்கும்போதே அவளுக்குப் பெருந்தொகை கொடுக்கப்பட்டது.

கட்டட பராமரிப்பை இன்னொரு காண்ட்ராக்டரிடம் விட்டாள். அதிலும் லாபம் பார்த்தாள்.

மறுநாள் வேலை மொத்தமும் முடிந்துவிடும் என்கிற போது அவளுக்கு சிறிது நாள் ஓய்வெடுக்க வேண்டும் என்று தோன்றியது. அன்று அவளுக்கு மாதவிலக்கான நாள்.

ஒரு கயிற்றுக்கட்டிலில் மெத்தையை விரித்து சனிக்கிழமை மாலை அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தபோது டி.வி. பெட்டியை வேறு பக்கம் எடுத்துக் கொண்டு போய் தொழிலாளர்கள் சினிமா பார்க்க ஆரம்பித்தார்கள்.



நல்ல காமெடி படம் என்பதால் வாய்வலிக்க சிரிக்கத் துவங்கினார்கள்.

ஆனால், அவளுக்கு எதுவும் காதில் விழவில்லை. நன்கு அயர்ந்து தூங்கினாள்.

அவளுக்கு காவலாய் அமர்ந்திருந்த பெண் சிரிப்பு சத்தம் கேட்டு எழுந்து அவளும் கும்பலில் சேர்ந்து கொண்டாள்.

ஏழேகால் மணிக்கு அயர்ந்து தூங்குகிறவளுக்கு பக்கத்தில் அந்த கிழவி வந்து அமர்ந்து கொண்டாள். மெல்ல கால் பிடித்து விட ஆரம்பித்தாள்.

சம்பூர்ணம் மல்லாக்கப் படுத்தாள். காலை எடுத்து அந்தக் கிழவியின் மீது போட்டுக் கொண்டாள்.

அந்தப் பக்கம் பிடி என்பது போல் கை காட்டினாள். கிழவிக்குச் சொல்லாமலேயே எங்கு வலிக்கிறது என்பது புரிந்தது. கணுக்கால்களை அழுத்தி உருட்டிப் பிடிக்க ஆரம்பித்தாள். விரல்களை சொடுக்கு எடுத்தாள். உள்ளங் கால்களை அழுத்திவிட்டாள். கால்களை அழுத்திப் பிடித்து உருவினாள். உள்ளங்கால் தசைகளை பிசைந்து விட்டாள். முழங்கால்களை உருட்டித் தேய்த்தாள்.

தூக்கம் இன்னும் கண்ணை இழுத்தது. ஆழ்ந்து உள்ளுக்குள் போய் தூங்குகிற தூக்கம் ஏற்பட்டது.

ஏதோவொரு கூலித் தொழிலாளிதான் இந்த உதவியை செய்கிறாள் என்று எண்ணி தன் வலக்கையைத் தூக்கி அவளை ஆசீர்வதிப்பது போல் சம்பூர்ணம் சிறிது நேரம் நிற்க வைத்துவிட்டு நல்ல தூக்கித்தில் மூழ்கிப் போனாள். அவள் ஆசியை அந்தக் கிழவி இனிமையாக வாங்கிக் கொண்டாள்.

''நல்லா உழைக்கிற. நல்லா சாப்பிடற. நல்லா தூங்க வேண்டாமா. தூங்கு நல்லா தூங்கு.''

அவளை நெருங்கும்போதே அவள் உடலின் கோளாறுகள் கிழவிக்குப் புரிந்தன. சட்டென்று காலிலிருந்து நகர்ந்து சம்பூர்ணத்தின் தலையை தாங்கிக் கொண்டாள். நெஞ்சில் கை வைத்தாள். கருப்பையை தடவினாள்.

என்னா கோவம், பல்லு கடிக்கிற கோவம். நீ. கோவப்படறபோதெல்லாம் உன் கருப்பைதான் பாதிக்கப்படுது. மூச்சை நிறுத்தி பல்லை கடிச்சு மூளையில ரத்தம் ஏற கத்த ஆரம்பிக்கற. அப்படியே இந்த இடது பக்கம் பலவீனமாயிடுது.

அவள் மார்பை தடவிக் கொடுத்தாள்.

எல்லாருக்கும் கறிச்சோறு போட்டியே. எனக்கு போட்டியா. ஒரு வாய் எனக்கு கொடுத்தா என்ன.

செல்லமாக கன்னத்தை நிமிண்டினாள். நெற்றியை நீவி விட்டாள்.

புத்தி. ஏராளமா புத்தி. எல்லாக் காலத்துலயும் ஆம்பளைங்கதான் இவ்ளோ புத்தியா இருந்தாங்க. அதுவும் ஐயருங்கதான் புத்தியா இருந்தாங்க. அந்த புத்தி இப்போ உனக்கு வந்துடுச்சு. எல்லா தந்திரமும் உனக்கு அத்துபடி ஆயிடுச்சி. ஆகணுங்கற நிர்ப்பந்தம். வேற வழியில்லை. சோறாக்கி வீட்ல எல்லாருக்கும் பரிமாறிட்டு பாத்திரம் தேய்ச்சுவச்சு மறுபடியும் சோறாக்கறதுக்கு உட்கார புத்திதான் எல்லாம் பொம்பளைக்கும் இருக்கும். ரெண்டு பொம்பளைங்க பார்த்தாக்கூட இதைப்பத்திதான் பேசுவாங்க. எழுத்தோ படிப்போ எதுவும் தெரியாது. நல்லா உடுத்திக்கத் தெரியாது. இத்தினி உசரக் கட்டடத்தை இன்னும் உசரமாக்கணும்னா என்னா செய்யறதுன்னு தெரியாது. ஒண்ணுமே இல்லாத இடத்துலேர்ந்து நல்லா வந்திருக்கடி. படிப்படியா உசந்து வந்திருக்க கண்ணு.



உனக்கு என்னா வேணும் சொல்லு. எல்லாருக்கும் கறிச்சோறு போடற. எனக்கு போட மாட்டியா.

அவள் சப்தமில்லாத சப்தத்தில் பேசினாள்.

சகலமும் தூங்கிக் கொணடிருந்த சம்பூர்ணத்திற்குப் புரிந்தது. யாரோ மிகப் பிரியமாகப் பேசுகிறார்கள் என்று புரிந்தது. தலையை இன்னும் அழுத்த மடியில் வைத்துக் கொண்டாள். முழங்கால்கள் மீது கையைப் பதித்து வைத்துக் கொண்டாள்.

யார் தலைக்கு தொடை கொடுத்தார்களோ அவர்களுடைய வாசனையை அறிய முற்பட்டாள். கண்திறந்து முகம் பார்க்க முயற்சி செய்தாள். முடியவில்லை. ஒரு அலுப்பு முதுகுத்தண்டு முழுவதும் கனமாக இருந்தது. அந்த முதுகுத்தண்டு பலவீனத்தை போக்க வேண்டுமே என்ற கவலை இருந்தது.

கிழவி அவள் கழுத்திலிருந்து முதுகுவரை நீவி விட்டாள். முதுகுத்தண்டிலிருந்த அயற்சி வெளியே போயிற்று. நல்ல ஒரு திடம் ஏற்பட்டது. முன்புபோல் நெஞ்சுப் பகுதியில் இருந்த நமநமப்பும் இல்லை. நுரையீரல்கள் சுத்தமாக இருந்தன. வயிறு மெல்லியதாக பசிக்குரலை எழுப்பியது. உள்ளங்கால்களில் வலு ஏறியிருந்தன.

எங்கு படுத்துக் கொண்டிருக்கிறோம், எதற்கு படுத்துக் கொண்டிருக்கிறோம் என்று கேள்வி எழுந்தது.

அவள் பதில் தேட முடியாமல் சற்றுநேரம் தடுமாறினாள். மெல்ல மெல்ல நினைவைக் கூர்மையாக்கினாள். நினைவுக்கூர்மை மூளையின் ஒரு பகுதியை மெல்லத் தொட்டது. இரவு எட்டு, ஒன்பது, பத்து மணி இருக்குமா என்று பயந்தாள். மணியை மூளை அறிய முடியவில்லை. அந்தக் கணக்கு விட்டுப் போயிருந்தது.

அடேயப்பா... நல்ல தூக்கமா. எழுந்திருக்க வேண்டுமே.

ஆனால், எழுந்திருக்க மனம் வரவில்லை. அப்படியே இருக்க வேண்டுமென்று தோன்றியது. ஏதோ மிகப்பெரிய ஆதரவு தனக்கருகே இருப்பது போல ஒரு எண்ணம் ஏற்பட்டது.

சாப்பாடு கேட்கறாங்களே. எல்லாருக்கும் கொடுத்தாச்சே. என்னா வேணும். யாருக்கு சாப்பாடு. ஏம்மா மத்தியானம் போடறோமில்லை. அப்புறம் ராத்திரி சாப்பாடு கேட்டீங்கன்னா.

இவர்கள் சாப்பாடு கேட்கமாட்டார்களே. கறிச்சோறை இரவுக்கும் பத்திரப்படுத்தி உண்பார்களே. கறிச்சோறும், மீன் குழம்புமாக பிசைந்து சாப்பிடுவார்களே. அவர்களுக்கு எந்தக் குறையுமில்லையே. யார் சாப்பாடு கேட்டது?

அவளுக்கு பசித்தது.

எனக்கு பசிக்கறாப் போலதானே கேட்டவங்களுக்கும் பசிக்கும். சம்பூர்ணம் புரண்டாள்

கிழவி சட்டென்று எழுந்திருந்தாள். அப்படியே கட்டடத்திற்குள் மறைந்து போனாள்.

சம்பூர்ணம் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள்.

அவளைச் சுற்றி தூங்கும் பொழுது மூன்று நான்கு பேர் உட்கார்ந்திருந்தார்கள். ஒரு கிழவி வெற்றிலைப் பாக்கு எடுத்துக் கொண்டிருந்தாள். அவளையும் காணோம். எல்லோருமே ஒரு காலியிடத்தில் டி. வி. வைத்துக் கொண்டு படம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது ஓசையின் மூலம் உணர்ந்தாள்.

எழுந்து பாட்டில் தண்ணீரை குடித்துவிட்டு வாய் கொப்பளித்தாள். லேசாய் முகம் அலம்பிக் கொண்டாள். தலையை கோதிக் கொண்டாள் எழுந்து நின்றாள்.



உடம்பு அற்புதமான வலுவோடு விளங்கியது.

எவ்வளவு நேரம் தூங்கியிருக்கேன். அட... ரெண்டே முக்கால் மணி நேரம்தான்.

கடிகாரத்தைப் பார்த்தாள். இடதும், வலதும் நடந்தாள்.

யாரோ என்னமோ கேட்டாங்களே.

அவள் புத்தி கனவிலிருந்து நனவுக்கு வந்து கனவை மறக்கத் துவங்கியிருந்தது.

கனவா அது. இல்லை வேறு ஏதேனும் விஷயமா. கனவை ஞாபகப்படுத்திக் கொள்ள முயன்றாள். ஞாபகப் படுத்திக் கொள்ள... ஞாபகப்படுத்திக் கொள்ள கனவு மெல்ல மறைந்து போய்க் கொண்டிருந்தது.

ச்சே... சும்மாயிரு என்று மனதை அதட்டினாள்.

மனம் மௌனமாக இருந்தது. எதுவும் பேசாமல் இருந்தது. என்னவோ நடந்ததே, என்ன அது என்று எந்த முயற்சியும் செய்யாமல் அமைதியாக இருக்க, மெல்ல காலை யாரோ பிடித்து விடுவது ஞாபகத்திற்கு வந்தது.

ஆமாம். பிறகு?

நெஞ்சு தடவினார்கள்.

பிறகு?

தலை தடவினார்கள்.

பிறகு?

நீ என்ன மாதிரி பொம்பளை என்று ஏதோ பேசினார்கள். கஷ்டப்பட்டு வந்திருக்கியேடி என்று சொன்னார்கள். அந்த காலத்துல ஆம்பளைங்கதான், அதுவும் ஐயரு ஆம்பளைங்கதான் என்று ஆரம்பித்தார்கள். அவர்களைப் போல வந்துவிட்டாயே என்று குதூகலித்தார் கள். சோறு தவிர வேற எதுவும் பொண்ணுங்களுக்கு

தெரியாது. பாத்திரம் தேய்க்கிறது தவிர எதுவும் தெரியாது. அதைப்பத்திதான் பேசுவாங்க. எல்லாம் தாண்டி வந்திருக்கி யேடி கண்ணு. அங்குலம் அங்குலமா வந்திருக்கியேடி கண்ணு...

வாசகங்கள் நினைவுக்கு வந்தன.

யாரது தலை தடவி விட்டது. யாரது கருப்பையை சரிபண்ணியது.

அவள் தன் உடம்பை தடவிப் பார்த்துக் கொண்டாள்.

வேகமாக நடந்துபோய் வேலையாட்கள் டி.வி. பார்க்கின்ற இடத்திற்குப் போனாள். அத்தனை பேரும் காமெடிப் படத்தில் ஆழமாய் ஊன்றியிருந்தார்கள். கீழே விழுந்து புரண்டு சிரித்தார்கள். அவள் வருவது தெரியாமல் படத்திலேயே ஒன்றிக் கிடந்தார்கள்.

அவள் மறுபடியும் இடது பக்கம் சுற்றிக்கொண்டு போனாள். கோவில் நோக்கி நடந்தாள்.

'நீ மட்டும் சாப்பிடறியே. எனக்கு கொடுக்கக் கூடாதா?'

ஹா... இதுவும் கேட்டார்கள்.

யார் கேட்டது இது?

கோவில் தாண்டிப் போகும்போது உடம்பு நடுங்கிற்று. சில்லென்ற ஒரு உணர்ச்சி ஏற்பட்டது. தொண்டையை யாரோ நெருக்குவது போல் ஒரு சிரமம் இருந்தது.

அவள் திடுக்கிட்டு நிமிர்ந்தாள். மேலே மரத்தைப் பார்த்தாள். குனிந்து சிலையைப் பார்த்தாள்.

மற்ற இடங்களைவிட இரவு அந்த ஏழேமுக்கால் மணிக்கு அந்த இடம் பிரகாசமாக இருப்பது போல் பட்டது.



தெருவிளக்கின் ஒளி கண்ணாடியில் பட்டு, கண்ணாடியிலிருந்து வெளிச்சம் இங்கு பரவலாக விழுந் திருக்கிறதா என்று அவள் ஆராய்ந்து பார்த்தாள்.

கண்ணாடி மீது எந்த வெளிச்சமும் படவேயில்லை என்று நிமிர்ந்து பார்த்து உறுதிப்படுத்திக் கொண்டாள்.

மறுபடியும் நடந்து போனாள். வாசல்போய் நின்றாள். வாசலிலுள்ள கூர்க்கா அவளைப் பார்த்து எழுந்து நின்றான்.

''என்னம்மா வேணும்?'' என்று கேட்டான்.

''யாராவது... யாராவது...'' என்று தடுமாறினாள்.

''என்னம்மா வேணும்?''

மறுபடியும் கேட்டாள்.

''யாராவது வயசானவங்க இந்தப் பக்கம் வந்தாங்களா?''

''இல்லியே'' என்று அந்தக் கூர்க்கா கொச்சையான ஹிந்தி கலந்து தமிழில் சொன்னான்.

''அதோ போறாங்களே அவங்களா?'' என்று உள்ளுக்குள் வழிகாட்டினான்.

அவள் வந்த வழியிலேயே யாரோ ஒரு கிழவி போய்க் கொண்டிருந்தாள்.

சட்டென்று கூர்க்காவிடமிருந்து திரும்பி அந்தக் கிழவியை நோக்கி வேகமாக நடந்தாள். அருகே போகப் போக அவள்தான் என்று தெரிந்தது. ஆனால், கிழவி இடது பக்கம் திரும்பினாள். சினிமா பார்க்கின்ற கும்பலுக்குள் போய் அவள் உட்கார்ந்து கொள்வாள் என்று தோன்றியது. இன்னும் வேகமாக நடக்க, சினிமா பார்க்கும் கும்பல் இப்போது சோகக் காட்சியில் அசையாது உட்கார்ந்திருந்தது.

அங்கே யாரும் போகவில்லை என்பது போல் உணர்ந்தாள். மறுபடியும் திரும்பிப் பார்த்தாள். இப்பொழுது

கிழவி கோவில் வாசலில் உட்கார்ந்திருந்தாள். தன் தலையை உதறி உதறி நீவத் துவங்கினாள். வெள்ளை வெளேரென்ற தலைமுடி முதுகுவரை நீண்டிருந்தது. உறுதியான உடம்பாக தெரிந்தது.

அவள் திடுக்கிட்டு கிழவியையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

மறுபடியும் வயிறு பிசைந்தது. உடம்பு சில்லென்று ஆயிற்று.

இது என்ன... என்ன மர்மம் இது. என்னமோ நடக்கிறதே என்று மனசு தவித்தது. அங்கிருந்தபடியே யாரை யேனும் துணைக்குக் கூப்பிடலாம் என குரல் கொடுக்க, குரல் எழும்ப மறுத்தது. ஒரு வினோதமான பயம் உடம் முழுவதும் பரவியது. அங்கிருந்தபடியே கிழவியை பார்த்துக் கொண்டிருந்தாள். மெல்ல கிழவியை நோக்கி நடக்கத் துவங்கினாள். எழுந்து நின்று அவளை திரும்பிப் பார்த்தாள். அருகே போக சம்பூர்ணத்திற்கு பயமாக இருந்தது. அங்கிருந்தபடியே கிழவியைப் பார்த்தாள்.

கிழவி நடந்து கட்டடத்திற்குப் போனாள். கண்ணாடிக் கதவு பூட்டியிருந்தது. இவளும் வேகமாக நடந்து போக, ஷட்டர் தாண்டி, கண்ணாடிக் கதவு தாண்டி அவள் மேலே போனாள்.

மணி எட்டாகியிருந்தது. பேஸ்மெண்ட்டுக்கு இறங்கி சம்பூர்ணம் ஓடினாள். பேஸ்மெண்டிற்கு லிஃப்ட் கூப்பிட்டாள்.

லிஃப்ட் வந்தது. லிஃப்ட் திறந்து கொள்ள, உள்ளே போனாள். உள்ளே போனதும் பயமாக இருந்தது

எதற்குப் பின்தொடர வேண்டும் யாரையாவது கூப்பிட்டுக் கொண்டு போகலாமே என்று தோன்றியது.



வெளியே வர முயற்சிக்க, லிஃப்ட் கதவு வழக்கத்தை விட வேகமாக சார்த்திக் கொண்டது. மெல்ல லிஃப்ட் மேலேறியது

எப்படி லிஃப்ட் அழுத்தாமலேயே போகிறது என்று யோசித்தாள். உடம்பு வியர்த்தது. அதிகம் மனம் படபடத்தது. கண்களை மூடிக் கொண்டாள்.

என்ன...என்ன நடக்கறது இங்கே? ஏதேனும் தப்பான விஷயமா?

லிஃப்ட் திறந்தது.

லிஃப்ட் திறக்க, வெகு அருகே, கதவுக்கு வெகு அருகே அந்தக் கிழவி நின்றுகொண்டிருந்தாள். அவளுக்குப் பின்னால் பெரிய வெளிச்சம் இருந்தது.

வாய்விட்டு அலறுகின்ற ஒரு வேகம் சம்பூர்ணத்திடம் இருந்தது.

''என்னாத்துக்கு கத்தற!'' கிழவி மிருதுவாகப் பேசினாள். நடந்து போனாள்.

லிஃப்ட் கதவு திறந்தபடியே இருக்க, மூடிக் கொள்ளாமல் நிற்க சம்பூர்ணம் வெளியே வந்தாள்.

''இங்கே வா!'' கிழவி பத்தடி தள்ளி கூப்பிட்டாள்.

அலுவலகத்திற்கு தயாராக மேஜை நாற்காலிக ளெல்லாம் அறைகள் மட்டும் தடுப்பு ஏற்படுத்தி உள்ளுக் குள்ளே புகாத வண்ணம் மரத்தடுப்புகள் ஏற்படுத்தி விளக்குகள் பொருத்தி இருக்கின்ற அந்தக் கூடத்தில் கிழவி நிற்க, அவளுக்கெதிரே போய் சம்பூர்ணம் நின்று கொண்டாள்.

''நான் இங்க இருக்கறவதான். ரொம்ப நாளா இருக்கேன்.''

கிழவி சொல்லும் பொழுதே கிழவி அமானுஷியாக அவளுக்குத் தெரிந்தாள்.

சம்பூர்ணத்திற்கு பயம் வந்தது. முகத்தை பொத்திக் கொண்டாள்.

''எதுக்கு பயப்படணும். நல்லவங்க எங்கிட்ட பயப் படணும்னு அவசியமே இல்லை'' என்று மறுபடியும் கிழவி சொல்ல, உள்ளே ஒரு தைரியம் ஏற்பட்டது.

முகத்தைப் பொத்திக் கொண்டு கையைக் கீழே இறக்கினாள். கிழவியை நோக்கிக் கூப்பினாள்.

'நீங்கதான் பசிக்குதுன்னு சொன்னீங்களா? எனக்கு சாப்பாடு போடுன்னு சொன்னீங்களா?''

''ஆமாம். எல்லாருக்கும் கறிச்சோறு போடற, எனக்கு போட்டா என்ன?''

''நீங்க யாரு?''

''இப்போதான் சொன்னேனே. நான் இங்க இருக்கறவதான். ரொம்ப நாளா இருக்கேன்.''

''இது நவாப்போட இடம். அப்பத்தான் வெள்ளைக் காரங்க எல்லாரும் உள்ள வராங்க. வெள்ளைக்காரங்கன்னா இங்கிலீஷ் பேசறவங்க. இல்லை. ப்ரெஞ்சு பேசறவங்களை ஆனா அவங்களும் வெள்ளை தோலுதான். இங்கிலீஷ் பேசறவங்க காட்டிலும் நல்ல வெள்ளை தோல். உசரமா நெகுநெகுன்னு இருப்பான். துப்பாக்கிக்குள்ள மருந்து போட்டு அழுத்தி அழுத்தி வச்சு ஈயக் குண்டு போட்டு டொப்டொப்புனு அடிப்பான். கண்ணுகாது மூஞ்சியெல்லாம் பிச்சிக்கும். உருண்டை இரும்பா பீரங்கி வாயில வச்சு திரியை கொளுத்திருவான். பீரங்கி அங்கேயிருந்து பாறாங் கல்லு மாதிரி வந்து டொமேர்னு விழும். பொலபொலன்னு வீடு விழுந்துடும். நவாப்பு தங்கியிருந்த இடத்தை இங்கிலீஷ் பேசற வெள்ளைக்காரன் வாங்க, ப்ரெஞ்சுக்காரனும் வாங்கணும் போது அவனுக்கு கொடுக்காதன்னு வெள்ளைக்





காரன் சொல்ல, வெள்ளைக்காரனுக்கும் ப்ரெஞ்சு பேசறவனுக்கும் சண்டை. புதுச்சேரின்ற இடத்துலேர்ந்து ப்ரெஞ்சுக்காரன் நிறைய பீரங்கி வண்டி கொண்ணாந்து அடையார்ல வச்சு நொங்நொங்குனு அடிச்சான். அப்போ எல்லாரும் திருவொற்றியூர் போயிட்டாங்க. மயிலாப்பூர் ஐயருங்க மட்டும் தேங்கா குடம் வச்சுகிட்டு ரெடியா நின்னாங்க.''

''தேங்கா குடம்னா என்னா?''

சம்பூர்ணம் கேட்டாள்.

''அதான் பூர்ண கும்பம்னு ஏதோ சொல்றாங்களே. அதை வச்சுகிட்டு தயாரா இருந்தாங்க.''

''யாருக்கு?''

''யார் வந்தாலும் கூப்பிடறதுன்னு ரெடியா இருந்தாங்க. ப்ரெஞ்சுக்காரன் வந்தா ப்ரெஞ்சுக்காரனை கூப்பிடறது. இங்கிலீஷ்காரன் வந்தா இங்கிலீஷ்காரனை கூப்பிடறது.''

''ஏன் மயிலாப்பூர் ஐயருங்க இதுல கலந்துக்கணும்.''

''அடையார் தாண்டினா மயிலாப்பூர்தானே முதல்ல. அவங்களுக்குத்தானே உதை விழும். அதனால யாரும் அடிக்காம இருக்க, வாங்க வாங்கன்னு சொல்றதுக்கு ரெடியாயிட்டாங்க. ஊர்ல இருக்கற மத்த ஜாதி ஆளுங்க ஐயருங்க பின்னாடி ஒளிஞ்சுகிட்டாங்க, ஐயரை கூப்பிட்டு அவன் மரியாதையா வந்துட்டான்னா இவங்களும் போய் நான் இன்னாருன்னு சொல்லிக்கலாம்னு தீர்மானம் பண்ணாங்க. அதுவரைக்கும் வீட்டுக்குள்ளயே இருக்கலாம்னு நினைச்சுகிட்டிருந்தாங்க''

''ஏன் அப்படி. எதிர்த்து சண்டை போட முடியாதா?''

''இவங்ககிட்ட ஒண்ணும் இல்லியே. கம்புதானே வச்சுருக்காங்க. கத்திதானே இருக்கு. பெரிய கத்தியா

இருந்தா பிடுங்கிட்டு போயிடுவானே. முந்நூறு நானூறு வருஷமா அடிமையா இருந்தவங்க. யாரோட சண்டை போட முடியும். நவாப் ஒழிஞ்சு வெள்ளைக்காரன் வந்தா சந்தோஷம்னு இருந்தாங்க.''

''அதுல என்ன சந்ஷதோஷம்?''

''நவாப் அட்டகாசம் அதிகம்தான். சங்கு ஊதாத, மேளம் கொட்டாத, மணி அடிக்காதன்னு சொல்வான். பார்த்துப் பார்த்து போகணும். நவாப் காலத்துல நாயக்கர் அட்டகாசமும், நாயுடுங்க அட்டகாசமும் அதிகம். வரிவசூல் பண்ண அவங்களதான் விட்டுடுவான். அடிச்சு நிமித்தி வரிவசூல் பண்ணிக்கிட்டு போவாங்க. ஒவ்வொருத்தருக்கும் நாப்பது வரி. நாப்பது எடுத்துட்டுப் போவாதே. ஆளை வச்சு அறுவது எடுத்து போவான். நாப்பதுதான் தருவான். கேட்டா, வீட்ல இருக்கற பொம்பளை புள்ளைங்களெல்லாம் இழுத்துட்டு வந்து அடிப்பாங்க. நியாயமே இல்லாத, தர்மமே இல்லாத ஒரு ஆட்சி நடந்துகிட்டிருந்தது, ஜனங்க பயந்து பயந்து சாகும். கிடைச்சதை தின்னுகிட்டு இருக்கும். ஊரைவிட்டு ஓடினவன் நிலத்தை நவாப்புக்கு கீழ இருக்கறவங்க பங்கு போட்டுப்பாங்க. அதுலயும் சண்டை நடக்கும். அதுலயும் உதைபடுவோம். இதுல ரொம்ப மோசமாக இருந்தது தீண்டத்தகாத ஜாதிங்கதான். எல்லாருக்கும் ஏவல் பண்ணணும் எல்லார்கிட்டயும் பொம்பளைங்கள அனுப்பணும். ரொம்ப ரொம்ப பாவப்பட்ட ஜனங்க அதுங்கதான். நான் அந்த ஜாதியிலதான் பிறந்தேன். நாங்க எல்லாம் நாலாவது ஜாதி. எங்களை ஊருக்குள்ள சேர்க்க மாட்டாங்க. ஊருக்கு வெளியதான் இருக்கணும். செருப்பு போட்டுக்கிட்டு போகக்கூடாது. பெரியவங்க வரும்போது எதிர்க்க நிக்கக்கூடாது நடக்கக் கூடாது. உடனே புதர் பக்கமோ மரத்துப் பக்கமோ ஒதுங்கிடணும். அவங்க போனபிறகுதான் போகணும்.



ஒருத்தர் வீட்டுக்கு வேலைக்குப் போறபோது கொல்லைப்புறத்துல நின்னு குரல் கொடுத்தா அந்தப்பக்கம் தான் கதவு திறப்பாங்க. வீட்டு வேலையெல்லாம் செய்துட்டு, எப்படி கொல்லைப் பக்கமா வந்தோமோ அப்படியே வெளிய போயிடணும். வேற எந்த பக்கமும் போயிடக்கூடாது. மாடு கன்னு பராமரிக்கறதுக்கு கட்ட்ட வேலை செய்யறதுக்கு அப்படின்னு கூப்பிட்டிருக்காங்களே தவிர, நல்லபடியா மரியாதையா எங்களைச் சேர்த்துக்க மாட்டாங்க.

நவாப் காலத்துலயும் அப்படித்தான். அவங்க ஜாதியில சேர்ந்தாதான் மரியாதை. அதுவும் முழு மரியாதை இல்லை. வீடு வாசலுக்குள்ள விடுவாங்க. ஆனா, பேர் மாத்திக்கணும். அந்த சாமியை கும்பிடணும். மரியாதை சுமாரா இருக்குமே தவிர தப்பு பண்ணோம்னா அடிதடி உதை ரொம்ப சரமாரியா விழும். பரங்கி ஆளு இங்க வந்து கோட்டை கட்டின பிறகுதான் எங்களுக்கெல்லாம் மரியாதையே கிடைச்சுது. உள்ளுக்குள்ள கதவை திறந்து, வாங்க வாங்கன்னு கூப்பிட்டு போய் வீடு முழுக்க துடைக்க சொல்லுவான். பங்கா போடச் சொல்லுவான். சாப்பிடற மேசைல துணிவிரிச்சு சாப்பாடு பரிமாற சொல்லுவான். நாங்கெல்லாம் செய்யக்கூடாது அதை அப்படின்னு சொல்லிப் பார்த்தோம். 'அதெல்லாம் உங்க ஊர் முட்டாள்கிட்ட வச்சுக்கோ. எங்ககிட்ட அந்த மாதிரி தொந்தரவு கிடையாது. நீ உண்மையா இருந்தா உன்னைத் தூக்கி உச்சாணிக்கிளையில வச்சுடுவேன்' அப்படின்னு சொன்னான்.

நாங்க எல்லாரும் வெள்ளைக்காரனுக்கு ரொம்ப உண்மையா இருந்தோம். கழுத்துல சிலுவை கட்டிக்கிட்டு வெள்ளைக்காரன் என்னா பண்றானோ அதே மாதிரி சாமி கும்பிட்டா போதும். வெள்ளைக்காரனுக்கு சந்தோஷ

மாயிடும். சட்டை தச்சு கொடுத்துடுவான். சட்டைய உள்ள போட்டு, அவனுடைய பழைய கோட்டு போட்டு நாங்க தெருவுல நடப்போம். அத்தினி ஜாதிக்காரங்களும் வாயைப் பொளந்துகிட்டு பார்ப்பாங்க. இல்லை எங்களுக்கு எங்க சாமிதான் முக்கியம்னாலும் அவன் பெருசா ஒண்ணும் கோச்சுக்க மாட்டான். வேலைக்கு நேரத்துக்கு வந்துடணும். மாடு மாதிரி உழைக்கணும். வீட்டை சுத்தமா வச்சிருந்தா போதும். அவனுக்கு ரொம்ப சந்தோஷமாயிடும்.

மாட்டை அடிக்கற மாதிரி அடிக்கறது. கண்ணு முன்னாடியே பொம்பளைய எடுத்துட்டுப் போயிடறது. இதெல்லாம் வெள்ளைக்காரன் பண்றதில்லை. அவனும் திமிர் பிடிச்சவன்தான். ஆனா, குள்ளநரித் திமிரு, தந்திரம் கலந்த திமிரு. அவனுக்கு உயிர் பயம் ஜாஸ்தி. ஊரை விட்டு ஊர் வந்திருக்கிறோமே, சொந்த ஊர்ஜனம் சுத்தி நின்னு கொன்னுடுமோன்னு கலவரம். அதனால யாராவது வேலைக்காரங்க கொஞ்சம் எதிர்த்தா போதும். அடிச்சு பின்னி எடுத்துடுவான். நூறு பேர் கூப்பிட்டு சவுக்குலயே விளாறுவான். அவனுக்கு நம்பிக்கை வந்துடுச்சுன்னா மொத்தத் தங்ககாசையும் தலையில் வச்சுட்டு கொண்டு போய் கொடுத்துடுன்னு சொல்லிடுவான். இங்க போய் இதைக் கொடு. அங்க போய் அதை வாங்கிட்டு வான்னு சொல்லிடுவான்.

வெள்ளைக்காரனுக்கு வேல் கம்பு வச்சிருக்கறவன்னா பயம். வெயில்னா பயம். அதைவிட ரொம்ப பயம் அம்மை. அதுக்கு மருந்தே கிடையாது. சாவுதான் முடிவு அப்படின்னு யாரோ சொல்ல, ரொம்ப மிரண்டு போய் ஓடிடுவான். வெயில் காலத்துல அவன் குழந்தைங்க ஏதாவது சூடு தாங்காத மாட்டியிருக்கும். என்னா பண்றது என்னா பண்றதுன்னு கேட்பான். இதுக்கு மருந்து இருக்குன்னு



சொல்லி வேப்பிலை அரைச்சு போட்டு எங்க குலதெய்வத்துக்கு நீர் ஊத்து. மோர் ஊத்து. இதைக் கொடு, அதைக் கொடுன்னு கேட்டா அள்ளி அள்ளி கொடுத்துடுவான். மூணா நாள்ல சரியாயிடும். அப்புறம் அந்த கோயில் பக்கமும் வரமாட்டான். அந்தக் கோயிலை கண்டாலும் பயம்.

ஒரு வெள்ளைக்காரன் வீட்ல நான் வேலை செய்து கிட்டிருந்தேன். சோறு பரிமாறுவேன். அதான் என் வேலை. நவாப்புகிட்ட வேலை செய்துட்டு நான் ப்ரெஞ்சுக் காரங்கிட்ட போனேன். ப்ரெஞ்சுக்காரனுக்கும் பிரிட்டிஷ் காரனுக்கும் நடந்த சண்டையில நான் பிரிட்டிஷ் வெள்ளைக் காரங்கிட்ட இருந்தேன்.

நாம எதுனா ஒரு பக்கம் இருந்துதான் ஆகணும். பிரிட்டிஷ்காரங்கிட்ட கூலி வேலை செய்துகிட்டிருந்தோமா. ப்ரெஞ்சுக்காரன் ஜெயிச்சுட்டானா, ப்ரெஞ்சுக்காரன் கூப்ட்டு கூப்ட்டு அடிப்பான். ப்ரெஞ்சுக்காரங்கிட்ட வேலை செய்துகிட்டிருந்தோமா. பிரிட்டிஷ்காரன் ஜெயிச்சுட்டானா, பிரிட்டிஷ்காரன் கூப்ட்டு கூப்ட்டு அடிப்பான். என்னா பண்றது? எதனா ஒரு பக்கம் போய்த்தானே ஆகணும். நான் பிரிட்டிஷ்காரன்கிட்ட இருந்தேன். நல்ல வேளையா பிரிட்டிஷ்காரன் ஜெயிச்சுட்டான்.

அடையார்ல தோக்கற மாதிரி தோத்து பின்னால வாங்கி மந்தைவெளின்னு ஒரு இடம் இருக்குதே, அந்த சேத்து பக்கமா பலகை போட்டுக்கிட்டு நடந்து, நடக்கற போது பலகை மொத்தமும் எடுத்துட்டு வந்துட்டாங்க. (பீரங்கி வண்டியோட) புல்லு அப்படின்னு நினைச்சு வந்த ப்ரெஞ்சுப் பட்டாளம் மந்தவெளி சேத்துல மாட்டிக்கிச்சு. மயிலாப்பூர், திருவல்லிக்கேணி அத்தினி இடத்துலயும் இருக்கற ஆளுங்களை மாடு ஓட்டறா மாதிரி ஓட்டிக்கிட்டு

போய் எல்லார் கையிலயும் கல்லு கொடுத்து அடிக்க சொன்னாங்க.

ப்ரெஞ்சுக்காரன் பீரங்கியை நிமித்தி ரெண்டு தடவை சுட்டான். முன்னாடி போய் கல்லு அடிச்சவங்க ஒரு இருபது பேர் செத்தாங்க. ஆனா விடலை. வெள்ளைக்காரன் பிரம்புல அடிச்சு கல்லு விடுங்கோ, கல்லு விடுங்கோன்னு சொல்லி இவங்க நிறைய கல்லு விட்டு அவன் சுடமுடியாத பின்னுக்குப் போய் பிரிட்டிஷ் பட்டாளம் கட்டுமரத்துல ஏறி சுத்திக்கிட்டு போய் பின்பக்கமாக நின்னு அங்கேர்ந்து ப்ரெஞ்சுக்காரனை அடிக்க, ப்ரெஞ்சுக்காரன் வெள்ளைக் கொடி காமிச்சிட்டான். நம்ம ஜனங்கள்தான் போய் கயிறுகட்டி இழுத்துட்டு வந்தது. திருவான்மியூர்ல யாரெல்லாம் ப்ரெஞ்சுக்காரனுக்கு வேலை செய்தாங்களோ அதாவது நம்மாளுங்க அவங்களயெல்லாம் நம்மாளுங்களே போட்டு சாத்து சாத்துன்னு சாத்தினாங்க. என்னாடா அது, தமிழ் பேசறவனையே தமிழ் பேசறவன் அடிக்கிறோமே அப்படின்னு கிடையாது. ப்ரெஞ்சுக்காரன்கிட்டயா வேலை செஞ்ச அப்படின்னு அடிப்பாங்க. அவன் ஜெயிச்சிருந்தா நம்மள அடிச்சிருப்பான். ப்ரெஞ்சுக்காரன் பீரங்கியெல்லாம் பிடுங்கி கொண்ணாந்து கோட்டையில வச்சு கட்டடம் கட்டியிருக்கறியே, அந்த இடத்துல எங்களுக்கு நிலம் கொடுத்தான். ஓலை குடிசை போடாதீங்கோ. பத்திக்கும். மறுபடியும் கொண்ணாந்து குடிசை கொடுக்க முடியாது அப்படின்னு சொல்லி கருங்கல்லுல வீடு கட்டிக்க சொன்னான். கருங்கல்லுல தளம் போட்டுக்க சொன்னான். முழுக்க தேக்கு மரம் போட்டு, செங்கல் தளம் போட்டு ஆளுக்கு ரெண்டு ரூம். ஒண்ணுல சமையல், ஒண்ணுல படுக்கை. நல்ல வாசப்படி ஒட்டி பெரிய திண்ணை. திண்ணையில ஒரு சாய்மானம். ஜனங்களுக்கு அத்தினி சந்தோஷம். மேல்ஜாதிக்காரங்களெல்லாம் வந்து



உங்களுக்கே உங்களுக்கா... உங்களுக்கே உங்களுக்கான்னு கேட்டு வெந்து போயிட்டாங்க. ஏற்கெனவே சட்டை போட்டுக்கிட்டு திரியறான். இப்போ வீடும் கட்டிக் கொடுத்துட்டானா, இவங்களை ஒண்ணும் பண்ண முடியாதுன்னு சொன்னாங்க.

வேலைக்காரரா இருந்தவங்களெல்லாம் சிலுவை போட்டுக்கிட்டு வேதக்காரரா மாறிட்டாங்க. எங்க தெருவுல எங்களை தவிர மத்தவங்க எல்லாருமே வேதக்காரரா இருந்தாங்க. நாங்க மாறமாட்டோம்னு சொன்னோம். அவன் ஒண்ணும் சொல்லலை. நீ நல்ல வேலைக்காரன். நீ என்னவா இருந்தா எனக்கென்னா, அப்படின்னுட்டு போயிட்டான்.

மறுபடியும், நவாப்புக்கும் பிரிட்டிஷ்காரனுக்கும் சண்டை வந்தது. அதுல வேதக்காரனா மாறினவங்க நவாபை காட்டிக் கொடுத்தாங்க. நாங்க மாட்டோம்னு சொல்லிட்டோம். பிரிட்டிஷ்காரன் கிட்ட போய் இவனுங்க காட்டி கொடுக்கறாங்க, நீ கட்டின கல்லு வீட்ல நவாப் பொம்பளை உட்கார்ந்துகிட்டிருக்கு. நீ ஊரை விட்டு வெளிய போனதும் உள்ளுக்குள்ள போகப் போகுதுன்னு சொன்னோம். அவன் ஊரைவிட்டு வெளிய போறமாதிரி போய் அப்படி திரும்பி நாங்க இருக்கற சேரிக்கு ஓடியாந்துட்டான். உள்ள புகுந்து நவாப்பு படையை துவம்சம் பண்ணான். உங்களுக்கு வீடு கொடுத்ததுனால் தாண்டா எனக்கெதிரா ஆளுங்கள கூப்ட்டுவச்சேன்னு சொல்லி எல்லா வீட்டையும் அவங்கள விட்டே இடிக்கச் சொன்னான். எவ்ளோ கதறியும் மன்னிப்பு தராத கோர்ட்ல எத்தி வெளியூர் ஜெயிலுக்கு அனுப்பிட்டான்.

இந்த வீடு மட்டும் தனியா இருந்தது. ராவோட ராவா நிறைய பொம்பளைங்க வந்து காட்டிக் கொடுத்துட்ட இல்ல

அப்படின்னு எங்க வீட்டை சுத்தி விறகு அடுக்கி கொளுத்திட்டாங்க. அப்போதான் நான் செத்துட்டேன். ஆம்பளை அடிச்சு செத்தவ இல்லை. பொம்பளைங்க சுத்தி நெருப்பு வச்சி புகை மூட்டம் தாங்காத மூச்சுத் திணறி கொஞ்சம் கொஞ்சமா உடம்பு பஸ்பமாகி செத்தவ, என் உடம்பு கொஞ்சம் கொஞ்சமா எரியறதை நான் மரத்தடியில உட்கார்ந்து பார்த்துட்டிருந்தேன். மேலவும் போக முடியலை. கீழவும் போக முடியலை. நடுவாந்திரமா மாட்டிக்கிட்டேன். ரொம்ப வருஷம் அழுதேன். என்னா பண்றதுன்னு தெரியலை.

நான் செத்துப்போகும்போது எனக்கு அறுவத்தோரு வயசு. நிறைய பேரன். ரொம்ப சந்தோஷமா இருந்தோம். வேதக்காரங்க ஒரு நாலு பேர் வந்து நாங்க மறுபடியும் இந்துவா மாறணும்னு சொன்னாங்க. அதெல்லாம் வேணாம். அப்படியே இருன்னேன். இல்லை, எங்களால மாரியாத்தா கோயிலுக்குப் போகாத இருக்க முடியலைன்னாங்க, மாரியாத்தா கோயிலுக்கு வா. மாதா கோயிலுக்குப் போ. எல்லாம் ஒண்ணுதான்னு சொன்னேன். அதைப்போலவே அவங்க வீட்ல ரெண்டு கோயிலுக்கும் போவாங்க. காலையில மாரியம்மன் கோயில்ல தாலி கட்டுவாங்க. சாயந்திரம் மாதா கோயில்ல கல்யாணம். அதே கிறிஸ்மஸ்ஸும் மாதிரி கூழும் ஊத்துவாங்க. கொண்டாடுவாங்க. மூணு பேத்திக்கு கல்யாணமாயிடுச்சி. ஒரு பேத்தி உண்டாயிருந்தா. அந்தக் குழந்தைய பார்க்கணும். அந்தக் குழந்தைய பார்த்துட்டோம்னா ரொம்ப சந்தோஷமாயிடும்னு நினைச்சுகிட்டிருந்தேன். போறும்டி பார்த்ததும்னு சொல்லிட்டு என்னை கடவுள் நெருப்புல தள்ளிட்டான். செத்தபிறகு யோசனை பண்ணேன்.

கோட்டைக்கு பின்னால கோட்டைய சுத்தி நிறைய தண்ணி போகும். வெள்ளைக்காரங்களெல்லாம் காலையில்



மீன் பிடிப்பாங்க. நாங்க என்ன பண்ணுவோம். பொழுது சாஞ்சதும் குளிக்கப்போறோன்னு கீழ இறங்கி ரெண்டு கரைக்கும் புடவைய விரிச்சு ஒரே அள்ளு அள்ளுவோம். இருவது முப்பது மீன் பிடிப்போம், அங்கேயே நெருப்பு மூட்டி புடவையிலேயே மூட்டை கட்டி மீனை நெருப்புல துடிக்க துடிக்க வாட்டி சாப்பிடுவோம். புது மீன், அதுவும் ஆத்துமீன். வாட்டி சாப்பிடறபோது அத்தினி ருசியா இருக்கும். எப்படி மீனை நெருப்புல போட்டு உயிரோட வாட்டினேனோ அதே மாதிரிதான் எனக்கும் நடந்தது. கறிசாப்பிடலாம். தப்பில்லை. சாப்பிட்டால் மறுபிறவி உண்டு.

நீ இங்க கொடுக்கும்போதே பார்த்தேன். எல்லா தொழிலாளிக்கும் வாரி வாரி கொடுக்கறதும் சாப்பாடு போடுறதும், சாப்பாடு போடறதுக்கு பெரிய பாத்திரம் கொண்டு வரதும். என்னா, அந்த சாப்பாட்டை கொண்ணாந்து எனக்கு வச்சிட்டு போயிருந்தா நல்லாயிருக்கும். சரி, போனா போகுது. உழைக்கிறவங்களுக்கு சோறு போடறா மாதிரி புண்ணியம் எதுவுமில்லை. அதைவிடப் புண்ணியம் உனக்கு, உழைக்கலைன்னா கூட தெருவுல போறவனை கூப்ட்டு வந்து சாப்பிடுன்னு சொல்றது, சோறு வாரிப் போட்டா யாரும் சோம்பேறி ஆயிட மாட்டாங்க. ஒருத்தன் சோம்பேறி ஆகற அளவுக்கு சோறு போடறதுக்கு உன்னாலயோ, இந்த உலகத்துல வேற எவராலேயோ முடியாது.

உலகத்துல யாரும் சோறு மட்டுமே சாப்பிட்டுக்கிட்டு இருக்க முடியாது. அவன் அவனுக்கு உண்டான வேலையை செய்துதான் ஆவான். அவனுக்கு ஒரு வேலையும் இல்லை. சாப்டுட்டு தூங்கறான். தூங்கிட்டு பேசறான்னா பேசறது அவன் வேலை. அதை நீ என்ன தீர்மானம் பண்றது. ஊர்ல

இருக்கற அத்தனை பேரும் ஓடி ஓடி உழைச்சு நிறைய சம்பாதிச்சுட்டா சரியா வந்துடுமா. சண்டை தான் வரும். நண்டு கொழுத்தா வளையில தங்காதுன்னு இதைத்தான் சொல்வாங்க. சாப்பாடு இல்லாத ஊரும் சண்டைக்கு வரும். நல்லா சாப்டுட்டு சுறுசுறுப்பா இருக்கற ஊரும் சண்டைக்கு வரும்.

வெள்ளைக்காரன் ரொம்ப சுறுசுறுப்பு. அதான் ஊர் ஊரா தேடி உள்ளுக்குள்ள புகுந்து நானூறு ஐந்நூறு வருஷம் சண்டையிலேயே கழிச்சான். என்னா ஆச்சு. அவனை மாதிரியே இன்னொரு சுறுசுறுப்புக்காரன். கிளம்பி அவன் ஊரைப் பிடிச்சு உலுக்கினான். ஜனங்க செத்ததுதான் மிச்சம். சாப்டுட்டு தூங்கறது. தூங்கிட்டு சாப்பிடறது ஒரு தபஸ். எல்லாராலயும் இருக்கமுடியாது. என்னா வேகமா வேலை செய்தோம்னு உன்னை நீயே பாராட்டிக்காத. எல்லாம் மேல தீர்மானம் பண்றாங்க. இவன் சுறுசுறுப்பாக இருக்கட்டும். இவன் சோம்பேறியா இருக்கட்டும். அவன் பாதி சோம்பேறி. இவன் பாதி சுறுசுறுப்பு. அப்படின்னு தரம் பிரிச்சு அனுப்பியிருக்காங்க. அதை தெரிஞ்சுக்காம தோள் தட்டற முட்டாள்தான் சீக்கிரம் செத்துப் போவான். வெயில், மழை, பனின்னு பார்க்காத அரபு தேசத்துலேர்ந்து துருக்கன் பெண்டாட்டி புள்ளைங்கள விட்டுட்டு இவ்ளோ தூரம் வந்தான். அவன் ஊர்ல நாலஞ்சு கட்டிட்டு அப்போன்னு விட்டுட்டு வந்தான், இந்த ஊர் பிடிச்சு இங்கயும் நாலஞ்சு கட்டிக்கிட்டான். அதையும் விட்டுட்டு இன்னும் இந்தப் பக்கம் வந்தான். என்னத்த கண்டான் இங்க. இங்க வந்து செத்துப் போனான்.

அவன் புடிச்சு பிடிங்கித் தின்ன அவனை கொள்ளையடிக்க இன்னொருத்தன் கப்பல்ல வந்து இறங்கினான். கடைசியா வந்த வெள்ளைக்காரன் நின்னானா



அவனும் நிக்கலை. அவங்க ஊர்ல சண்டை, இங்க போட்டது போட்டபடி போயிட்டான். என்னாச்சு. சாப்டுட்டு சாப்டுட்டு தூங்கினவன் சௌக்கியமா இருக்கான். வந்தவங்க எல்லாரும் காணாத போயிட்டாங்க. நானூறு வருஷம் கோடிக்கணக்கான ஜனம் சண்டை போட்டு உயிரை விட்டு ஊர் பிடிச்சு என்னாச்சு. எடுத்துக்கிட்டா போனீங்க. இல்லியே. எங்க ஊரு எங்ககிட்டதானே இருக்கு. இருக்க வேண்டிய இடத்துல இருந்தா எல்லாம் சௌக்கியமா இருக்கலாம். இடம் மாறிப் போறபோது வாழ்க்கை தடம் மாறி போகுது. உன் இடம் எது. கட்டடம் கட்டறதா. சரி, கட்டு. முப்பத்தி நாலு வயசாச்சே. உனக்கொரு இடம் வேணாமா. உன் அண்ணனோ தம்பியோ காப்பாத்திடுவானா, நீ கொடுக்கற வரைக்கும் சோறு போடுவானுங்க. அப்புறம் உன்னை நிஜமாவே மரியாதையா நடத்தற ஆள் உனக்கு வேணாமா. ஆம்பளைங்கள கண்டா புடிக்கலைன்னுதானே ஒதுங்கியிருக்க. இதோ நான் ஏற்பாடு பண்றேன்.

இந்த இடத்தை இடிக்கறதுக்கு ஒருத்தன் வந்தான். அவனும் மிரண்டு போய், நான் யாரு... நான் யாருன்னு என்னை விசாரிச்சான். நான் அவங்கிட்ட அதிகமா பேசலை. நம்பாதவங்ககிட்ட என்னா பேச்சு வேண்டிகிடக்கு. சொல்லு என்னை நம்பறியான்னு சொல்லு.''

சம்பூர்ணம் பதில் சொல்ல மறுத்தாள். இடிந்துபோய் கோவிலுக்கருகே தரையில் உட்கார்ந்தாள்.

''நீங்களெல்லாம் இருக்கச் சொல்ல உலகத்துல இத்தனை கஷ்டம் இருக்கே. அது ஏன்?''

''உலகத்துல என்ன கஷ்டம் கண்ணு இருக்கு?''

''அடிதடி, கொள்ளை, கொலை, ஜாதி வித்தியாசம் பொம்பளைங்களை தொந்தரவு பண்றது, குழந்தைங்கள விக்கறது. என்னா இல்லை.''

''உலகத்துல கெடுதல் மட்டுமே இருக்கா கண்ணு. நல்லது இல்லியா. இத்தினி கிடுகிடுன்னு சொன்னீங்களே. ஒரே மாதிரி நல்லது சொல்ல மாட்டீங்களா? இந்த ஊர்ல கல்யாணம் காட்சி நடக்கலையா? வியாதியில படுத்து படுத்தவள் சொஸ்தமாயி எழுந்து வரலையா? இல்லை, பிளாட்பாரத்துல தூங்கிக்கிட்டிருந்தவன் பெரிய பங்களா கட்டி நல்லபடியா வாழலையா? மூணு வருஷமா மழை பெய்ஞ்சு வெயில் கொளுத்தியிருந்தது. பளார்னு நல்ல மழை பெய்ஞ்சு பூமியை குளிர பண்ணலையா? நெல்லு விளையலையா. கரும்பு விளையலையா? துவரையும், உளுத்தமும் விளையலையா? எல்லாம் கருகியா போச்சு. மண்ணா தின்றீங்க. இன்னியவரைக்கும் எல்லாம் நல்லா நடக்குதே, அதுக்கு யார் காரணம். நீயா? உன் அரசாங்கமா? இல்லை. தலைக்கு மேல நல்லவங்க நிறைய பேர் இருக்காங்க. ஐயோ... ஜனம் கஷ்டப்படுமேன்னு மழை கொண்டாருவாங்க. ஐயோ... பயிர் பச்சைய பாதுகாக்கணும்னு பூச்சி விரட்டுவாங்க, பையன் கெட்டுப் போறானேன்னு வழி திருப்பறவங்க. இப்படி பச்சையா, மஞ்சளா, வெள்ளையா எதிர்க்க நின்னாதான் புரியும் இல்ல. சிலருக்கு எதிர்க்க வந்தாலும் புரியலையே. என்னாத்த பண்றது. இன்னொரு கேள்வியும் கேட்டுட்டியே. நீங்களெல்லாம் இருக்க சொல்ல ஏன் இவ்வளவு கெடுதல் நடக்குதுன்னு. நாங்க நல்லதுதான் பண்றோம், அந்த நல்லதை தாண்டி நீங்கதான் உங்களுக்கேதான் கெடுதலை பண்ணிக்கிறீங்க.''

''எல்லாங்கிடக்க என் முன்னால ஏன் வந்தீங்க? எதுக்கு இப்படிப் பேசினீங்க? நான் என்னா பண்ணணும்?''

''இது நல்ல கேள்வி. நீ சோறு போடறதும், இருக்கற ஜனத்தை நல்லபடியா பேசி வேலை வாங்கறதும் எனக்கு



பிடிச்சிருந்தது. வேலை செய்யறவன் வயித்துல அடிச்சு ஏமாத்தி அவன் துட்டை பிடுங்கி தின்ற பன்னாடைங்களுக்கு நடுவுல நீ அள்ளி அள்ளி கொடுத்த. அத்தினி பேரும் வாயார உன்னை வாழ்த்திதான் சாப்டானுங்க. மகராசி... மகராசின்னாங்க. அவங்க சொல்ல சொல்ல, யார் அந்த மகராசின்னு நான் பார்க்க வந்துட்டேன். பார்த்தா, நீ மகராசின்னுதான் தெரிஞ்சு போச்சு. சொல்லு, கல்யாணம் கட்டிக்கிறியா?''

''ஏன், நான் இப்படியே இருந்துடறனே.''

''இருக்கக்கூடாதுடி. இப்போ இடுப்புல கொழுப்பும், முலையில திமிரும், புத்தியில பரபரப்பும் இருக்கும். அம்பது வயசுக்கப்புறம் சட்டுனு வடிஞ்சு கீழ விழுந்துரும்டி. எதுவுமே பண்ணாத காலையில எழுந்திருக்க சொல்ல இடுப்பு நோவும். தலை சுத்தும். பேச்சு குழறும். அப்போ யாராவது கூட துணைக்கு இருந்தா நல்லாயிருக்குமேன்னு தோணும். எனக்கு என்னா பாருங்க அப்படின்னு சொல்லி ஒருத்தன் நெத்தியில கைவச்சு பார்த்தாலே பாதி வியாதி குணமாயிடும். நெத்தியில கை வச்சு பார்க்கறதுக்கு ஆள் இல்லைன்னா இருக்கற வியாதி ரெண்டா பெருகும். அது தவிர அவனுக்கும் நல்ல ஆள் வேணும்டி. ரொம்ப நல்ல பையன். உன்னை மாதிரி புரிஞ்ச பொம்மனாட்டி கிடைச்சா அவன் இன்னும் நல்ல உசரத்துக்கு வந்துடுவான்.''

''என்னை புரிஞ்சிப்பானா?''

''இல்லைன்னா ஏண்டி உங்கிட்ட அவனைப் பத்தி பேசறேன். அவன் எல்லாரையும் புரிஞ்சுக்கணும். எல்லாத்தையும் புரிஞ்சுக்கணும்னு பேசறவன்.''

''உனக்கு வேற வேலை கிடையாதா?''

''இதாண்டி வேலை. இதைவிட பெரிய வேலை என்னா இருக்கு. ரெண்டு நல்லவங்களை சேர்த்துவச்சா இன்னும் ரெண்டு நல்லவங்க பூமியில வரமாட்டாங்களா. அதுக்குத்தாண்டி செய்யறது. சரி, உனக்கு ஆம்பளை துணை வேணுமா, வேணாமான்னு சொல்லு?''

''நீ சொல்லேன். எனக்கு ஆம்பளை துணை வேணுமா வேணாமா?''

சம்பூர்ணம் வேகமாகச் சொன்னாள்.

''உள்ளுக்குள்ள ஆயிரம் ஆசை வச்சுட்டிருக்க. வேணாத என்ன. அதான் பட்டவர்த்தனமா பச்சையா மூஞ்சி முழுக்க தெரியுதே.''

''என்னா தெரியுது?''

''ஒவ்வொரு மூஞ்சியிலயும் ஒவ்வொரு விதமான நிறம் வரும். உன் உடம்புலேர்ந்தும் வரும். கோபமா இருந்தா சிவப்பு. துக்கமா இருந்தா நீலம். காமமா இருந்தா பச்சை. உனக்குள்ளேயிருந்து எல்லா வர்ணமும் வருது. வீட்டுக்குப் போய் தூங்கிட்டு நாளைக்கு வா. அவனும் வருவான். ஏதாவது எனக்கு படையல் எடுத்துக்கிட்டு வருவான். உனக்கு தோணிச்சுன்னா ஏதாவது எடுத்துக்கிட்டு வா.''

அந்தக் கிழவி நடந்து மறைந்தான்.

சம்பூர்ணத்திற்கு அதிர்ச்சியாக இருந்தது.

'யாரது... யாரது' என்று மனதுக்குள்ளேயே புலம்பினாள்.

வீட்டிற்குப் போனாள். அன்று இரவு தூக்கமில்லாத இரவாக இருந்தது. அடிக்கடி முகத்தை கழுவிக் கொண்டாள். விடியற்காலை சிறிது நேரம் தூங்கினாள். எழுந்திருந்து



அந்தக் கிழவிக்கு ஏதாவது கொடுக்க வேண்டுமே என்ற எண்ணத்தோடேயே பல் தேய்த்தாள்.

அவளுக்கு சமைத்துப் பழக்கமில்லை. திராட்சையும் முந்திரிப் பருப்பும் கலந்து எடுத்துக் கொண்டாள்.

கோவில் நோக்கி ஸ்கூட்டரில் பறந்தாள். திராட்சையும் முந்திரிப் பருப்பும் பரப்பினாள்.

''நான் சமைச்சு எடுத்தாந்து அதை நீ என்னாத்துக்கு சாப்பிடணும். அது தண்டனை. அதனாலதான் இதை கொண்ணாந்துட்டேன். நீ சாப்பிடுவியா?''

வெறும் செடியை நோக்கிப் பேசினாள்.

உள்ளே ஏழாவது மாடியில் சிரிக்கின்ற சப்தம் கேட்டது.

அங்க இருக்காங்களோ என்று மேடை விட்டிறங்கி வேகமாக படிக்கட்டுகளில் ஏறி கண்ணாடி கதவு திறந்து லிஃப்டை கீழே வரவழைத்து, வந்ததும் கதவு திறந்து மேலேறி ஏழாவது மாடிக்குப் போனாள். ஏழாவது மாடி காலியாக இருந்தது. இன்னும் வேலை முடியாத வண்ணமாக, இன்னும் பத்து நாளில் எல்லாமும் முடிந்து விடுமென்ற நிலையில் இருந்தது.

அங்கிருந்து ஏதோ ஒரு உணர்வு வந்து எட்டிப் பார்த்தாள்.

கீழே கிழவி நின்றுகொண்டிருப்பது தெரிந்தது.

ஒரு ஆட்டோ வந்தது. ஆட்டோவிலிருந்து ஒரு இளைஞன் இறங்கினான். ஒரு மத்திம வயது ஆள் மறு பக்கம் கம்பி தாண்டி இறங்கினான். இரண்டு பேரும் வந்து, ஆட்டோ டிரைவரும் ஒரு பெரிய அண்டாவை தூக்கிக் கொண்டு வந்து கோவில் முன்பு இறக்கினார்கள்.

அண்டா கரி படிந்திருந்தது. மேலே மூடி போட்டிருந்தது. மூடியை விலக்கி வைக்க, மேலிருந்து பார்த்தாள்.

ஏதோ குழம்பு சாதம். மிக மெல்லியதாய் ஒரு நறு மணம் மூக்கில் நிமிண்டியது. கிழவி அவர்களோடு பேசுவது தெரிந்தது.

மறுபடியும் ஓடினாள். லிஃப்ட் கீழே போயிருந்தது. வருவதற்கு தாமதமாயிற்று. மடமடவென்று படியிறங் கினாள். படியிறங்கி தரைப் பகுதிக்கு வந்து அங்கிருந்து கோவில் நோக்கி நகர்ந்தாள்.

கோவிலில் அந்த இளைஞனும், அந்த ஆள் மட்டுமே நின்றிருந்தார்கள். அவள் வந்து நின்றதும் திரும்பிப் பார்த்தார்கள்.

''இதோ வந்துட்டாங்களே.'' அந்த இளைஞன் அவளைப் பார்த்துக் கூவினான்.

அவள் அந்த இளைஞனையே பார்த்தபடி இருந்தாள்.

''உன்னைத்தான் சொன்னாங்க, இங்க இருக்கற அம்மா.''

''ஏன் போயிட்டாங்க?''

''போறுமாம். சாப்பிட்டாச்சாம். ஒருத்தருக்கு ஒருத்தர் பார்த்து பேசிப் புரிஞ்சுக்கோங்கன்னு சொன்னாங்க, வாங்க குழம்பு சாதம் சாப்பிடறீங்களா?'

''அந்தம்மாக்கு கொடுக்கலை.''

''சுடச்சுட கொதிக்க கொதிக்க உள்ளுக்குள்ள கையை விட்டு ஒரு வாய் சாப்டுட்டுதான் போச்சு.''

''முந்திரிப் பருப்பு திராட்சை வச்சேனே.''

''அப்படியே பொட்டலமா எடுத்துக்கிட்டு போயிடுச்சி.''



''ஏன்?''

''எங்கயாவது உட்கார்ந்து சாப்பிடுமாம். சொல்லிட்டே போச்சு.''

அவள் சந்தோஷமானாள்.

''நான் கொண்டாந்தேன் அதை'' என்று அவனிடம் சொன்னாள்.

''சொன்னாங்க. நீங்க கொண்டாந்தீங்கன்னுதான் சொன்னாங்க.''

குழம்பு சாதம் சூடு தாங்காமல் கைமாற்றிக் கொண்டாள். கொண்டு போய் கோயில் மேடையில் வைத்தாள். மெல்ல காற்றில் ஆறட்டும் என்று விலக்கி வைத்தாள். ஒருபிடி வாயில போட்டுக் கொண்டாள். குழம்பு சாதம் ருசியாக இருந்தது.

அதற்குள் அந்த ஆள் போய் தொழிலாளர்களை கூட்டிவர, மறுபக்கத்தில் இருந்த தொழிலாளர்கள் சட்டை போட்டுக் கொண்டும். தலைப்பாகையை சுழட்டி தோளில் போர்த்திக் கொண்டும், கோவில் நோக்கி வந்தார்கள்.

எல்லோருக்கும் இலை தரப்பட்டது. சோறு பரிமாறப் பட்டது.

''என் பேரு தீனதயாளன். உங்களைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி அந்தம்மா சொன்னாங்க. உங்களுக்கு எதுனா அபிப்பிராயம் இருக்கா?''

''அபிப்பிராயம்னு எதுவும் இல்லை. அந்தம்மா சொன்னதுனால எனக்கு செய்துகிட்டா என்னன்னு தோணுது. தலைக்கு மேல இருக்கறவங்க, நமக்கு நல்லது பண்ணணும்னு இருக்கறவங்க, நமக்கு தப்பு சொல்வாங்களா. பண்ணிக்கிட்டா நல்லா இருக்கும்னு தோணுது.''

'அவங்க சொன்னதுக்காக அவசரப்பட வேணாம். அடுத்தது நீங்களும், நானும் சேர்ந்து ஒரு புராஜெக்ட் ஆரம்பிப்போம். உங்க வேலை கட்டறது. என் வேலை இடிக்கறது.நம்ம ரெண்டுபேர் வேலையும் எப்படி ஒத்துப் போவுதுன்னு பார்ப்போம். என் வேலையை நீங்க புரிஞ்சுக்கோங்க. உங்க வேலையை நான் புரிஞ்சுக்கறேன். சமைக்கறதோ, சோறு பொங்கறதோ வேண்டாம். அதுக்கு வேற ஆள் பார்த்துக்குவோம். சம்பளத்துக்கு கொண்டாந்து வச்சுக்குவோம். நிறைய வேலை செய்து, நிறைய சம்பாதிச்சு நிறைய பேருக்கு உதவி செய்யறதுதான் நம்ம வேலை. உங்க வீடு பத்தி தெரிஞ்சுக்கறேன்.''

ரத்தினம் சாம்பார் சாதம் அள்ளி கொடுத்துக் கொண்டிருக்க, அவர்கள் இருவரும் மேடையில் அமர்ந்து பேசினார்கள்.

அவனைவிட அவள் நாலு வயது பெரியவளாக இருந்தாள். ஆனால், அவனைக் காட்டிலும் துடிப்பாக இருந்தாள்.

''இன்னொரு பில்டிங் இடிக்கணும்னு சொல்றாங்க. போய் பார்ப்போமா.''

அவர்கள் போய் கேட்ட நேரம், அந்த இடத்தினுடைய சொந்தக்காரன் நின்றிருந்தான்.

இடிப்பதற்கும் கட்டுவதற்கும் ஒரே காண்ட்ராக்டர் பேசப்பட்டு ஒரு கொட்டேஷன் சொல்லப்பட்டு, அது விவாதிக்கப்பட்டது.

இவர்கள் இரண்டு பேரும் அங்கு ஆட்டோவில் போய் இறங்கி ஓரமாக நின்று பார்க்க, என்ன என்று விசாரிக்க. கட்டடக் காண்ட்ராக்டர் என்றும், கட்டடம் இடிப்பவர் என்றும் சொல்லப்பட்டது.



அவர்கள் அழைத்து விசாரிக்கப்பட்டார்கள்.

அவள் கட்டிய கட்டடத்தையும் அவன் இடித்த கட்டடத்தையும் கொண்டு போய் காண்பித்தார்கள்.

'சப்-காண்ட்ராக்ட்தானே பண்ணியிருக்கீங்க. இது வரைக்கும் காண்டராக்டே பண்ணலையையே.''

''எல்லாருக்கும் ஒரு நாள் காண்ட்ராக்ட் ஆரம்பிக்கும் சார்! இதுவரைக்கும் பண்ணலைங்கறதுனாலயே எனக்கு ஒண்ணும் தெரியாதுன்னு அர்த்தம் இல்லை. அவங்க துணையில்லாத கீழ நான் இருபது பில்டிங் பண்ணியிருக்கேன். எனக்கு ஒண்ணும் புதுசு இல்லை சார் பில்டிங் பண்றது.''

''எனக்கு இன்னும் எம்.எம்.டி.ஏ. சாங்ஷன் வரலை. ஒரு மாடி கட்டுங்க போதும். ஆனா நாலு மாடிக்கு அஸ்திவாரம் போட்ருங்க. சாங்ஷன் வந்ததும் பார்த்துக்கலாம்.''

''சொல்லுங்க சார். சாங்ஷன் நான் வாங்கித்தரேன்'' என்று அவள் பேச, அவர் உற்சாகமாக தலையசைத்தார்.

''கட்டுங்க பார்க்கலாம். சாங்ஷன் வாங்கறது எனக்கு ஒன்றும் கஷ்டமில்லை.''

அவன் கட்டட.ம் இடிப்பதற்குண்டான விலையைச் சொன்னான்.

''இது போதுமா?'' என்று கேட்டார்கள்.

''இதுக்கு மேல எது கொடுத்தாலும் அதிகம்தான். இதுலயே எனக்கொரு மார்ஜின் நிக்குது'' என்று சொன்னான்.

அவர்கள் இதுவரை தாங்கள் அநியாயமாக கொடுத்திருப்பதை வாய்விட்டுச் சொன்னார்கள். இன்னும் இரண்டு பில்டிங் வாங்கப் போவதாகச் சொன்னார்கள்.

அவனையே தாங்கள் வேலைக்கு உபயோகப்படுத்திக் கொள்வதாகச் சொன்னார்கள். நல்ல நாள் பார்த்து அவன் இடிக்கத் துவங்கினான்.

அவள் வந்து நின்றாள்.

என்ன கட்ட வேண்டும் என்பதை சொந்தக் காரர்களோடு பேசி விவாதித்தாள்.

''கீழ மேல ரெண்டு இடத்துலயும் கோடவுன். அதுக்கு மேல ஆபீஸ். இந்த ரெண்டு கோடவுனையும் கட்டிக் கொடுத்துட்டா போதும், ஆபீஸ் பின்னால கட்டிக்கலாம்'' என்று சொல்ல, அவள் அவனை வேகமாக இடிக்கச் சொன்னாள்.

அதே ஆட்கள் மறுபடியும் இங்கு வந்து இடிக்கத் துவங்கினார்கள்.

''கல்யாணம் பேசிட்டோம். வேலையில இறங்கிட்டோம். ஆனா, இதைத் தாண்டி நமக்கு வேற ஒண்ணுமே செஞ்சுக்க முடியலை பார்த்திங்களா!''

''அப்படித்தான். வேலைன்னு இறங்கிட்டா வேற எதுவும் ஓடாது. வேற எதுக்காகவாவது கல்யாணம் பண்ணிக்கறவன் வேலையை தொந்தரவு பண்ணிக்குவான். உங்களுக்கும் வேலை முக்கியம். எனக்கும் வேலை முக்கியம். அதனால வேலையை தவிர வேற எதுவும் பேசலை. இந்த வேலையை முடிச்சுடுவோம். முடிச்சுட்டு பேசுவோம். எல்லாவிதமாகவும் இருப்போம்.''

அவன் அவளோடு கைகுலுக்கினான்.

அப்பாவிடம் போய் அவளைப் பற்றி விவரித்தான். மகேஸ்வரிக்கு கொண்டுபோய் அவளைக் காட்டினாள்.

மகேஸ்வரி, சம்பூர்ணத்தோடு பேசினாள்.



ஏழுமலை நாயக்கரிடம் போய், நல்ல பொண்ணு என்று சொன்னாள்.

ரத்தினத்தை மேஸ்திரியாக வைத்து அந்தக் கட்டடத்தை இடிக்கத் துவங்கினான். ஒவ்வொரு முறை இடிக்கும் பொழுதும் அந்தக் கிழவி வருவாளோ என்று காத்திருந்தான். மாலை நேரங்களில் சுற்றி வந்தான்.

இன்று மத்தியானம் அப்பாவை நினைத்து, கடவுளை நினைத்து சோறு சாப்பிடுகையில் எதிரே கல் சரசரவென்று சரிந்து விழுந்தது.

கல்லு இப்படிச் சரியாதே என்று பயத்தோடு எட்டிப் பார்க்க, கிழவி பின்பக்கமுள்ள இடித்த வாசற்படியிலிருந்து நடந்து வந்தாள். அவன் எதிரே வந்து உட்கார்ந்தாள். கை நீட்டினாள்.

''வாங்க. பார்த்து ரொம்ப நாளாச்சே.''

தீனதயாளன் சிரித்தான்.

அவள் கையில் சோறு வைத்தான்.

''ஏண்டா இன்னும் கல்யாணம் கட்டலை''

''மொள்ள கட்டிக்கலாம். கட்டமாட்டேன்னு நான் சொல்லலையே.எங்க ரெண்டு பேருக்கும் எங்க வேலைங்க தோதா வருதா அப்படின்னு தெரிஞ்சுக்கணும். அதுல தோதா வந்துருச்சுன்னா மத்த எல்லா விஷயமும் சரியாக வரும்னு நாங்க காத்துக்கிட்டிருக்கோம். வேலை முடிச்சதும் கல்யாணம் செய்துப்போம்.''

''எப்போ இந்த வேலை முடியும்?''

''இன்னும் நாலு மாசத்துல முடியும்.''

''இங்க வா!'' அவனை வரச்சொல்லி நகர்ந்தாள்.

அவன் கை உதறி மேல்துண்டால் கையைத்துடைத்துக் கொண்டு அவள் பின்னே போனான். அருகம்புல் மேட்டில் நின்றாள்.

''இந்த இடத்துல மூணு அடி ஆழம் தோண்டினா சின்ன இரும்புப் பெட்டி கிடைக்கும். அந்த இரும்புப் பெட்டிக்குள்ள மெழுகு ஊத்தியிருக்கும். அந்த மெழுகை உருக்கி எடுத்தா உள்ளுக்குள்ள தங்க நகைங்க இருக்கும்.''

''யாருது நகைங்க?''

''என்னுதுதாண்டா. என் நகைதான். எடுத்துக்கிட்டு போய் உன் பொண்டாட்டிகிட்ட கொடு. இல்லை. வித்து வேற எதுனா செலவு பண்ணு.''

''எவ்ளோ இருக்கும்.''

''நிறைய இருக்காது. எழுவத்தொம்போது சவரன் இருக்கும். சாவறபோது எங்கிட்ட இருந்தது அது. ஒரு நாள் இல்லை, ஒரு நாள் இவங்க எதுனா தொந்தரவு பண்ணு வாங்கன்னு தெரிஞ்சு நான் பொட்டியில வச்சு பூட்டி யிருந்தேன். மெழுகு போட்டு மறைச்சிருந்தேன். அருகு சாகவே சாகாதுடா. அருகு சாவாத மாதிரி நல்ல உறவும் சாவாது.''

''உனக்கும் எனக்கும் உறவா. அருகம்புல் மாதிரி உறவா? ஏன் இத்தினி செய்யற எங்களுக்கு?''

அவன் ஆவலோடு அவள் எதிரே வந்து கேட்டான்.

''உங்களுக்கு நல்லது பண்ணதான்டா நான் இருக்கேன்.''

''ஏன்? ஏன் நல்லது பண்ணணும்? எனக்கு மட்டும் பண்றியா, இல்லை அவளுக்கும் சேர்த்து பண்றியா?''

''உங்க ரெண்டு பேருக்கும் சேர்த்துதான் பண்றேன்.''

''எதுக்காக பண்ற?''

''ஒரு காரணமாத்தாண்டா.''

''என்னான்னு சொல்லேன்.'' அவன் கெஞ்சலாகக் கேட்டான்.



''என்னை எரிச்சது நீயும் அவளும். இருவது பொண்ணுங்களுக்கு நடுவுல தூண்டிவிட்டு கூப்பிட்டு வந்து எரி, எரி, எரிச்சுக் கொல்லு அவளைன்னு சொன்னது நீ. எரிச்சது அவ. இதுதான்டா கடைசி ரெண்டு பேர் மத்தவங்க எல்லாருக்கும் நல்லது பண்ணி நல்ல வழிகாட்டியிருக்கேன். உங்களுக்கும் பண்ணினேன்டா, நீங்க ரெண்டு பேரும் ஒண்ணா சேர்ந்து உலகத்துக்கு நல்லது பண்ணிக்கங்கடா. மேல வந்துருவிங்க. அதுக்காகத்தான் பண்ணேன். எனக்கு கெடுதல் பண்ண அத்தினி பேருக்கும் நான் நல்லது பண்ணிட்டேன்டா. மனுஷனா இருக்கும் போது நல்லது பண்றதுக்கு முடியலை. மனசு தடுக்குது. இந்த மாதிரி வந்துட்டோம்னா நல்லதுதான் பண்ணித்தீருவேன்னு உள்ளுக்குள்ள ஒரு வெறி வந்துடுது.''

''நான் எரிச்சனா உன்னை?''

''அதுவும் முடிஞ்சு போச்சு. எப்பவோ எரிச்ச. இப்போ என்னாத்துக்கு.''

''நான் பதிலுக்கு நல்லது பண்ண வேணாமா?''

''எனக்கு பண்ண வேணாம்டா. ஊருக்கு பண்ணு. உழைக்கிற அத்தினி தொழிலாளர்க்கும் பண்ணு. தொழிலாளி குழந்தைங்களுக்கு பண்ணு. மேஸ்திரி பையன்களையும், கொலுத்துக்காரனையும், கூலி வேலை செய்யற பொண்ணையும் படிக்க வை. துணிமணி வாங்கிக் கொடு. புடவை வாங்கிக் கொடு. வெறும் சோறு போடாத. குடிக்கறதுகக்கு நீர் மோரும் அப்பப்போ சாப்பிடறதுக்கு பழமும் வாங்கிக் கொடு. இந்தக் கட்டடம் அற்புதமாவரும். இது யாரும் இல்லாத நேரம் தோண்டு. தோண்டி எடுத்துக்கோ.''

அவன் அருகம்புல்லை விலக்கிவிட்டு கடப்பாரையை இறக்கினான். வேகமாகக் குத்தினான். மண் எளிதாகப்

புரண்டது. உள்ளிருந்து பெட்டியை எடுத்து வைத்தான். திறந்தான். உள்ளே மெழுகு ஊற்றியிருந்தது. அடித்து கவிழ்த்தான். மெழுகு மெல்ல இளகத் துவங்கியது. உள்ளுக்குள் பச்சை பூத்த நகைகள் இருந்தன. வாரி சுருட்டி வேறு பாத்திரத்தில் வைத்துக் கொண்டான்.

மறுபடி மண்மூடி மண்ணுக்கு மேல் அருகம்புற்களை புரட்டிப்போட்டு, பானையைப் கவிழ்த்து அதன் மீது ஜலம் தெளித்துவிட்டு தூக்குப் பாத்திரத்தோடு வெளியே வந்தான்.

ஆட்டோ பிடித்தான். கையில் தூக்குப் பாத்திரத்தை வைத்துக் கொண்டு ஆட்டோவிற்கு வழி சொன்னான்.

படுக்கையாய் அருகம்புல்லை பரப்பி மூடியதே திரும்பத் திரும்ப ஞாபகம் வந்தது. இது நாப்பத்தி ரெண்டாவது அருகம்புல் என்று கிழவி சொன்னது நினைவில் மோதியது.

'அருகம்புல் சாகாது. நல்ல உறவும் சாவதில்லை.' நான் இன்னும் நல்ல உறவாக ஆக வேண்டும். அவனுள் உறுதி பரவியது.

முற்றும்